விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Sri Lanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லாண்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 14 புதன்கிழமை (27.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 098

## தமிழகம் கொதிப்பு; ஜெயலலிதா கடிதம்

# ஐ.பி.எல் சென்னை போட்டிகளில் இலங்கை வீரர்களுக்குத் தடை!



(சென்னை)

சென்னையில் நடைபெறவுள்ள இந்தியன் பிறிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், இலங்கை வீரர்கள் யாரும் பங்கேற்க மாட்டார்கள் என அப்போட்டிகளை நடத்தும் நிர்வாக அமைப்பு முடிபெடுத்துள்ளது.

இது குறித்து அதிகாரபூர்வமான அறிவிப்பு போட்டிகளை நடத்தும் ஐ.பி.எல் அமைப்பின் இணையத்தளத்தில் வெளியாகியுள்ளது.

நேற்று மதியம் ஐ.பி.எல் அமைப்பின் நிர்வாகக்குழு கூடி, தமிழக முதல்வர் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதம் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் விளையாட்டு வீரர்கள், ரசிகர்கள், விளையாட்டு அரங்கத்தில் பணியாற்றுபவர்கள் போன்ற அனைவரது பாதுகாப்பும் இந்திய கிரிக்கெட் சபைக்கு மிகவும் முக்கியமானது என்றும் ஐ.பி.எல் அமைப்பின் தலைவர் ராஜீவ் சுக்லா பெயரில் வெளியிடப்பட்டிருக்கும் அந்த அறிக்கை கூறுகிறது.

இலங்கை வீரர்கள் சென்னையில் விளையாடும் போட்டிகளில் பங்குபெற மாட்டார்கள் எனும் முடிபு, ஐ.பி.எல்லிலுள்ள ஒன்பது உரிமையாளர்களுக்கும் அறிவிக்கப்படும் எனவும் ஐ.பி.எல்லின் (19ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவைப் பெற மீண்டும் முயற்சி

(சென்னை)

கச்சதீவு உடன்படிக்கையை இந்தியா திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியிருக்கிறார்.


அவ் உடன்படிக்கை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்றும் அவர் நேற்று கூறினார்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து துன்புறுத்தப்படுகின்றனர் எனக் குறைகூறி சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சிறப்பு கவனயீர்ப்புத் தீர்மானத்திற்கு பதிலளிக்கையில் அவர் தமிழக மீனவர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

# ரஷ்யாவும் சீனாவும் ஆதரவு அமெரிக்கா என்ன செய்யும்?

## பாதுகாப்பு செயலர் கேள்வி

(காலி), ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் ஆதரவாக உள்ள நிலையில், அமெரிக்கா தம் மீது பொருளாதாரத் தடை விதிப்பது சாத்தியமில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். காலியில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் விடுதலைப்புலிகள் இயக்கம் முற்றாக அழிக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களது ஆதரவாளர்களின் பரப்புரைகள் தொடர்ந்தும் பல்வேறு (20ஆம் பக்கம் பார்க்க)

## பி.பி.சி சேவை இடைநிறுத்தம்!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பண்பலை சேவை மூலம் ஒலிபரப்படும் பிபிசி வானொலி நிகழ்ச்சிகளை நேற்று செவ்வாய்க்கிழமை முதல் பி.பி.சி இடைநிறுத்திக்கொள்கிறது.

இத்தகவலை பிசிசி உலக சேவையின் இயக்குநர் பீட்டர் ஹோரக்ஸ் வெளியிட்டார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் பிபிசி தமிழோசை நிகழ்ச்சிகள் தொடர்ந்து இடையில் தடுக்கப்படுவது மற்றும் வேறு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாவது போன்றவை தொடர்ந்து நடந்ததை அடுத்து இந்த நடவடிக்கை வருகிறது.

இலங்கையில் எமது நிகழ்ச்சிகளை தொடர்ந்து கேட்டுவரும் நேயர்களுக்கு இந்த சேவை தரப்படுவதில் ஏற்பட்டிருக்கும் இத்தடை குறித்து நாங்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய மாநாட்டை எலிசபெத் மகாராணி புறக்கணிப்பார்

### இந்திய ஊடகம் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் எதிர்வரும் நவம்பா மாதம் 15ம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடை பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்கள் உச்சி மாநாட்டை பிரித்தானியா மகாராணி புறக்கணிக்க வாய்ப்புள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த உச்சி மாநாட்டில் பிரித்தானிய மகாராணி இரண்டாவது எலிசபெத் கலந்து கொள்ள மாட்டார் என்பது பெரும்பாலும் உறுதியாகி (20ஆம் பக்கம் பார்க்க)

## ராவணா சக்தி சம்பந்தனுக்கு அழைப்பு

நாட்டுக்கு எதிராக செயற்பட்டு, அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறி வரும் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனை பகிரங்க விவாதம் ஒன்றுக்கு வருமாறு அழைப்பு விடுப்பதாக ராவணா சக்தி என்ற சிங்கள அமைப்பு தெரிவித்துள்ளது.

சம்பந்தனுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அந்த அமைப்பு கோரியுள்ளது. சம்பந்தன் தொடர்பாக கடும் நடவடிக்கையை எடுக்க வேண்டும் என அந்த அமைப்பின் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜோர்தான் கப்பலை அகற்ற ஏற்பாடு

முள்ளிவாய்க்காலில் உள்ள ஜோர்தான் நாட்டுக் கப்பலை அங்கிருந்துஅகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது.

2006 ம் ஆண்டு இயந்திரக்கோளாறு காரணமாக இக்கப்பல் பழுதடைந்த நிலையில் விடுதலைப்புலிகளினால் மீட்கப்பட்டு முள்ளிவாய்க்கால் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டது.

இக்கப்பலில் பணியாற்றிய 22 மாலுமிகளும் மீட்கப்பட்டு அவர்களின் நாடுகளுக்கு அனுப்பி (19ஆம் பக்கம் பார்க்க)

## குழந்தைகள்,சிறுவர் மத்தியில் ஒருவகை காய்ச்சல் தொற்று!

### வைத்திய நிபுணர் அருள்மொழி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் ஒரு வகையான காய்ச்சல் பரவுதாகவும் இது தொடர்பில் பெற்றோர்கள் விழிப்பாக இருக்க வேண்டுமெனவும் யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி க.அருள்மொழி தெரிவித்துள்ளார்.

குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் கை, கால், வாய்ப் பகுதிகளில் கொப்பளங்கள் ஏற்படுவதுடன் கடுமையான காய்ச்சலும் ஏற்படுகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)

BANGKOK TOUR PACKAGE
3 NIGHT 4 DAYS
38,000/-
AIR TICKET + ACCOMMODATION
CONDITIONS APPLY
Call 0773629799
AiR MARK
Travels & Tours
# 212, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
Tel:- 021 222 0033 / 021 222 4777
IATA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் எமது மக்களின் வாழ்வுக்காக ஒன்றுபடுவோம்!



## ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல் அழைப்பு

(யாழ்ப்பாணம்) ஈழமக்கள்ஜன நாயகக் கட்சியின் நற்பெயருக்குகளங்கம் ஏற்படுத்தும் வகையில் தீயசக்திகளின் அநாமதேய அழைப்புக்களுக்கு செவிசாய்த்துச் செயற்படுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு பொது மக்களுக்கும், பொது அமைப்புக்களுக்கும், கட்சியின் ஆதரவாளர்களுக்கும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) வேண்கோள் விடுத்துள்ளார்.

சமகால சூழலை கருத்தில் கொண்டும், நடைபெறவுள்ள கட்சியின் தேசிய மாநாட்டுக்கான அடித்தளமிடும் வகையிலும் வெளியிட்டுள்ள விசேட செய்திக்குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சாவும், அழிவும், தாங்கொணாத் துன்பங்களையும் தாங்கி உன்னத இலட்சியப் பயணத்துடன் பல உயிர்த்தியாகங்கள், உயிர்க் கொடைகளினூடாகவே இன்று நாம் பலம் பொருந்திய ஓர் அரசியல் கட்சியாக நிலைபெற்றுள்ளோம். போரியல் மற்றும் அரசியல் சாணாக்கிய வழி முறையில் நீண்டகால அனுபவங்களுடன், நன்கு தேர்ச்சி பெற்ற எமது கட்சியை கடந்த காலங்களில் சுயலாப அரசியலுக்காகவும், கபட நோக்கத்திற்காகவும் சீர்குலைத்துவிட முயன்ற தீய சக்திகள் தோற்றுப்போன வரலாறுகளே எஞ்சியுள்ளன.

தமிழ் மக்களின் விடிவிற்காய் வீறுடன் நடந்த எம்மை பாசிசவாதம் அழிக்க முற்பட்ட போதும் எரிந்த சாம்பலில் இருந்து மீண்டெழும் பீனிக்ஸ் பறவைகள் போல விழவிழ நாம் எழுந்து தொடர்ந்தும் எமது மக்களின் அரசியல் விடிவிற்காக அயராது உழைத்து வருகின்றோம்.

எமது மக்களும் எமது கொள்கையை ஏற்று ஒருமித்த தலைமையின் கீழ் அணி திரண்டு ஆதரவளித்து வருவது எமக்கான மக்களாதரவை பறைசாற்றி நிற்கிறது.

கடந்த காலங்களில் எம் மக்கள் எமக்களித்த ஆதரவே இன்று நாம் ஆலவிருட்சமாக பல தேசங்களிலும் பரந்திருக்கின்றோம். எமக்கான கடமைகள் இன்னும் பல உண்டு. எமது கொள்கைகள், எமது இலட்சியங்கள் நிச்சயம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையுடன் தொடர்ந்தும் நாம் பயணிக்கின்றோம்.

எனவே மக்களாகிய நீங்கள் தீயசக்திகளின் கபட நோக்கங்களிற்கு பலியாகிவிடாது எம்முடன் தோளோடு தோள் கொடுத்து எமது கட்சியைப் பலப்படுத்தியவாறு நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் எமது மக்களுக்கான ஒளிமயமானஎதிர்காலத்திற்காக ஒன்று படுவோம் என மேலும் தெரிவித்துள்ளார். (ந)

# சென்னை சரவணாவில் சிங்கள விளம்பரம்

## எதிர்ப்பு ஆரம்பம்

(சென்னை)

சென்னையில் உள்ள சரவணா ஸ்ரோர் நிறுவனம் சிங்களத்தில் விளம்பரம் அச்சடித்து விநியோகித்து வருவதையடுத்து இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

சரவணா ஸ்ரோர் நிறுவனத்திற்கு சென்னை தியாகராயநகர் ரங்கநாதன் தெருவிலும், புரசைவாக்கத்திலும் கடைகள் உள்ளன.

இந்த கடைகளில் பல வகையான சிங்கள பொருட்களை விற்பதோடு இப்போது சிங்களவர்களுக்கு சந்தை விரிக்கிறது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்தக் கடைக்கு ஏராளமான சிங்கள மக்கள் பொருட்களை வாங்க வருகின்றார்கள். அப்படி வரும் சிங்கள வாடிக்கையாளர்களின் வசதிக்காக இப்போது சரவணா ஸ்ரோர் நிர்வாகம் அங்காடி பற்றிய தகவல் துண்டறிக்கையை சிங்களத்தில் அச்சடித்து மக்களிடம் கொடுக்கிறது.

தமிழில் கொடுத்தது போய் இப்போது சிங்களத்தில் கொடுப்பது தமிழ் ஆர்வலர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

கடையின் பெயர் முதற்கொண்டு கடைகளில் கிடைக்கும் பொருட்கள் மற்றும் எந்த தளத்தில் அவை கிடைக்கும் போன்ற தகவல்களை சிங்கள மொழியிலேயே அச்சடித்து சிங்கள மக்களை கவர்ந்து வருகின்றது சரவணா ஸ்ரோர் நிர்வாகம். இதனையடுத்து அங்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. (எ-11)


## விற்பனைக்கு

பாவித்த பழைய ரயர்கள் நாலுக்கு மொத்தமாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 0771933283 (2254)






## விற்பனைக்கு

நெல்லியடியில் பாவித்த கதிரை, மேசை, கட்டில், அயன்சேவ் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-0778281110 (சி-2811)


## மிதிவெடி அகற்றல் அடுத்த வருடம் நிறைவு

(கொழும்பு)

முகமாலைப் பகுதியில் மதிவெடி அகற்றும் பணிகள் அடுத்த வருடம் நிறைபெறும் என்று மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ஹலோ றெஸ்ட் தெரிவித்துள்ளது.

2012 ஆண்டு தொடக்கம் இந்தப் பகுதியில் மிதிவெடி அகற்றும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தற்போது ஏ9 வீதியின் இருமருங்கும் இந்தப் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ-11)

## இலங்கை தூதரை கண்டிக்க வலியுறுத்தல்

(சென்னை)

தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தாக்குதலை தடுக்க இலங்கைத்தூதரை அழைத்து மத்திய அரசு கண்டிக்க வேண்டும் என முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

சட்டசபையில், மீனவர் தாக்குதல் தொடர்பாக கொண்டு வரப்பட்ட சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்து பேசிய முதல்வர் ஜெயலலிதா, இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்க வேண்டும் என்றும், தமிழக மீனவர்களை இந்திய குடிமக்களாக மதித்து வலுவான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறினார். (எ-11)


## பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2828


# மரண அறிவித்தல்கள்



## வல்லிபுரம் நாகராஜா

### (ஓய்வுபெற்ற ரேடியோகிராபர்)

கிளானை, கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும், அம்பனை, சுன்னாகம் மேற்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நாகராஜா (முன்னாள் எக்ஸ்கதிராளர், பொரளை, தெல்லிப்பழை, ஓமான் வைத்தியசாலைகள்) அவர்கள் 26.03.2013 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் அன்னம்மா தம்பதியரின் மருமகனும் சாந்தினியின் (உப அதிபர், யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி) பாசமிகு கணவரும் ஆதீசனின் (2014 உயர்தரம்- கணிதப்பிரிவு, யா / இந்துக் கல்லூரி) அன்புத் தந்தையும்,

குழந்தைவேலு, காலஞ்சென்ற பசுபதி, பூரணம், பாக்கியம், வைரமுத்து, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மல்லிகாதேவி, பிரின்ஷினா, மற்றும் வன்னித்தம்பி, காலஞ்சென்ற நாகநாதன், மற்றும் அன்னலட்சுமி, சற்குணவதி ஆகியோரின் மைத்துனரும் குமுதினியின் (பிரதேச செயலகம், உடுவில்) மைத்துனரும், அரியரத்தினத்தின் சகலனும்,

திவாகரன், சிவராணி, சுதாகரன், ஆனந்தராஜ், ஆனந்தி, பத்மாசினி, தர்சினி, சத்தியசீலன் ஆகியோரின் சிறிய தந்தையும், மழவிகா, அர்ச்சகி ஆகியோரின் ஆசையப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2013) புதன்கிழமை மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

அம்பனை,
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

தகவல் :
மனைவி, மகன்

(2255)

## நாகமணி பார்வதி



புங்குடுதீவு 3-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி பார்வதி (25.03.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சடையர், சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சண்முகம், வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா, செல்லையா மற்றும் நாகேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தப்பு, குமாரசாமி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மகாலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் யோகேஸ்வரி, சத்தியபாலன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரி, சண்முகலிங்கம், குமாரதாஸ், யசோதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சந்திரகுமார்(ஜேர்மன்) சந்திரிகா(கனடா) ஜீவகுமார் (சுவிஸ்), சுத்ர்சன் (ஜேர்மன்), குகரஞ்சி, குகப்பிரியா, சங்கீத், தனுஷா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆகாஷ், அபிலாஷ், சிந்தியா, ஷோபியா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (27.03.2013) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

39/1, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்

தகவல்:
மருமகன் : குமாரதாஸ்.
மகள் : யோகேஸ்வரி.

(2257)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சிறுவர் உளவியல்

குழந்தைகள் விடயத்திலே மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பெற்றோருக்கு இது தொடர்பான விடயம் சரியாகத் தெரிவதில்லை. பெற்றோர் சரியாக இல்லையென்றால் குழந்தைகளுக்கு பலவிதமான மனோதத்துவ நோய்கள் வந்து விடும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

குழந்தைகளிடம் அன்பை வெளிக்காட்டுங்கள். வேண்டாம் என்று கூறவில்லை... அந்த அன்பு மென்மையாக இருக்கட்டும் முரட்டுத்தனமானதாக இருக்க வேண்டாம். ''என் கண்ணே!'' என்று சொல்லிக் கொண்டு பல்லை நறுமிக் கொண்டு சில பெற்றோர் குழந்தைகளிடம் போவார்கள்- அவ்வளவுதான் அழுத்தமான அன்பு.

முரட்டுத்தனமான அன்பை குழந்தைகளிடம் திணிக்கும் போது அதனுடைய உடல் கெட்டுப் போகிறது. மனதில் ஒருவகை பதற்றம் தோன்றும். உடல்நிலை சந்தோஷம் அற்று இருக்கும்.

ஒரு பன்னிரெண்டு வயது சிறுமி, அடிக்கடி மயக்கம், வாந்தி, இவ்வாறு பல நோய்கள்; பல வைத்தியரையும் நாடியும் நோய் தீருவதாக இல்லை. எந்தப் பலனும் கிடைக்கவில்லை.

இதற்குக் காரணம் என்ன என்பதை நீண்ட நாட்களுக்கு பின்புதான் கண்டுபிடித்தார்கள்.

அந்தச் சிறுமியின் பெற்றோர் அடிக்கடி சண்டை பிடிப்பார்கள். அதை அவதானிக்கும் போதெல்லாம் இந்தக் குழந்தைக்கு வாந்தி வந்து விடும்; மயக்கம் வந்து விடும். ஏதோவெல்லாம் பேச ஆரம்பித்து விடும். இரண்டு, மூன்று நாட்களுக்கு சிறுமியின் கதை மாறாது. பின்னர் படிப்படியாக சரியாகப் போய்விடும்.

பெற்றோர் சண்டை பிடிக்கும் போது பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இல்லாத உணர்வு, பயம் இவை அனைத்தும் மனதிலே தங்கி விடும். பெற்றோருக்கும் பிள்ளைக்கும் உள்ள உறவு குறையும்; அன்பு இல்லாது போய்விடும். வெறுப்புணர்வு ஏற்படும். மனநோய், உடல் நோய் இவை இரண்டும் வந்து விடும்.

இன்னொரு குழந்தை சிறுவயதிலே ஆரோக்கியமாகத் தான் இருந்தது. வாலிப பருவத்தை அடையும்போது ஆஸ்துமா நோய் அவனை பிடித்துக் கொண்டது.

ஆனால், அவர்களது குடும்பத்தில் இந்நோய் யாருக்கும் கிடையாது.

இதற்கு என்ன காரணம் என்பதை பின்புதான் கண்டு பிடித்தார்கள்.

அவனது பெற்றோரின் வன்மையான கண்டிப்பு. அவனை கட்டுப்படுத்தி வளர்க்க வேண்டும் என்று நினைத்து அதிகாரத்தை அவன் மேலே திணித்துள்ளார்கள்.

"மூடு வாயை... சத்தம் வெளியே வரக்கூடாது..." அப்படி உரத்த தொனியில் பயமுறுத்தி, அவனது அழுகையை சிறுவயதினில் இருந்து அடக்கி விட்டார்கள். அதன்பின்னர் கூட அவன் அழ வேண்டிய விடயம் ஏதும் ஏற்பட்டால் முடியாது திண்டாடுவான். மனதினுள் வேதனை முட்டிய போதும் அழ முடியாது கஷ்டப்படுவான். கண்ணிலே கண்ணீர் வெளிவராது. கடைசியிலே அது ஆஸ்துமா நோயாக உருவெடுத்தது.

ஒரு குழந்தை அழுதா... ''இதுக்கெல்லாம் போய் அழுவார்களா... இது சிறிய விடயம்'' என்று பக்குவமாக எடுத்துக் கூற வேண்டும். அதுதான் நல்லது. அதுதான் தாயன்பு.

பிள்ளையைப் பெற்றெடுத்தால் மட்டும் போதாது. அக்குழந்தையை ஆரம்பத்தில் இருந்தே அன்பாக வளர்த்தெடுக்க பெற்றோர் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு பெண் தாய்மை அடைவது என்பது கடவுளால் கொடுக்கப்பட்ட வரம். அதிலும் அறிவுள்ள பிள்ளையாக வளர்த்தெடுப்பது பெற்றோரின் கடமையாகும்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சர்வதேசத்தை ஏமாற்றவே சொத்தழிவு விபரம் கோரப்படுகின்றது- சிறிதரன் எம்.பி

யுத்தத்தினால் கொடூரமாக மக்கள் பாதிக்கப்பட்டிருந்த போது அந்த மக்களை மனச்சாட்சியே இல்லாமல் ஒரு தறப்பாளுடன் காடுகளில் இலங்கை அரசு இறக்கிவிட்டது. இன்று சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக குறித்த மக்களுக்கு நஷ்டஈடு வழங்க போவதாக கூறி நாடகமாடுகின்றது என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் சேதமடைந்த வீடுகள், உடைமைகளுக்கான நஷ்டஈடு வழங்கலுக்கான விண்ணப்பப்படிவம் ஒன்று கிளி.மாவட்டச் செயலகத்தினால் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் அவர் குறிப்பிடுகையில், கிளி/மாவட்டச் செயலகத்தினால் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நஷ்டஈடு வழங்கலுக்கான விண்ணப்பப்படிவமும் இந்த நாடகத்தில் ஒரு பகுதிதான்.

யுத்தம் நிறைவடைந்து 4 வருடங்களின் பின்னர் யுத்தத்தின் சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கும் ஒரேயொரு அரசாங்கம் இதுவாகத்தான் இருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

புனர்வாழ்வு அதிகாரசபை என்ற அமைப்பின் பெயரிடப்பட்ட விண்ணப்பப்படிவம் ஒன்று யுத்தத்தினால் சேதமடைந்த வீடுகள், உடைமைகளுக்கான நஷ்டஈடு வழங்குவதற்கென மாவட்டச் செயலகத்தினால் நேற்று முன்தினம் முதல் விநியோகிகப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்த விண்ணப்பப்படிவங்களை பொதுமக்கள் பெற்று பூரணப்படுத்தி நாளை வியாழக்கிழமை மீளளிக்க வேண்டும். ஆனால் அந்த விண்ணப்பப்படிவத்தில் காணி உறுதி, பிறப்புச் சான்றிதழ், வாக்காளர் பதிவு, வங்கி புத்தகத்தின் பதிவு இலக்கம், ஏற்கனவே நஷ்டஈடு பெறவில்லை என கிராம சேவகரின் உறுதிப்படுத்தல், மொத்த அழிவு பற்றிய மதிப்பீடு மற்றும் வீடு அழிந்தமையினை உறுதிப்படுத்தும் தொழில்நுட்ப உத்தியோகஸ்தரின் அறிக்கை, பொலிஸாரின் உறுதிப்படுத்தல் அறிக்கை போன்றன கேட்கப்பட்டிருப்பதுடன் 35 ஆம் இலக்க வவுச்சர் ஒன்று போடப்பட்டு 2 ரூபா 25சதம் முத்திரையொன்றும் ஒட்டப்பட்டு அதில் சமாதான நீதவான் ஒருவரின் உறுதிப்படுத்தலும் போடப்பட வேண்டும்.

இவையனைத்தும் 4 நாட்களுக்குள் செய்யமுடியுமா? இதைவிட மாவட்டத்தில் சுமார் 4 ஆயிரத்துற்கும் அதிகமானளவு விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலையில் மாவட்டச் செயலகத்தில் விண்ணப்பப் படிவங்கள் நிறைவடை ந்து நிழல் பிரதி எடுக்கும் வர்த்தக நிலையங்களில் ஒரு படிவத்தை நூறு ரூபா கொடுத்து மக்கள் கொள்வனவு செய்கின்றனர்.

மேலும் அந்த விண்ணப்பப்படிவத்தில் 1983 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் திகதியில் இருந்து பயங்கரவாத வன்செயல்களினால் சேதமாக்கப்பட்ட வீடுகள், உடைமைகள் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ள முடியும் என குறிப் பிடப்பட்டுள்ளதுடன் சேதமாக்கப்பட்டபோது ஏன் முறைப்பாடு செய்யவில்லை என்ற காரணத்தை குறிப்பிடும் படியும் கேட்கப்பட்டுள்ளது.

எனவே இதுவொரு ஏமாற்று நாடகமாகும். ஏனெனில் கிளிநொச்சி மாவட்டத்தில் பல தடவைகள்- யுத்தமும் இடப்பெயர்வும் ஏற்பட்டது. இதனால் பல வீடுகள், பெறுமதி கணிப்பிடப்பட முடியாதளவு உடைமைகள் அழிக்கப்பட்டன. ஆனாலும் அவற்றுக்கான நஷ்டஈடுகள் எவையும் வழங்கப்படவில்லை.

ஆனாலும் மக்கள் தங்களது சொந்த முயற்சியினால் வீடுகளை மீளக்கட்டிக் கொண்டதுடன் சிறியளவி லேனும் உடைமைகளைதேடிக் கொண்டனர்.

இந்நிலை தான் 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் பின்னர் மீள்குடியமர்ந்த பிரதேசங்களில் ஏற்பட்டுள்ளது. அதாவது மக்கள் தங்கள் வீடுகளையும் உடைமைகளையும் தேடிக்கொண்டனர்.

எனவே நியாயமாக நஷ்டஈடு வழங்கும் அரசாங்கம் யுத்தம் நிறைவடைந்து மக்கள் தங்களது வாழ்விடங்களுக்குத் திரும்பியவுடன் தகவலுக்கா வேணும் அழிக்கப்பட்ட வீடுகள், உடைமைகள் பற்றிய தகவலை திரட்டியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் யுத்தம் நிறைவடைந்து 4 வருடங்களின் பின்னர் இந்த நாடகத்தை ஆடுகின்றது. விண்ணப்பத்தில் கேட்டிருக்கும் தரவுகளை ஆதாரங்களுடன் வழங்குவது தற்போதுள்ள நிலையில் பெருமளவு சாத்தியமில்லை. எனவே அரசாங்கம் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக இந்த நாடகத்தை ஆடுவதாக அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 180 | 120 | 120 | 140 |
| தக்காளி | 120 | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 40 | 50 | 40 |
| கோவா | 80 | 30 | 60 | 60 |
| கரட் | 120 | 100 | 120 | 100 |
| பூசணி | 80 | 40 | 60 | 70 |
| புடோல் | 80 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 40-70 | 70-100 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 100 | 80 |
| பாகற்காய் | 160 | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 80 | -- | 80 |
| பயற்றங்காய் | 100 | 90 | 60 | 100 |
| லீக்ஸ் | 120 | 110 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 60 | 100 | 80 |
| கறிமிளகாய் | 140 | 110 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 600 | -- |
| போஞ்சி | 160 | 170 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 60 | -- |
| கீரை – 1 பிடி | 20 | 200 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 45 | 40-45 |
| இராசவள்ளி | 120 | 100 | 120 | 100 |
| வெங்காயப்பூ | 160 | 180 | -- | 160 |

# இராசி பலன்

27.03.2013
(பங்குனி 14, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு
பூரணை பிற்பகல் 3.45 மணிவரை
உத்தரம் முற்பகல்10.44 மணிவரை
இராகுகாலம் 12.14-1.44 மணிவரை
சுபநேரம் 4.44-6.14 மணிவரை
பூரணை விரதம், அமிர்தசித்தம்

**மேடம்** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொழில் வளர்ச்சியுண்டு, கௌரவமான நாள்.

**இடபம்** பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், அடிப்படை வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், சுபசெலவுகள் அதிகரிக்கும்.

**கடகம்** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், கூட்டு முயற்சி வெற்றி தரும், பொருளாதார நிலையில் அக்கறை காட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்,

**சிங்கம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், புண்ணிய காரியங் களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கன்னி** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள், புதிய அனுபவங்கள் ஏற்படும், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கற்பனை மிகுதி யான நாள்.

**துலாம்** நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைக்க வேண்டிய நாள், புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கலாம், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், அலைச்சல்கள் சற்று கூடும்.

**விருச்சிகம்** குடும்ப மகிழ்ச்சி கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி காண்பீர்கள்.

**தனுசு** மனதில் உற்சாகமும் தன்னம்பிக்கையும் கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்ய முன்வருவீர்கள், இறை நம்பிக்கை கூடும், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**கும்பம்** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும், மருத்துவச் செலவுகள் கூடும், பயணங்களின் போது விழிப்புணர்ச்சி அவசியம், போசன சுகமுண்டு.

**மீனம்** நீண்ட நாளைய ஆசையொன்று நிறை வேறும் நாள், திருமணப் பேச்சுக்கள் சுமுகமாக முடியும், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், வழிபாடு விருப்பங்களை நிறைவேற்றும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களிடையே மோதல்; ஒருவர் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

இரு இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் வாள்வெட்டுக்குள்ளாகியுள்ளதோடு மற்றொருவரின் வீடு இளைஞர் குழுவினால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் கொக்குவில் பகுதியிலும் ஆனைக்கோட்டை குருசு மதவடிக்கருகிலும் இடம்பெற்று உள்ளது.


இவ்விரு இளைஞர் குழுவிற்கும் இடையில் மது போதையில் தகராறு ஏற்பட்டதனையடுத்து குருசு மதவடியினை அண்டிய பிரதேச இளைஞர்கள் சிலர் கொக்குவில் கேணியடியினைச் சேர்ந்த ம.சுவேதன் (வயது 24) என்ற இளைஞருக்கு வாளினால் வெட்டியுள்ளனர்.

இதற்கு கைமாறாக வெட்டு வாங்கிய இளைஞரின் சகாக்கள் வெட்டிய இளைஞரின் வீட்டிற்குள் புகுந்து அங்கு ரகளையில் ஈடுபட்டதோடு வீட்டு பொருட்களினையும் அடித்து நொருக்கியுள்ளனர்.

இச்சம்பவம் நடைபெற்று முடிந்தவுடன் இவ்விரு பிரதேசங்களிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் எவரையும் அவர்கள் கைது செய்யவில்லையெனவும் மக்கள் தெரிவித்தனர்.

மேலும் இவ்விரு பகுதிகளிலும் இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்து காணப்படுவதாகவும் இதனை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-4)



நன்றி: மிரர்




## எழுத்தாளர்களுக்கான நூற்பரிசுப் போட்டி

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் வடமாகாண எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் வருடாந்தம் நடத் தப்படும் சிறந்த நூற்பரிசுப் போட்டி இவ்வருடமும் நடத்தப்படவுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கும் அவ்வாண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு இடையில் அச்சில் முதற் பதிவாக வெளிவந்த நூல்கள் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

இதற்கான விண்ணப்ப படிவத்தினை சங்கானை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் பெற்று அதனைப் பூரணப்படுத்தி நூற்பிரதி ஒன்றையும் இணைத்து பணிப்பாளர், பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், வலயக்கல்வி திணைக்களம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (அ-3-30)

## அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம் யா/வேம்படி மகளிர் கல்லூரியின் வருடாந்த பாடசாலை அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து பெற்றோரும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர். (அ)

# ஊரை ஏமாற்றி பணம் வசூலித்த மோசடிப் பேர்வழி தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

ஊர் மக்களிடம் பல இலட்சம் பணத்தினை வாங்கிக் கொண்டு தமது சொந்த வீட்டினையும் விற்று விட்டு குடும்பமொன்று தலைமறைவாகியுள்ளது.

மீற்றர் வட்டிக்கு பணம் கொடுத்தவர்களும் நம்பிக்கைக்கு பணம் கொடுத்தவர்களும் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்காக வரிசையில் நின்றதனை நேற்று அவதானிக்க முடிந்தது.

இம் மோசடிச் சம்பவம் நேற்று முன்தினம் மானிப்பாய் வீதி ஓட்டுமடப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த பகுதியிலுள்ள கணவன்-மனைவி உட்பட 5 பேர் கொண்ட குடும்பமொன்று தமது உறவினர்களிடமும் அயலவர்களிடமும் தாமொரு புதிய வீடொன்றினை கொள்வனவு செய்யப் போவதாக கூறி சுமார் 20 இற்கும் மேற்பட்டவர்களிடம் 50 இலட்சத்துக்கும் அதிகமான பணத்தினை கடனடிப்படையில் வாங்கியுள்ளனர்.

இதற்கு பின்னர் கடன் கேட்டுச் சென்றவர்களுக்கு பதிலீடாக போலிக் காசோலைகளினையும் கொடுத்துள்ளனர். இந்நிலையில் நேற்று முன்தினம் அயலவர்கள் யாருக்கும் தெரியாமல் தாம் குடியிருந்த சொந்த வீட்டினையும் விற்றுவிட்டு தற்போது அக் குடும்பத்தினர் தலைமறைவாகியுள்ளனர்.

இவர்களிடம் மீற்றர் வட்டிக்கும் கொள்ளை வட்டிக்கும் நம்பிக்கையடிப்படையிலும் பணம் கொடுத்தவர்கள் முழி பிதுங்கிய நிலையில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நீண்ட நேரம் காத்திருந்து முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

பல இலட்சம் ரூபாவினை மிகவும் சாமர்த்தியமாக கொள்ளையடித்துச் சென்ற அக் குடும்பத்தினை தாம் தேடி வருவதாக யாழ். பொலிஸ் நிலைய விசேட குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி விக்கிரமராச்சி தெரிவித்தார். (அ-4)

# சாத்திய தோட்ட வீதியை புனரமைத்து தாருங்கள்

(கரணவாய்)

கரவெட்டி சாத்திய தோட்ட வீதியானது புனரமைக்கப்படாதுள்ளமையால் அவ் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய அவலநிலை உள்ளது.

மழை காலங்களில் இவ்வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய அவல நிலையும் உள்ளது.

இவ்வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. ஆயினும் இவ்வீதியாலேயே அனைத்து பயணிகள் பேருந்துகளும் வாகனங்கள் மற்றும் பொதுமக்களும் பயணிக்கின்றனர்.

எனவே, உடன் நடவடிக்கை மேற்கொண்டு இவ்வீதியை புனரமைக்க உரிய தரப்பினர் முன் வரவேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-60)

# ஆயிரம் ரூபா கொடுப்பனவு கிடைக்கவில்லை

(கரணவாய்)

வடமராட்சி கரவெட்டி பிரதேச செயலகத்தை சேர்ந்த 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியம் 1000 ரூபா இதுவரை கிடைக்கவில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 7 மாதங்களிற்கு முன் இம் முதியோர் ஓய்வூதியத்திற்கான விண்ணப்பப் படிவம் பூர்த்தியாக்கப்பட்டு அனுப்பப்பட்ட போதிலும் இதுவரை அவ் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கின்றனர்.

வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து வரும் நிலையில் இக் கொடுப்பனவை வழங்கினால் தமக்கு உதவியாக இருக்குமென எதிர்பார்க்கின்றனர்.

எனவே, இவ் ஓய்வூதியம் உடனடியாக கிடைப்பதற்கான ஒழுங்குகளை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பெற்றுத் தர வேண்டும் என முதியோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-60)

# தாச்சி சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி விநாயகர் சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் தாச்சிச்சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு நடந்த போட்டியில் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டு கழகத்தை எதிர்கொண்டு களமிறங்கிய ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் 6:9 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

இதன்மூலம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள இறுதி தாச்சிப் போட்டியில் தாவடி காளி அம்பாள் விளையாட்டு கழகத்தை எதிர்கொண்டு ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் தாச்சிக்கோட்டுக்கு களமிறங்கவுள்ளது. (அ-5)



யா/தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு குருளைச் சாரணர் ஒருவரால் மரியாதை செலுத்தப்படுவதையும் மாணவர்களின் அணி நடையினையும் இடைவேளையின்போது குருளைச் சாரணர்களின் விளையாட்டு நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளின் மனிதவுரிமை மீறல் குறித்து பேசப்படாதது ஏன்?

## பத்தரமுல்லே தேரர் கேள்வி

(கொழும்பு)

அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை பேரவையில் முன்வைத்த யோசனையை யடுத்து இலங்கையின் உண்மையான நண்பர்கள் யார், பகைவர்கள் யார் என்பதை அடையாளம் காண முடிந்துள்ளதாக ஜனசெத பெரமுனவின் தலைவர் பத்தரமுல்லே சீலாரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஜெனீவா யோசனை மற்றும் இலங்கையின் எதிர்காலம் குறித்து தமது கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்..

அவர் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில், நண்பன் என்ற போர்வையில் எதிராக செயற்படும் நாடுகள் எவை என்பதை அறிந்து கொள்ள முடிந்துள்ளது. அத்துடன் ஐக்கிய நாடுகளின் கொள்கைகளுக்கு முரணாக மனித உரிமை பேரவை செயற்பட்டு வருகிறது.

இலங்கையில் 30 வருடங்கள் போர் நடைபெற்ற காலத்தில் விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து எவரும் பேசுவதில்லை. விடுதலைப் புலிகள் மதகுருமாரையும் பிக்குகளையும் குழந்தைகளையும் பெண்களையும் கொடூரமான முறையில் வெட்டி கொலை செய்தனர்.

அதேவேளை தம் பதிவுக்கு செல்லும் பிக்குமார் தமிழகத்தில் தாக்கப்படுவது விரோதமானது. இந்த தாக்குதல்களின் பின்னணியில், நாட்டை அழிக்க தருணம் பார்த்திருக்கும் புலம்பெயர் தமிழர்கள் உள்ளனர் எனவும் தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# தி.மு.க. செயற்குழு கூட்டத்தை புறக்கணித்தார் அழகிரி

தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தை தென் மண்டல அமைப்புச் செயலாளர் மு.க. அழகிரி புறக்கணித் துள்ளதாக தெிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை வரை சென்னையில் இருந்த அழகிரி கூட்டம் தொடங்கும் நேரத்திலேயே மதுரைக்கு புறப்பட்டுச் சென்றிருந்தார்.

மத்திய அரசிலிருந்து விலகும் முடிவை அவரிடம் கலந்து ஆலோசிக்காமல் எடுத்ததன் காரண மாகவே கூட்டத்தில் பங்கேற்காமல் அவர் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கோபாலபுரம் இல்லத்தில் கருணாநிதியை சந்தித்த மு.க. அழகிரி நடைபெற இருக்கும் கூட்ட த்தில் தான் பங்கேற்கப் போவதில்லை என்றும் அதற்கான காரணங்கள் தொடர்பாகவும் கருணா நிதியிடம் விளக்கியுள்ளதாகவும் தெரிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் அழகிரி கருத்து தெரி விக்கையில் உடல்நிலை சரியில்லாததால் செயற் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளமுடியவில்லை என குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் மத்திய அமைச்சரவையிலிருந்து தி.மு.க. விலகியமை குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப் பியபோது அலுவலகம் செல்ல முடியாது, மக்கள் பணி செய்ய முடியாது, துறை ரீதியான பணிகள் செய்ய முடியாது அவ்வளவுதான் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம், ஜி.கே. வாசன் ஆகியோரை நட்பு முறையிலேயே சந்தித்ததாகவும் அதே முறையில்தான் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் சோனியா காந்தி ஆகியோரையும் சந்தித்ததாக குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# கசினோ சூதாட்ட மன்னன் இலங்கை வருகை தருகிறார்

கசினோ சூதாட்டம் தொழில் மன்னர் ஜேம்ஸ் பாக்கர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

உலகின் முதல்நிலை கசினோ சூதாட்ட கூட்டு நிறுவனங்களின் தலைவரான இவர் இன்று இலங்கையை வந்தடையவுள்ளார்.

கொழும்பு லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கு எதிரில் உள்ள பாரிய வாகன தரிப்பிடத்தை அங்கிருந்து அப்புறப்படுத்தி விட்டு, மிகப் பெரிய கசினோ சூதாட்ட நிலையம் மற்றும் ஆடம்பர சுற்றுலா விடுதி தொகுதி ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பான இறுதிக்கட்ட பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காகவே அவர் இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்த பாக்கர், கசினோ நிலையத்தை நிர்மாணிப்பது குறித்து இலங்கையின் முக்கிய நபர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். இதன்போது, இறுதி இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

இந்த நிலையில், குறித்த நிர்மாணப் பணிகள் அடுத்த வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்படும் என நம்பத்தகுந்த தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. அதேவேளை இலங்கையை சூதாட்ட நிலையமாக மாற்ற மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை தாம் எதிர்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப் பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித் துள்ளார். (அ-2)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை 1938 என்ற இலக்கத்திற்கு அறிவியுங்கள்

பெண்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் உடனுக்குடன் முறைப்பாடுகளை அறிவிக்க 1938 என்ற தொலைபேசி இலக்கத்தினைப் பயன்படுத்துமாறு சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சமூகத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் துஷ்பிரயோகங்களுக்கும் இம்சைகளுக்கும் உள்ளாகின்ற பெண்களின் நலன் கருதியே குறித்த தொலைபேசி இலக்கத்தையும் அதனோடு செயற் படக்கூடிய பொலிஸ் கருமபீட மொன்றையும் ஸ்தாபித்துள்ளோம்.

துஷ்பிரயோகம் மற்றும் பல்வேறு விதங்களில் இம்சைக்குள்ளாக்கப்படும் பெண்கள் உடனடியாக மேற்படி இலக்கத்தோடு தொடர்பு கொண்டு தமக்கான சட்ட உதவிகளையும் நிவாரணங்களையும் பெற இதன்மூலம் வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வீடுகளில், தொழில்புரியும் இடங்களில் மற்றும் பேருந்து, புகையிரதம் ஆகிய போக்குவரத்துக்களில் பெண்கள் எதிர் கொள்ளும் துஷ்பிரயோகங்களை இத்தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். முறைப்பாடுகளை ஏற்கும் விசேட பொலிஸ் பிரிவு அது தொடர்பில் உடனடியாகச் செயற்பட்டு விசாரணைகளில் ஈடுபடும்.

அத்துடன் பாதி க்கப்பட்ட பெண் ணுக்கு சட்ட நிவார ணத்தையும் பெற் றுத்தரும்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொ டர்பான முறைப் பாடுகளுக்கென ஏற்கனவே 1929 இலக்கத்துடனான பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனையடுத்து ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கமைய பெண்கள் முறைப்பாட்டுப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபஷவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்தும் விசேட செயற்றிட்டமொன்று நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இதன் மூலம் குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனைகளைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (அ-2)


## ஆயுர்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!

- ✔ நீங்கள் **முகப்பரு**,சூரிய வெப்பத்தால் ஏற்படும் வரட்சி, சருமவியாதி, **இளநரை, முடி உதிர்வு, பொடுகு, வாதம்,** கைகால் விறைப்பு, மூட்டு வலி, முதுகுவலி, இடுப்புவலி, **சொறி, சிரங்கு,** தொடை இடுக்குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
- ✔ இந்நோய்களுக்குப் பல வழிமுறைகளிலும் தீர்வு தேடிச்சலித்து விட்டீர்களா?
- ✔ இந்நோய்களிற்கான தீர்வாக ஆயுர்வேத முறைப்படி தாயாரிக்கப்பட்ட தைலங்கள் மூலிகைப் பவுடர்கள் எம்மிடம் உண்டு.

### ஆயுர்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!

- ✔ எம்மிடம் நீரிழிவு,கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி , வறட்சி இருமல், மலச்சிக்கல் வெள்ளைபடுதல், மாதவிடாய்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீர்க் கோளாறு, வாதம் போன்ற பலவகை நோய்களிற்குரிய அரிஷ்ட ஆஸவங்கள், குவாதங்கள் , சூரணங்கள், குளிகைகள், சிரப் வகைகளை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- ✔ மற்றும் தரமான பஸ்பங்கள், செங்தூரங்கள், கோரோசனை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பாலசஞ்சீலி பேதிக் குளிசைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையிற் பெற்றுக்கொள்ளலாம்

### சிதாரா முடக்கத்தான் அழுக்கரா சிரப்!

*இளைமைத் துடிப்பு மிக்க முழுமையான திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற பாவியுங்கள் "சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்"*

நீங்கள் நாட வேண்டிய இடம் :

**சிவா நறுமணப் பூங்கா**

இல: 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021-222-2567



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 66, 1இல் செவ்.<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: BSc<br>Quantity Surveyor<br>தொ.இ: B -1476 | பிறப்பு: 1971 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 12<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G -1497 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா. 31.25<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்: A/L,<br>Restaurant Owner<br>தொ.இ: B -1478 | பிறப்பு: 1975 R.C<br>நட்சத்திரம்: பூசம் 1<br>உயரம்: 5' 4"<br>சூரியன் செவ்வாய் ஒரே இடத்தில்<br>தகைமை/ தொழில்: Teacher<br>தொ.இ: G-1498 |
| பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 30, 4இல் செவ்.<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: A/L,<br>விளையாட்டு உத்தியோகத்தர்<br>தொ.இ: B -1481 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>உயரம்: 5' 2"<br>தகைமை/ தொழில்: A/L,<br>முன்பள்ளி ஆசிரியர்<br>எ.பா: சைவபோசனம் தொ.இ: G -1499 |
| பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 48, 1இல் செவ்.<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்: A/L,<br>(சொந்த வான்)<br>தொ.இ: B -1484 | பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 28.5<br>உயரம்:- 5' 1"<br>தகைமை/ தொழில்: BA,<br>Teacher<br>தொ.இ: G -1500 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான மனைவி யாருக்கு அமையும்



நல்ல மனைவி , நல்ல பிள்ளை அமைந்துவிட்ட குடும்பம் தெய்வீகக் குடும்பமாகும். இன்று ஆண்கள் உயர்கல்வி படித்து விட்டு நல்ல சம்பளத்தில் வேலை செய்கின்றனர்.

எல்லோருமே அழகான மனைவி, நல்ல வசதி வாய்ப்போடு அமைய வேண்டுமென்று பார்க்கின்றனர். இப்படிப்பட்ட குறிக்கோளோடு பெண் தேடும் அவர்கள் தங்கள் ஜாதகத்திலும் அந்த அமைப்பு உள்ளதா என்று பார்க்க வேண்டும்.

எனவே, அழகான பெண்ணை அடையக்கூடிய ஆண் ஜாதகம் எப்படி இருக்குமென்று காண்பேர்ம். ஒரு ஆண் ஜாதகத்தில் சுக்கிரன் ஆண் இராசியில் அமைய வேண்டும். அல்லது சுக்கிரன் துலா ராசியில் அமைய வேண்டும். அல்லது சந்திர பகவான் ஆட்சி உச்சம் பெற்று அமைய வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு அழகான மனைவி அமைவாள். லக்னத்துக்கு 7, 9; 2, 7 ஆம் அதிபதிகள் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும்.

சுக்கிர பகவான் 9 ஆம் அதிபதியுடன் சம்பந்தப்பட்டிருந்தால் அதிர்ஷ்டமுள்ள மனைவி அமைவாள். ஆண் ஜாதகத்தில் 7 ஆம் அதிபதி சந்திரன், புதன், குரு வீட்டில் இருந்தாலும் இவர்களுடன் இணைந்தோ பார்க்கப்பட்டோ இருந்தாலும் குரு, சந்திரன் இணைந்திருந்தாலும் அன்பான மனைவி அமைவாள். லக்னத்துக்கு இரண்டாம் அதிபதி உச்சம் பெற்ற 4 ஆம் அதிபதியால் பார்க்கப்படுவதும் 4, 7 ஆம் அதிபதிகள் 11 ஆம் வீடு அல்லது 11 ஆம் வீட்டு அதிபதியோடு சம்பந்தப்பட்டாலும் அவர்கள் சிறப்பான நல்ல மனைவியை அடைவார்கள். மனைவியின் குடும்பமும் சிறப்பாக இருக்கும்.

மனைவியின் குடும்ப நிலையை பற்றி மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியாது. பெண் ஜாதகத்தில் 2 ஆம் அதிபதி உச்சம் பெற்று அமைந்தால் கணவன்-மனைவி ஒற்றுமை சிறப்பாக இருக்கும். மனைவி ஜாதகத்தில் லக்னத்துக்கு இரண்டாம் அதிபதி நீசம் அல்லது அஸ்தமனம் பெற்றிருந்தால் அந்தப் பெண்ணின் ஜாதகப்படி கஷ்டமான குடும்பமாக இருக்கும். எனவே, அழகான மனைவி அமையாததற்குப் பரிகாரம் கிடையாது. அழகான மனைவி வேண்டுவோர் தங்கள் ஜாதகத்தில் அதற்கான அமைப்பு உள்ளதா என்று அறிந்து செயற்பட வேண்டும். ஆனால், வறுமையான குடும்பத்தில் பிறந்த பெண்ணைத் திருமணம் செய்தவர்களது வாழ்வு முன்னேற பரிகாரம் செய்து கொள்ளலாம்.

பரிகாரம்–1

வறுமையில் உள்ள பெண்ணை திருமணம் செய்துகொண்டவர்கள் பெண்ணின் ஏழ்மையைச் சொல்லி ஏசுவதைவிட கீழ்க்கண்ட பரிகாரம் செய்து வறுமை இல்லா வாழ்க்கை வாழலாம். எல்லா வளமும் தருபவர் குருபகவான். குரு பார்த்திட கோடி நன்மையுண்டு.

எனவே, ஒன்பது வியாழக்கிழமைகள் குரு பகவான் சந்நிதிக்குச் சென்று வேண்டிவர குடும்பத்தில் உள்ள வறுமை நிலைபடிப்படியாகக் குறையும். பொருளாதாரமும் உயரும்.

பரிகாரம்–2

குரு பகவானை சென்று வணங்க முடியாதவர்கள் 27 கொண்டைக் கடலை எடுத்து மஞ்சள் துணியில் முடிந்து, அதனை உங்கள் வீட்டு பூஜையறையில் வைத்து வணங்கி வர குரு பகவான் வறுமையைப் போக்கி வளமான வாழ்வு தருவார்.

## உங்கள் குழந்தைக்கு காது குத்திவிட்டீர்களா?


*குழந்தைகளுக்கு குலதெய்வ கோவில்களில் அல்லது இஷ்ட தெய்வ கோவில்களில் காது குத்துவது வழக்கம். சடங்கு சம்பிரதாயத்தின்படி மாமன் மடியில் வைத்து குழந்தையை பிடித்துக்கொள்ள காது குத்துபவர் காது குத்துவார்.*

*காது குத்துவதற்கு உகந்த நட்சத்திரங்கள் மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், அத்தம், சித்திரை, திருவோணம், அவிட்டம், ரேவதி ஆகும். இந்த நட்சத்திரங்கள் அமைந்த சுப நாட்களில் காது குத்தினால் குழந்தைகளின் ஆரோக்கியமும் சீராகும். அணிகலன்கள் அதிகம் அணியும் யோகமும் கிட்டும்.*

## ஜோதிடக் களம்

## எழுத்தாளர் ஆகும் யோகம் உள்ள கைரேகை அமைப்பு?

உலகில் எத்தனையோ எழுத்தாளர்களும் கவிஞர்களும் உள்ளனர். ஆனால், இவர்களில் புகழ்பெறுபவர்கள் வெகு சிலரே. ஒருவர் தலைசிறந்த எழுத்தாளராக புகழ் பெற உதவும் கைரேகை அமைப்பு குறித்து இந்த இதழில் காண்போம்.




ஒரு மனிதனின் கையில் அமைந்துள்ள புத்திரேகை (CD) மனோ தர்மம், புத்தியின் போக்கு, நடை உடை பாவனை போன்றவற்றை வெளிப்படுத்துகிறது. மூளையின் வேலை புத்திரேகையால் கணிக்கப்படுகிறது. அதாவது ஒருவரது மூளைத்திறன் எந்த அளவுக்கு உள்ளது என்பதை அவரது புத்திரேகை அமைப்பு மூலம் அறியலாம்.

புத்திரேகை சாதாரணமாக வளைந்து சந்திரமேட்டை நோக்கிச் செல்லும் இயல்புடையது. சிலருக்கு ஏனைய மேடுகளுக்கும் இந்த ரேகை செல்வதுண்டு. புத்திரேகையில் இருந்து ஒரு கிளை ரேகை (MN) உற்பத்தியாகி, அக்கிளை குருமேடு நோக்கிச் சென்றால் அவர் பிரபலமான எழுத்தாளராக சமூகத்தில் திகழ்வார். அவரது எழுத்தாற்றல் மக்களை கவரும் வகையில் அமைந்து இருக்கும்.

அதேநேரத்தில் அவரது கையில் அமைந்துள்ள விதிரேகையில் இருந்து (GH) ஒரு கிளைரேகை (KL) உற்பத்தியாகி புதன்மேட்டை நோக்கிச் சென்றால் அவர் தனது எழுத்தாற்றல் மூலம் ஏராளமான பொருள் வருவாய் பெறுவார். அவரது எழுத்துக்களுக்கு உயர்ந்த சன்மானம் கிடைக்கும் வாய்ப்பு அமையும்.

கங்கண ரேகையில் இருந்து ஒரு ரேகை (IJ) உற்பத்தியாகி அந்தரேகை கையில் உள்ள குருமேட்டை நோக்கிச் சென்றால் அவரது கைவிரல்களின் நுனி கூர்மையாக அமையும். அந்த அமைப்புள்ள நபர் மதம், கோவில்கள், வழிபாட்டுத்தலங்கள், கல்வெட்டு, ஆய்வு, வரலாறு ஆகியவை குறித்த நூல்களை எழுதி பணமும் புகழும் பெறுவார்.

## புத்தாண்டுக்கு முன்னர் பல்கலைக்கழக அனுமதி

க.பொ.த.உயர்தரப் பரீட்சை 2012 ஆம் ஆண்டில் சித்திபெற்ற மாணவர்கள் இந்த வருட இறுதிக்குள் பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. குறித்த விடயம் தொடர்பில் பல்கலைக்கழக உபவேந்தர்களுடன் அடுத்த மாத இறுதி வாரத்தில் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவரான பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம குறிப்பிட்டார்.

2012 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழக நுழைவிற்காக விண்ணப்பித்துள்ளனர் என்றும் அவர் கூறினார். 2011 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை தமிழ், சிங்கள புத்தாண்டிற்கு முன்னர் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்வதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார். (அ–2)

## அரச,தனியார் பேருந்துகள் வேகமாக செல்லாதோ?

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இருந்து வற்றாப்பளை தண்ணீருற்று ஊடாக முள்ளியவளை ஆலடிச்சந்திக்கு செல்லும் இ.போ.ச. பேருந்து மற்றும் தனியார் பேருந்துகள் அதிகநேரம் எடுப்பதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த வீதியானது 13 கிலோ மீற்றர் தூரம் கொண்ட வீதியாக காணப்படுகின்றபோது ஒரு மணித்தியாலம் எடுப்பதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் கடமைகளுக்கு செல்வோர் குறிக்கப்பட்ட நேரத்திற்கு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

அதேவேளை முல்லைத்தீவில் இருந்து புதுக்குடியிருப்புக்கு செல்லும் பாதையானது 17 கிலோமீற்றர் தூரம் கொண்டதாக காணப்படுகின்றபோது 40 நிமிடம் மட்டுமே பயணிப்பதற்கு எடுப்பதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு குறுகிய நேரத்தில் பயணத்தை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(அ–3–267)

## இணுவில் பொதுநூலகத்தால் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

(மல்லாகம்)

இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலைய 11 ஆவது புனருத்தாரண நிறைவு நாளை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நூலக கலாசார மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளது. இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றியீட்டிய மாணவர்களின் விபரம் வருமாறு,

பொது அறிவுப் போட்டி முடிவுகள்

ஆரம்பப் பிரிவு

க.வித்தகன் (யா/ தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), ச.பானுகா (கலைவாணி கல்வி நிறுவனம் கோப்பாய்), ஏ.தவசுதன் (கலைவாணி கல்வி நிறுவனம் கோப்பாய்), **மூன்றாம் இடம் மூவர்:** த.தனுசன் (யா/கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), சு.நிலக்சன் (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), கே. ஸ்ரீநாராயணி (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி).

**கீழ்ப்பிரிவு**

ச.துசிதரன் (A.T.C. கல்வி நிறுவனம் இணுவில்), வீ.ஆர்த்திகா (கலைவாணி கல்வி நிறுவனம் கோப்பாய்), **இரண்டாம் இடம் இருவர்:** த.சாருஜன் (A.T.C.. கல்வி நிறுவனம் இணுவில்), வி.யசோதரன் (யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி), **மூன்றாம் இடம்:** ம.நிவேதா (யா/ வேம்படி மகளிர் கல்லூரி),

**மத்திய பிரிவு**

யோ.ரவிதர்ஷன (A.T.C. கல்வி நிறுவனம், இணுவில்), தே.கோகுலன் (யா/ தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), மூன்றாமிடம் இருவர் தி.சங்கவி (A.T.C. கல்வி நிறுவனம், இணுவில்),

மேற்பிரிவு

சொ.தருமதன் (யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, இரண்டாமிடம் இருவர் ஜெ.கீர்த்திகா (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஏ.திவாகரன் (யா/ கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி), மூன்றாமிடம் இருவர் கா.கஜனிகா (யா/இராமநாதன் கல்லூரி), ச.சரண்ராஜ் (யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி)

சதுரங்க சுற்றுப்போட்டி

ஆண்கள்

கா.ஆதவன், ஸ்ரீ.பாதுஜன், மூன்றாமிடம் இருவர் பா.விதுரன், இ.அரன்

பெண்கள்

திருமதி ஆ.வானதி, அ.ஸேணுகாயனா, வி.கஸ்தூரி

குழுப்பாட்டம்

ஜொலி போய்ஸ் விளையாட்டுக்கழகம், நொதேர்ண் விளையாட்டுக்கழகம். (அ–2–21)

## தபால் கட்டணங்களில் திருத்தம் செய்வது குறித்து அரசு கவனம்

தபால் கட்டணங்களில் திருத்தம் மேற் கொள்வது குறித்து அரசாங்கம் கவனம் செலு த்தியுள்ளதாகவும் அதற்கான யோசனை களை அரசிடம் சமர்ப்பித்துள்ளதாக தபால் மா அதிபர் ரோஹன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்த யோசனைகள் அமைச்சு மட்டத்தில் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக தபால்மா அதிபர் குறிப்பிட்டார்.

மூன்று வருடங்களுக்கு ஒரு முறை தபால் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் கடந்த 6 வருடங்களாக தபால் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தபால்மா அதிபர் சுட்டிகாட்டினரர். (அ–2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உணர்வுகளை ; மனித உருவில் விளக்கும், நாடகக்கலை...

நாடகக் கலையானது சக்தி மிக்க ஒரு கலை வடிவமாக விளங்குகின்றது. நாடகமானது அவ்வவ் கால கருத்தியலுக்கு அமைவாக வெளிப்படை தன்மையினை கொண்டு விளங்குகின்றது. கலை என்பது காலத்தின் கண்ணாடி என்னும் வகையில் நாடகமும் அதன் காலத்தை பிரதிபலிக்கும் கலை வடிவமாக விளங்குகின்றது.



நாடகக் கலையானது மனிதர்களோடு பின்னிப்பிணைந்துள்ள கலை வடிவமாகும். இயற்கையிலிருந்து இயற்கையின் சூட்சுமங்களை தேடல் செய்து அவற்றுக்கிடையிலான காரண காரியத் தொடர்புகளை விளக்கிக் கொண்டு மனித குல மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் பிற துறைகளைப் போல நாடகக்கலையும் உயிர்த்துடிப்புள்ள மனித உரு மூலம் மனிதனது உணர்வுகளுக்கு அவன் சார் நடத்தைகளுக்குமான தொடர்புகளை சரியாக புடம் போட்டு அவன் வாழ்கின்ற சமூகத்தின் பின்புலத்தினை உள்வாங்கிக் கொண்டு கலைக்குரிய வளர்ச்சியோடு அதனை விளக்கியும் வியாக்கியானித்தும் மனித குலத்தை வளர்ச்சி பெறச் செய்கின்றது. மனிதனை மனித உரு மூலமே விளக்கிக் கொள்வதற்கு இக்கலை பயன்படுவதனால் பிற கலைகளை விட நாடகக் கலை மனிதர்களோடு மிக நெருங்கிய இறுக்கமான ஊட்டமுள்ள கலை வடிவமாக விளங்குகின்றது.

சக்தி மிக்க கலை வடிவமான நாடகக் கலையின் சிறப்புக்கருதி வருடாந்தம் பங்குனி மாதம் 27 ஆம் நாள் உலக நாடக தினமானது சிறப்பாக பல்வேறு நாடுகளில் கொண்டாடப்பட்டு வருகின்றது. உலக நாடக தினமானது ஏன் ஆரம்பிக்கப்பட்டது?அதன் நோக்கம் என்ன என்பது பற்றி சிந்தித்தல் வேண்டும்.

1961 ஆம் ஆண்டு ஆனி மாதத்தின் சர்வதேச அரங்க அமைப்பின் 9ஆவது ஒன்று கூடலாக கெல்சிங் வியன்னா ஆகிய இடங்களில் சர்வதேச அரங்கத் திட்டம் உருவாக்கப்பட்டது. சர்வதேச அரங்கத்திட்டம் என்னும் சொல்லுக்கு மாற்றீடாக அர்விகிவிமா (arvikivimaa) என்பவரால் உலக நாடக தினம் என்பது முன்மொழியப்பட்டது. எனினும் 1962 இல் பரிசில் மார்ச் மாதம் 27 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## இன்று உலக நாடக தினம்

இவ் உலக நாடக தினமானது மக்களிடையே சமாதானத்தையும் புரிந்துனர்வையும் ஏற்படுத்தும் நோக்கில் அமைகின்றது. ஆற்றுகை கலைகளின் சக்தியை மக்கள் முன்னிலையில் வெளிக்கொண்டு வருவதற்கு அரங்கக் கலைஞர்களாலும் மக்களாலும் கொண்டாடப்பட்டு வருகின்றது.



இவ் உலக நாடக தினமான்து நடைபெறுவதன் நோக்கமாக பின் வரும் அம்சங்களினை குறிப்பிடலாம்.

1. ஆற்றுகைக் கலையின் முக்கியத்துவத்தையும் அதன் பயில்வையும் சர்வதேச ரீதியில் பரிமாறிக் கொள்ளவும் ஊக்குவித்தல்.

2. அரங்கக் கலைஞர்களுக்கு இடையில் கூட்டுணர்வை உருவாக்குவதிலும் வளர்ப்பதிலும் ஆக்கத்திறன் மீதான அக்கறையை விருத்தி செய்தல்

3. இக் கலைப்படைப்பு மீதான அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் விழிப்புணர்வுடன் உருவாக்குதல்.

4. இந்நிகழ்வில் பங்கு கொள்வதன் மூலம் மக்களிடையே ஆழமான புரிந்துணர்வுகளுக்கும் பங்கு கொள்ளலை வலுப் பெறச் செய்வதற்கும் முனைப்பூட்டுதல் ஆகிய அம்சங்களை கொண்டுள்ளது.

சர்வதேச செய்திப் பரிமாற்றம் பொது விடயங்களை கலந்து ஆலோசிப்பதற்கான பேச்சு வழக்கு முறை, வட்ட மேசை மாநாடு போன்ற வேறுபட்ட முயற்சிகளுக்காக சர்வதேச விழாவாக ஒருநாள் அல்லது ஒரு வாரம் அல்லது ஒரு மாதம் வரை இவ்விழா கொண்டாடப்படுகின்றது. இதற்கு ஜப்பான், குவைத் போன்ற நாடுகள் சான்று பகிர்கின்றன.

இவ்வகையில் உலக ரீதியில் அரங்க ஆர்வலர்களால் அனுஷ்டிக்கப்படுகின்ற உலக நாடக தினமானது எமது நாட்டை பொறுத் வரையிலும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சமுதாய வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் கலை வடிவமான நாடகக் கலையின் சிறப்பினை உணர்த்தும் தினமாக உலக நாடக தினமானது அமைகின்றது. இவ்வகையில் எமது பிரதேசத்தை பொறுத்த வரை சிறப்பாக அனுஷ்டிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த தினமாக உலக நாடகதினமானது விளங்குகின்றது. இதனடிப்படையில் நாடகக் கலையின் வளர்ச்சி கருதியும் தொடர் இயங்குதலின் அடிப்படையிலும் ஆற்றுகைக் கலைஞர்களாலும் அரங்க ஆர்வலர்களாலும் அனுஷ்டிக்கப்பட வேண்டிய முக்கிய தினமாக விளங்குகின்றது.

எஸ்.ரி.குமரன் BA(Hons),M.A
நாடகத்துறை ஆசிரியர்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

# எண்ணெய் தாங்கிகள் மீளப் பெறப்படமாட்டா

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியநிறுவனத்திடம்எண்ணெய் தாங்கிகள் மீளப் பெற்றுக் கொள்ளப் படமாட்டாது என சுற்றாடல் மற்றும் மீள் சுழற்சி சக்தி வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையைப் போன்றே திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை இந்திய நிறுவனத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வழங்கியுள்ளது.

இந்திய நிறுவனத்துடன் உடன் நடவடிக்கையில் கைச்சாத்திட்டு எண்ணெய்த் தாங்கிகளை வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சி இன்று குறித்த எண்ணெய்த் தாங்கிகளை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு கோரி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் பிரதான நகரமொன்றில் எண்ணெய் விநியோகித்தில் ஈடுபட்டால் ஒட்டுமொத்த இலங்கையில் ஈட்டும் வருமானத்தை விடவும் அதிகளவில் சம்பாதிக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய எண்ணெய் நிறுவனம் நட்புறவு அடிப்படையிலேயே இலங்கையில் வர்த்தகம் செய்து வருகிறது. எனவே இந்த எண்ணெய் தாங்கிகள் மீளப் பெற்றுக்கொள்ளப்பட உள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# பொலநறுவையில் மீன் மழை

(கொழும்பு)

பொலநறுவை புதிய நகர் (நவநகர) பிரதேசத்தில் நேற்றையதினம் மீன்மழை பெய்துள்ளதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

புதிய நகரப் பொலிஸ் அதிகாரி காரியாலய பகுதியிலேயே இவ்வாறு மீன்மழை பெய்துள்ளது.

இருவகைய்யிலான மீன்கள் இவ்வாறு மழையுடன் விழுந்துள்ளதாக அப்பிரதேச மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# உலக இன்பங்களுக்காக அயலவர்களை காட்டிக் கொடுக்காது வாழ்வோம்



இயேசுவின் பன்னிரு சீடர்களில் ஒருவனாகிய யூதாசு இஸ்காரியோத்து தலைமைக் குருவிடம் வந்து இயேசுவை உங்களுக்கு நான் காட்டிக் கொடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள்? என்று கேட்டான். அவர்களும் முப்பது வெள்ளிக் காசுகளை எண்ணி அவனுக்குத் கொடுத்தார்கள் எனும் வேதாகமப் பகுதி எமக்கு இன்று தரப்படுகின்றது. இறை மகன் இயேசு இந்த மண்ணுலகில் மனிதனாக 33 ஆண்டுகள் வாழ்ந்த வாழ்க்கையை நிறைவு செய்யும் நாட்கள் நெருங்கி வருகிறது. எத்தனையோ புதுமைகளையும் தத்துவங்களையும் சமூகத் திருத்தங்களையும் செய்து மக்கள் மனதில் என்றென்றும் நிலைத்தவர் இயேசு. அவர் மனித மனங்களில் மண்டிக் கிடந்த களைகளை நீக்கி மக்களை இறை வழியில் செல்ல வைத்தார். பாவ வழிகளை அழிக்கப் பாடுபட்டார். உலக மக்களின் பாவங்களை போக்கவே இம்மண்ணுலகில் மனிதனாகப் பிறந்தேன். என் அரசு நிலையானது. அதற்கு அழிவே இல்லை. அன்பு, சமாதானம், சகிப்புத் தன்மை ஆகியனவே மனித வாழ்வின் அத்திவாரம் என்று போதித்ததுமல்லாமல் வாழ்ந்தும் காட்டியவர். ஆனால் மூர்க்க குணம் கொண்ட யூதர்கள், இயேசுவின் போதனையை ஏற்க மறுத்து விட்டனர். மூடப்பழக்க வழக்கங்களுக்கு அடிமையான யூதர்களும் பரிசேயர்களும் தலைமைக்குருக்களும் இயேசுவை கொலை செய்யத் திட்டங்களை தீட்டினார்கள்.

நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது என்ற இயேசுவின் போதனைகள் இந்த நிகழ்வில் நிறைவேற்றுவதைப் பார்க்கின்றோம். யூதாசு ஒப்பற்ற செல்வமாகிய இயேசுவைப் புறக்கணித்து முப்பது வெள்ளி காசுகளுக்கு ஆசைப்பட்டு அடிமையாகி விட்டான். பணத்துக்காக இயேசுவையும் இயேசுவின் மதிப்பீடுகளையும் காட்டிக் கொடுத்து வாழ்பவர்கள் இன்றும் எம்மிடையே வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றோம். எப்பொழுதெல்லாம் பணத்தின் மீது அதிக ஆசை கொள்கிறோமோ பணத்துக்காக பாவத்தை, குற்றங்களை செய்கிறோமோ அப்பொழுதெல்லாம் நாம் இயேசுவை காட்டிக் கொடுக்கின்றோம். நாம் இயேசுவைக் காட்டிக் கொடுத்தாலும் மறுதலித்தாலும் அவரை விட்டுப் பிரிந்தாலும் அவர் நம்மை வெறுப்பதில்லை. மாறாக அவர் நம்மை என்றும் தம் குழந்தைகளாகவே வாழ்விக்கின்றார். வழி நடத்துகின்றார். இயேசு வின் வாழ்வு நம்மிடம் இருக்கிறதா?


நாம் வாழும் சமூகத்தில் மற்றவர்களை நம்மிடம் பழகுபவர்களை நாம் எத்தனை முறை இடருக்குள் தள்ளியிருக்கின் றோம் நிந்தனை செய்திருக்கின்றோம்? மறுதலித் திருக்கின்றோம்? காட்டிக் கொடுக்கின்றோம் தள்ளி விட்டிருக்கின்றோம்? தவிக்கவிட்டிருக் கின்றோம்? ஒடுக்கியிருக்கின்றோம்? ஒதுக்கியிருக்கின்றோம். பணத்துக்காக, உலக இன்பங்களுக்காக நாங்கள் மற்றவர்களை காட்டிக் கொடுக்கும் அவலநிலையிலிருந்து எங்களைக் காத்துக் கொள்வோம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிரித்தது ஆலமரம்



பாப்புவின் அப்பாவுக்கு ஒரு சமயம் பயங்கர பணநெருக்கடி ஏற்பட தெரியாத்தனமாக அந்த ஊரில் பிரபலான 'லேவாதேவி ஆள் மணிலாலிடம் கைநீட்டி இருபதாயிரம் ரூபாய் கடன் வாங்கிவிட்டார். மணிலாலின் பிரதான தொழில் மர வியாபாரம். பணம் கடன் கொடுத்து வசூலிப்பதையும் பகுதிநேரத் தொழிலாகக் கொண்டிருந்தான். அவன் தன் கடனை வசூல் செய்யும் விதமே அலாதியானது. தோட்டம், துரவு இருப்பவர்களுக்குக் கடனை வாரி வழங்கிவிட்டு அவர்கள் திருப்பித் தர முடியாமல் திணறும்போது மணிலால் அட! பணம் இல்லாவிட்டால் என்ன? உன்தோப்பில் உள்ள வேல மரத்தைக்கொடுத்துவிடு! அதை வெட்டி எடுத்துக்கொள்கிறேன் என்று ஆரம்பித்து சாமர்த்தியமாக மரங்களை வாங்கி விடுவான். பின்பு அவற்றை நல்ல இலாபத்தில் விற்றுவிடுவான்.

பாப்புவின் அப்பாவும் மணிலாலின் இந்த வலையில் வசமாக சிக்கிக்கொண்டார். அவருக்குச் சொந்தமான நிலத்தில் ஒரு பெரிய ஆலமரம் மணிலாலின் கண்களைப் பல ஆண்டுகளாய் உறுத்திக்கொண்டிருந்தது. அதைக் கபளீகரம் செய்ய வாய்ப்பு வந்துவிட்டது என்று மணிலால் மகிழ்ந்து போனான்.

மீண்டும் மீண்டும் இயற்கையின்


## அம்புலிமாமா கதைகள்

உத்பாதங்களினால் பாப்புவின் அப்பாவுக்கு நிலத்திலிருந்து வருமானம் கிட்டவில்லை. அதனால் அவரால் மணிலாலிடம் வாங்கிய கடனை அடைக்கமுடியவில்லை. இந்த ஆண்டு நல்ல விளைச்சல் உண்டானால் அதை விற்று மணிலாலிடம் வாங்கிய கடனை அடைத்து விடலாம் என்று அவர் கணக்குப் போட்டிருந்தார்.

ஆனால் மணிலால் போட்ட கணக்கு வேறுமாதிரி இருந்தது. வயல் அறுவடையாகி நல்ல விளைச்சலினால் பாப்புவின் அப்பா கடனை திருப்பிக்கொடுப்பதற்கு முன் ஆலமரத்தைக் கைப்பற்ற கணக்குப் போட்ட மணிலால் அதன்படி திடீரென ஒருநாள் பாப்புவின் வீட்டுக்குத் தன் வண்டியில் வந்து இறங்கினான்.

திட்டமிட்டபடியே மணிலால் அவர் வீட்டுவாயிலில் நின்றுகொண்டு நடேசா! வாங்கிய கடன் என்ன ஆயிற்று? கடனைத் திருப்பித் தரும் எண்ணமே கிடையாதா உனக்கு?என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? என்று நான்கு வீடு கேட்கும்படி கூச்சல்போட பாப்புவின் அப்பாவின் சப்தநாடியும் அவமானத்தில் ஒடுங்கிவிட்டது.

வெளியே ஓடிவந்த அவர் மணிலா




லின் காலில் விழுந்து தன்மானத்தை வாங்காதிருக்கும்படிக் கெஞ்ச உடனே மணிலாலும் குரலைத் தாழ்த்திக் கொண்டு நடேசா! நீ பிள்ளைக் குட்டிக்காரன்! உன்னைப்பார்த்தால் பாவமாக இருக்கிறது. உன்னால் கடனைத் திருப்பித்தரமுடியாவிட்டால் விட்டு விடு! பதிலுக்கு உன் நிலத்தில் உள்ள ஆலமரத்தை எனக்குத்தா! அதை வெட்டி நான் எடுத்துக்கொள்கிறேன் என்று ஏதோ நடேசன் மீது பரிதாபப்பட்டு சலுகை வழங்குவது போல் நடித்தான்.

அதைக்கேட்டு பாப்புவின் அப்பா நடேசன் திடுக்கிட்டார். மரத்தை வெட்டி என்ற சொல் அவர் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதுபோல் இருந்தது. காரணம் அவர் அதை வெறும் மரமாக நினைக்கவில்லை. அந்த ஆலமரத்தை தன் குடும்பத்தினரில் ஒருவராக கருதி வந்தார். ஆனால் அதை விட்டால் வேறு வழியில்லை என்பதும் தெரிந்தது. அதற்கு மறுத்தால் மணிலால் கடனைத் திருப்பிக்கேட்டு தன் வீட்டை எலம்போட்டு குடும்பத்தையே நடுத்தெருவில் நிறுத்துவான் என்று தோன்றியது. மிகுந்த துயரத்துடன் மணிலாலின் கோரிக்கைக்கு அவர் சம்மதித்தார்.

அப்பாவின் சம்மதம் கேட்டு பாப்புவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. உடனே அவன் தன் நண்பர்களிடம் அந்தச் செய்தியைச் சொல்லி அனைவருமே திடுக்கிட்டார்கள். ஏனெனில் மாலை நேரங்களில் அவர்கள் எல்லோரும் அந்த ஆலமரத்தின் நிழலில்தான் கூடிக்கும்மாளமிட்டு விளையாடுவார்கள். அந்த ஆலமரம் கிட்டத்தட்ட அவர்களுடைய இரண்டாவது வீடாகத் திகழ்ந்தது. அத்தகைய ஆலமரத்தை மணிலால் வெட்டப்போகிறான் என்ற செய்தி அவர்களை மிகவும் வருத்தத்தில் ஆழ்த்தியது. ஆலமரத்தின் அடியில் கூடியிருந்த பாப்புவும் அவன் நண்பர்களும் மனமுடைந்து சோர்ந்து போயிருந்தனர்.

நம்மால் இனி முன்போல் விளையாடி மகிழமுடியாது. நம்மைவிடு! அதோ ஆலமரத்தின் உச்சியில் எத்தனை பறவைகள் ஆனந்தமாக வசிக்கின்றன. அவற்றின் கதி என்ன என்றான் மணி.

ஐயோ ஆலமரத்தில் குருவிகள் கூடு கட்டியுள்ளன. அதில் நான்கு குஞ்சுகள் உள்ளன. பறக்கக்கூட முடியாத அவற்றின் கதி? என்று கேட்கும் போதே



விமலா அழுதுவிட்டாள்.

குழந்தைகள் பேசுவது புரிந்ததோ என்னவோ அதுவரை குதூகலமாகக் குரல் கொடுத்துக்கூவிக் கொண்டிருந்த பறவைகளும் மௌனமாயின. அவ்வளவு ஏன்? எப்போதும் சந்தோசத்துடன் தன் விழுதுகளை ஆட்டியாட்டி இரைச்சல் போடும் ஆலமரம்கூட தான் சிரிப்பதை நிறுத்திவிட்டது. தனக்கு



வரவிருக்கும் அபாயத்தை உணர்ந்து கொண்ட ஆலமரம் மௌனமாகக் கண்ணீர் சிந்த ஆரம்பித்தது.

இவ்வாறு எல்லோரும் சோகமாக உட்கார்ந்திருக்கையில் அவர்களில் பெரியவனான கோபால் அவர்களைப் பார்த்து வருத்தப்படுவதை நிறுத்துங்கள்! இந்த ஆலமரத்தை நாம் ஒருக்காலும் வெட்ட அனுமதிக்கக் கூடாது. அதற்கு ஒருவழி இருக்கிறது என்றவன் அந்த யோசனையைக் கூறினான். மறுநாள் மணிலால் தன் ஆட்களுடன் ஆலமரத்தை வெட்ட வந்தவன் அங்கு கூடியிருந்த சிறுவர் கூட்டத்தைக் கண்டுஆச்சரியமுற்றான்.

சேட் நீங்கள் மரத்தை வெட்டக் கூடாது. உனக்குச்சேரவேண்டிய பணத்தை நாங்கள் தருகிறோம் என்று கோபால் உரக்கக் கத்தினான். பின்னர் தரையில் ஒரு கம்பளம் விரிக்க அதில் சிறுவர்கள் தாங்கள் அதுநாள் வரை உண்டியலில் சேர்த்து வைத்திருந்த ரூபாய் நோட்டுக்களையும் நாணயங்களையும் கொட்டினார்கள். மணி, நட்டு, கிட்டு, ராமு, பப்லு, பாப்பு, ராஜா, ஆர்த்தி, காயத்ரி, சுபா என்று கணக்கற்ற சிறுவர்களும் சிறுமிகளும் தங்களது சேமிப்புக்கள் அனைத்தையும் வாரி வழங்கினர். பல துளி சிறு வெள்ளம் என்பது போல் அங்கு சிறிது நேரத்தில் பணம் குன்றுபோல் குவிந்தது.

அவற்றை எண்ணிய மணிலால் குழந்தைகளா! மூன்றாயிரம் ரூபாய் தான் தேறுகிறது. இது போதாதே என்றான். மணிலால் மாமா ஒவ்வொரு மாதமும் இதுபோல் பணம் தருகிறோம். ஆனால் தயவுசெய்து மரத்தை வெட்டாதீர்கள் என்று கோபால் முன்வர எல்லோரும் தயவு செய்து வெட்டாதீர்கள்! தயவுசெய்து வெட்டாதீர்கள்! என்று கூப்பிய கரங்களுடன் கெஞ்ச கல்நெஞ்சம் படைத்த மணிலாலின் மனமே இளகிவிட்டது.

உடனே பாப்புவின் அப்பாவிடம் மணிலால் நடேசா! ஆலமரத்தின்மீது இந்த இளம்பிஞ்சுகளுக்கு இவ்வளவு பரிவு உள்ளதைக் கண்டபின்னும் இந்த மரத்தை வெட்டத் துணிந்தால் என்னைப்போல் அரக்கன் வேறுயாரும் கிடையாது. இந்தக் குழந்தைகள் ஜெயித்துவிட்டனர். நான் இனி எந்தப் பசுமையான மரத்தையும் வெட்டமாட்டேன். நடேசா உனக்கு முடிந்தபோது நீ என் கடனைத் திருப்பித்தா என்று சொல்லிவிட்டு மணிலால் பணம் எடுத்துக்கொள்ளாமல் அகன்றான்.

ஹே என்று குழந்தைகள் உற்சாகத்துடன் கூச்சலிட தங்களுக்கு வரவிருந்த ஆபத்து நீங்கிவிட்டதை உணர்ந்த பறவைகளும் கீச்கீச் என்றுகூச்சலிட அணில்கள் கிளைக்குக் கிளை தாவிக்குதிக்க அதுவரை மௌனமாக இருந்த ஆலமரம் தன் விழுதுகளை ஆட்டியாட்டி ஹோ ஹோ என்று மகிழ்ச்சியில் பலமாக சிரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள்- இனப்படுகொலை வேறுபாடு என்ன...?

"மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள்" மற்றும் "இனப்படுகொலை" போன்றவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் என்ன? இவ்விரு பதங்களும் மனித உயிரினங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட குற்றங்களுக்கு தண்டனை வழங்குதலை குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறதா?

அனைத்துலக நீதிமன்றில் பல்வேறு வழக்குகள் தொடர்பில் வாதங்களை மேற்கொள்ளும் சாண்ட்ஸ் என்கின்ற இந்தச் சட்டவாளர் லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் அனைத்துலக சட்டத்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றுகிறார்.

2003ல் இடம்பெற்ற அமெரிக்காவின் ஈராக் படையெடுப்பானது அனைத்துலகச் சட்டத்தை மீறி மேற்கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கின்ற Lawless World என்கின்ற நூலின் ஆசிரியர் சாண்ட்ஸ் ஆவார். இவர் தற்போது "மசிடோனியா" என்கின்ற பெயரை உபயோகப்படுத்துவது தொடர்பில் நீதிக்கான அனைத்துலக நீதிமன்றில் கிறீசுக்கு எதிராக மசிடோனியா சார்பாக வாதிட்டு வருகிறார்.

கேள்வி: "மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள்" மற்றும் "இனப்படுகொலை" போன்ற சட்டச் சொற்கள் தொடர்பாக விபரிக்க முடியுமா?

பதில்: பிலிப் சாண்ட்ஸ்: மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகிய இரண்டும் வேறுபட்ட இருவேறு எண்ணக்கருக்களாகும். இவை இரண்டும் 1940களின் நடுப் பகுதியில் அனைத்துலக சட்டத்தின் பகுதியாக கொண்டு வரப்பட்டன. அதாவது இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைந்த பின்னர் இவ்விரு எண்ணக்கருக்களும் அனைத்துலகச் சட்டத்தில் இணைக்கப்பட்டன. இவை இணைக்கப்பட்ட அந்த நேரத்தில் நூரம்பேர்க் Nuremburg விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. அந்த நேரத்தில் இவை இரண்டும் புதிய எண்ணக்கருக்களாக காணப்பட்டன. இந்த இரு எண்ணக்கருக்களின் தோற்றுவாய்கள் தொடர்பாக ஆராய்கின்ற விதமாக நான் தற்போது புதிய நூல் ஒன்றை எழுதி வருகிறேன்.

மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களுக்கும் இனப்படுகொலைக்கும் இடையில் அடிப்படையில் காணப்படும் வேறுபாடு பின்வருமாறு: மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் என்பது பெரும் எண்ணிக்கையில் பொதுமக்களைக் கொல்வதாகும். திட்டமிட்ட ரீதியில் மிகப்பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களைக் கொல்கின்ற செயலானது மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் என வரையறுக்கப்பட்டுள்ளது. இனப்படுகொலை என்பது வேறுபட்ட நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. இனப்படுகொலை என்பது தனிப்பட்ட மக்களைக் கொல்வதோடு மட்டுமல்லாது, ஒரு சமுதாயத்தை அழிப்பதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதாகும்.

வேறு வகையில் கூறினால், தனியொரு குழுவைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் கொல்லப்படுவதையே இது குறிக்கின்றது. இந்த ரீதியில் இவ்விரு எண்ணக்கருக்களுக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகிறது. இந்த இரு எண்ணக்கருக்களில் ஒன்று தனியொருவரைக் காப்பாற்றுவதை அடிப்படையாகக் கொண்டு சட்டத்தில் இணைக்கப்பட்டது. மற்றையது ஒரு குழுவைக் காப்பாற்றுவதைக் கருத்திற் கொண்டு சட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கேள்வி: Lviv என்கின்ற உக்ரேனிய நகரத்துடன் இவ்விரு எண்ணக்கருக்களையும் தொடர்புபடுத்தி நீங்கள் ஆராய்ச்சியை மேற்கொண்டு வருவதாக கூறப்படுவது உண்மையா?

பதில்: 1945 மற்றும் 1946 களில் கூட்டணி நாடுகள் நூரம்பேர்க் Nuremburg விசாரணைகள் தொடர்பாக தம்மை தயார்ப்படுத்திக் கொண்டிருந்த வேளையில் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகிய இருவேறு எண்ணக்கருக்களும் புதிதாக அனைத்துலக சட்டத்தில் இணைக்கப்பட்டன. இதனால் இவை இரண்டும் மிகப் பிரபலமாகப் பேசப்பட்டன. இந்த விசாரணையில் தமக்கெதிரான நாசி ஆதரவு நாடுகளை எவ்வாறு குற்றம் சுமத்தமுடியும் என்பது தொடர்பாக கூட்டணி நாடுகள் ஆராய்ந்து தீர்மானம் எடுத்தன. அந்தவேளையில், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை விவகாரத்தைக் கையாள முடியுமா அல்லது இல்லையா என்பது தொடர்பாக மிகப் பெரிய விவாதம் ஒன்று எழுப்பப்பட்டது. இந்த அடிப்படையில், கூட்டணி நாடுகள் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்



கள் என்ற எண்ணக்கருவை தமது விவாதத்தில் பயன்படுத்தின.

இவ்விரு எண்ணக கருக்களின் தோறறுவாய்கள் தொடர்பாக நான்எனது புதிய நூலில ஆராய்ந்து வருகிறேன். Lemberg மற்றும் Lwow ஆகிய இரு உக்ரேனிய நகரங்களைச் சேர்ந்த இருவர் இந்த எண்ணக்கருக்கள் தோற்றம் பெறுவதற்கு பொறுப்பாளிகளாவர். இவ்விரு நகரங்களும் தற்போது Lviv என அழைககப்படுகிறது.

Lviv என்கின்ற இந்த நகரானது மேற்கு உக்ரேனிய புறநகர்ப் பகுதியில் போலந்து நாட்டின் எல்லைக்கருகில் [Polish border] அமைந்துள்ளது. இது குறிப்பிடத்தக்க சாதனைகளைக் கொண்ட நகரமாகும். இங்கு பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகம் ஒன்று உள்ளது. இது அமெரிக்காவின் ஹவார்ட் பல்கலைக்கழகத்தைவிட பழமையான பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக்கழகம் கணிதத்துறையில் பெயர் போன ஒன்றாகும்.

அத்துடன் இது சட்டத்துறைக்கும் பிரசித்தி பெற்றதாகும். இந்த சட்டப் பாடசாலையில் 1915 தொடக்கம் 1925 வரையான காலப்பகுதயில் இரு மனிதர்கள் கல்வி கற்றனர். இவர்களில் ஒருவர் Hersch Lauterpacht ஆவார். இவர தனது சட்டக்கல்வியை முடித்த பின்னர் இங்கிலாந்தில் உள்ள கேம்ப்றிட்ஸ் பல்கலைக்கழகத்தில் [Cambridge University] அனைத்துலக சட்டத்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றினார். இப்பேராசிரியரே நூரம்பேர்க் விசாரணை தொடர்பான பட்டயத்தில் [Nuremberg Charter] மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் என்ற எண்ணக்கருவை உட்புகுத்தியதற்கு பொறுப்பாளியாவார். இவர் இந்த எண்ணக்கருவை உட்புகுத்தி சில ஆண்டுகளின் பின்னர் Raphael Lemkin என்கின்ற பிறிதொருவர் 1943ல் இனப்படுகொலை என்ற பதத்தை அறிமுகப்படுத்தினார். இவ்விரு சட்டத்துறை வல்லுனர்களும் உக்ரேனிலுள்ள ஒரே சட்டக் கல்லூரியிலேயே கற்றனர் என்பது என்னை ஆச்சரியப்படுத்தியது.

கேள்வி: இனப்படுகொலை என்கின்ற சட்ட எண்ணக்கரு தொடர்பாக நீங்கள் விமர்சனம் செய்வது சரியானதாக இருக்குமா?

பதில்: இந்த எண்ணக்கருக்கள் தொடர்பாக நான் ஒருபோதும் எனது விமர்சனங்களை முன்வைக்க முயலவில்லை. மாறாக எனது கவனத்தை அதிகம் ஈர்த்த இவ்விரு எண்ணக்கருக்கள் தொடர்பாக எனது மனதில் எவ்விதமான சிந்தனைகளும் ஆராய்ச்களும் ஏற்பட்டுள்ளதோ அவற்றை வெளிப்படுத்துவதற்கான முயற்சியிலேயே நான் ஈடுபட்டுள்ளேன்.

அடிப்படையில், மக்கள் தனித்தனியாக கொல்லப்படாது ஒட்டுமொத்த ஒரு குழுவாக கொல்லப்படுவதே இனப்படுகொலை என லெம்கின் கண்டறிந்தார். இந்த மக்கள் குறித்த ஒரு குழுவின் உறுப்பினர் என்ற வகையிலேயே அவர்கள் கொல்லப்படுகின்றனர் அல்லது தீங்கிழைக்கப்படுகின்றனர் என்பது லெம்கின்சியின் கருத்தாக காணப்பட்டது. அதாவது இந்த மக்கள் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்த அல்லது ஒரே இனக் குழுமத்தைச் சேர்ந்த அல்லது ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கமுடியும்.

இது ஒரு உண்மையான நிலை என்பதால் இந்த யதார்த்த நிலையை சட்டம் பிரதிபலித்துக் காட்ட வேண்டும் என லெம்கின் வலியுறுத்தியிருந்தார். ஆனால் இந்த மக்கள் தனி மனித உயிரினங்களாக இருப்பதால் இவர்கள் தனித்தனியாகப் பாதுகாக்கப்பட வேண்டுமே ஒழிய ஒட்டுமொத்த ஒரு குழுவின உறுப்பினர்கள் என்ற வகையில் இவர்கள் பாதிக்கப்படக் கூடாது என Lauterpacht வலியுறுத்துகிறார். இந்நிலையில் இவ்விரு சட்ட வல்லுனர்களுக்கும் இடையில் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றம் மற்றும் இனப்படுகொலை இருவேறுபட்ட எண்ணக்கருக்கள் தொடர்பில் வாக்குவாதம் ஏற்பட்டது. இவர்கள் இருவரும் மக்கள் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்கின்ற பொதுவான நோக்கத்தை ஏற்றுக் கொள்ளாது விடவில்லை. ஆனால் இவர்கள் இருவரும் மக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுப்பதற்கான சிறந்த வழியாக இது தான் இருக்கும் என தமது எண்ணக்கருவை மட்டும் வலியுறுத்திக் கூற முயற்சித்தனர்.

இவ்வாறானதொரு முரண்பாட்டின் மத்தியில் இவ்விரு சட்ட வல்லுனர்களின் இரு வேறுபட்ட எண்ணக்கருக்களையும் நான் ஏற்றுக்கொள்ள வைப்பதற்கான முயற்சியில் நான் ஈடுபடுகிறேன். இவ்விரு எண்ணக் கருக்களும் 1945, 1946 காலப்பகுதியில் வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் 1998ல் உலக அரசாங்கங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றம் மற்றும் இனப்படுகொலை ஆகிய இரு எண்ணக்கருக்களையும் "அனைத்துலக குற்றவியல் நீதிமன்றின்" [International Criminal Court - ICC] சட்டத்தில் இணைத்தன. இவ்விரு எண்ணக்கருக்களும் சட்டத்திற்கு மிக முக்கியமானவை என இந்த உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

கேள்வி: மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றம் என்கின்ற சட்ட எண்ணக்கருவானது குற்றமிழைத்த தனியொருவருக்கு தண்டனை அளிப்பதையும், இனப்படுகொலை என்பது அதனைப் புரிந்த முழுக் குழுவிற்கும் தண்டனை அளிப்பது எனவும் கருதமுடியுமா?

பதில்: இது உண்மையில் சரியானது என நான் கருதுகிறேன். இனப்படுகொலை ஒன்றைப் புரிகின்ற ஒருவர் ஒரு குழுவை அழிப்பதை நோக்காகக் கொண்டே இதனைச் செய்கிறார். ஆகவே இவ்வாறான இனப்படுகொலையைப் புரிகின்ற ஒருவரின் குழுவானது பாதிக்கப்பட்ட குழுவை அழிக்க முயல்கிறது. இதனால் இனப்படுகொலையைப் புரிய நினைப்போர் தண்டிக்கப்பட வேண்டும். இதுவே தொடர்ந்தும் இடம் பெறாதிருக்க வழிவகுக்கும்.

மக்கள் தனியொரு மனிதர்களாக இருப்பதால் கொல்லப்படவில்லை. இவர்கள் அவர்களின் குழுவின் அடிப்படையிலேயே கொனறொழிக்கப்படுகின்றனர். இதனால் லெம்கின் கூறிய இனப்படுகொலைக் கருத்து சரியானதாக தென்படுகிறது.

கேள்வி: உங்களது அபிப்பிராயத்தின் படி, இது தொடர்பில் ஏதாவது செய்யப்பட வேண்டியுள்ளதா? இனப்படுகொலை என்பது சட்ட எண்ணக்கருவிலிருந்து நீக்கப்பட வேண்டுமா?

கேள்வி: இது மிகப் பெரிய கேள்வி என நான் கருதுகிறேன். இவ்வாறான ஒரு கடினமான சூழலை சமன் செய்வதற்கு சட்டம் எவ்வாறான சிறந்த உதவியை வழங்க முடியும் என்பதைக் கண்டறிவதற்கான பணியில் நான் ஈடுபட்டுள்ளேன். பயங்கரமான சம்பவங்கள் இடம்பெறுவதை சட்டத்தால் முற்றாக தடுக்க முடியாது. ஆனால் கடந்த காலத்தில் என்ன நிகழ்ந்தன என்பதை சட்டம் விபரிக்கும். இது பயன்மிக்கது. இவ்வாறான பயங்கரச் சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படுவதை சட்டத்தால் தடுக்க முடியும்.

இவற்றை அடையாளங் காண்பதென்பது மிகவும் சிக்கலான வினாவாகும். இவற்றை ஆராயும் போது, 1940 களின் நடுப்பகுதியில் அமெரிக்காவில் இனப்படுகொலை என்கின்ற எண்ணக்கரு மிகப்பயமாக எதிர்க்கப்பட்டது என்ற உண்மையை கண்டறிய முடிகிறது. குறிப்பாக அமெரிக்காவின் தென் பகுதி செனற்றர்கள இந்த எண்ணக் கருவை மிக வலுவாக எதிர்த்திருந்தனர். இவர்கள் லெம்கினின் கருத்தோடு ஒத்துப் போகவில்லை. ஏனெனில் அந்தக் காலப் பகுதியில், அமெரிக்காவின் தென்பகுதியில் பாரபட்சப்படுத்துதல் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்திருந்ததால் இதனைக் கையாள்வதற்கு லெம்கினின் புதிய சட்ட எண்ணக்கரு பயன்படுத்தப்படலாம் என தென்பகுதி அமெரிக்க செனற்றர்கள் கருதினர்.

குறிப்பாக அமெரிக்காவைச் சேர்ந்த வெள்ளையினத்தவர்களுக்கும் கறுப்பினத்தவர்களுக்கும் இடையில் அப்போது ஏற்பட்டிருந்த குழப்பநிலையை இந்த எண்ணக்கருவானது மேலும் அதிகரிக்கும் என அமெரிக்கர்கள் அச்சப்பட்டனர். நீக்ரோக்கள் என அழைக்கப்பட்ட கறுப்பினத்து அமெரிக்கர்கள் தம் மீதான பாரபட்ச சட்டங்களை எதிர்ப்பதற்கு இந்த எண்ணக்கருவைப் பயன்படுத்லாம் என வெள்ளையினத்தவர்கள் அச்சமுற்றனர். இவ்வாறான விவாதங்களை மேற்கொள்ளும் போது உலகிலுள்ள எந்தவொரு சமூகமும் இவ்விரு சட்ட எண்ணக்கருக்களிலின் தாக்கத்திலிருந்து தப்பிக்க முடியாது என நான் கருதுகிறேன். இது உண்மையில் எங்கள் எல்லோரது உணர்வுகளையும் தொட்டுள்ளதுடன், மனித உயிரினத்தின் நிலைப்பாட்டை கண்டறிவதற்கும் உதவுகின்றது.

கேள்வி: இந்த ஆராய்ச்சி தொடர்பாக நீங்கள் தற்போது புதிய நூலொன்றை எழுதி வருகிறீர்கள். இது தொடர்பாக ஏதாவது கூற முடியுமா?

பதில்: இந்த நூல் அடுத்த ஆண்டு வெளியிடப்படும். அமெரிக்காவிலுள்ள Knopf பதிப்பகத்தால் இது வெளியிடப்பட்டு பின்னர் உலகெங்கும் வெளியிடப்படும் என எதிர்பார்க்கிறேன். இது Lemberg/Lwow/ வாழ்ந்த Lviv நகரத்தை முதன்மைப்படுத்துவதால் இது எனது தனிப்பட்ட புத்தகமாக நான் கருதுகிறேன். இந்த நகரத்தில் லெம்கின் மற்றும் லோற்றர்பாச் ஆகிய இரு சட்ட வல்லுனர்களும் வாழ்ந்த காலத்தில் எனது பாட்டனாரும் இந்த நகரத்தில் பிறந்தார் என்பது எனக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

எனது சொந்த உறவுகளுடன் தொடர்புபட்ட இந்த நகரத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வதை நினைக்கும் போது நான் வியப்படைகிறேன். இந்த நூல் அடுத்த ஆண்டு வெளிவரவுள்ள நிலையில் இது தொடர்பாக குறிப்பாக இதில் விவாதிக்கப்படும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றம் மற்றும் இனப்படுகொலை தொடர்பான இரு வேறு சட்ட எண்ணக்கருக்கள் தொடர்பாக மேலும் விவாதங்களும் கருத்துக்களும் மேற்கொள்ளப்படும் போது நான் மிகவும் மகிழ்வடைவேன்.

**பிலப் சாண்ட்ஸ்-நேரகானல**

**நன்றி: இணையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிராக சபையில் தீர்மானம் நிறைவேற்றுங்கள்!

## அல்லது போராட்டம் தொடரும் தமிழக மாணவர்கள் எச்சரிக்கை!

(கொழும்பு)

**இலங்கைக்கு எதிராக இந்திய அரசு பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றும் வரை மாணவர்கள் போராட்டம் தொடரும்.அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் நீர்த்து போய்விட்டது. அதில் அழுத்தம் கொடுக்கவில்லை.இந்திய அரசு தீர்மானம் கொண்டுவரும்வரை மாணவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளனர் என ஈழத்தமிழர்கள் வாழ்வுரிமைக்கான போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் திவ்யா தெரிவித்தார்.**

போராட்க்குழு ஒருங்கிணைப்பாளர் மேலும் கூறு கையில்,மாணவர்கள் எழுச்சியை தடுக்க முடியாது. போராட்டம் அறிவித்த உடனேயே கல்லூரிகளுக்கு அரசு விடுமுறை அறி விப்பை வெளியிட்டது காலவரையற்ற விடுமுறை என்பதை வாபஸ் பெற வேண்டும்.

மாணவர்கள் போராட்டம் நடந்து வரும் நிலையில் இதுவரையில் அரசு தரப்பில் பேச்சு வார்த்தை நடத்தவில்லை. மாணவர்களுடைய போராட்டத்தில் அரசியல் கட்சிகள் இல்லை.அவர்கள் ஆதரவுதர முன்வந்தார்கள். வெளியில் இருந்து ஆதரவு தந்தால் போதும். போரா்ட்க்களத்திற்குள் வரவேண்டாம் என்று வலியுறுத்தினோம்.அதனால் அரசி யல் கட்சிகள் மாணவர்களை கையில் எடுக்க முடியாது.அரசியல்வாதிகளை அனுமதிக்க கூடாது என்பதில் தெளிவாக இருக்கின்றோம்.

போராட்ட களத்தில் உள்ள சில மாணவர்கள் பல்வேறு அரசியல் அடையாளங்களை சேர்ந்தவர்கள்தான்.ஆனால் அந்த அடையாளத்தை போராட்டத்தில் வெளிக் காட்டவில்லை. மாணவர்கள் என்ற ஒரே அடையாளத்தில்தான் போராடி வருகிறார்கள்.

கல்லூரி மாணவர்களை பொலிஸார் விரட்டி பணிய வைக்க முயற்சி செய்தது. மாணவர்கள் ஒன்று கூடினாலே அழைத்து சென்று கல்லூரி அடையாள அட்டை போன்றவற்றை பிடுங்கினார்கள்.நீண்ட வாக்குவாதத்திற்கு பின் விடுவித்தனர்.

தனியார் கல்லூரி மாணவர்களுக்கு நிர்வாகம் டி.சி. கொடுப்பதாக மிரட்டல் விடுகிறது. அதுபோன்ற முடிவை நிர்வாகம் பரிசீலனை செய்ய வேண்டும். எந்த பிரச்சினைக்காக போராட்டம் என்பதை உணர்ந்து அவர்களும் எங்களுக்கு உத்வ வேண்டும். போராட்டம் ஓய்ந்து விட்டது என்று நினைக்க வேண்டாம். தொடர்ந்து நடைபெறும் மாணவர்களின் போராட்டத்தை ஒடுக்கி விட முடியாது, நசுக்கி விட முடியாது.


இலங்கை தமிழர்களுக்காக மாணவர்கள் அணிதிரள்வதை யாராலும் தடுக்க முடியாது. மாணவர்கள் பல்வேறு அமைப்புக்களாக பிரிந்திருக்கலாம்.

அவரவர் வலியுறுத்தும் கோரிக்கை வேறாக இருக்கலாம். ஆனால் போராடக் கூடியவர்கள் மாணவ சமுதாயம் .ஒவ்வொருவருடைய இலக்கு வேறாக இருக்கலாம்.

போராட்ட களம் ஒன்றுதான் தமிழ் ஈழ விடுதலைக்கான போராட்ட குழு. அடுத்த கட்டமாக மத்திய அரசை முடக்கும் வகையில் தொடர் போராட்டங்களை அடுத்தத்து நடத்த உள்ளது.

கல்லூரிகள் திறந்தாலும் மாணவர்கள் போராட்டம் தொடரும். வாரம் இருமுறை சென்னை உள்ளிட்ட மத்திய பகுதியிலும் தமிழகம் முழுவதும் போராட்டங்கள் நடை பெறும் என அவர் கூறினார். (அ-2)

## அரச பொது ஊழியர் சங்க செயலாளராக நியமனம்



(யாழ்ப்பாணம்)

அரசாங்க பொது ஊழியர் சங்க யாழ்ப்பாண மாவட்டக்கிளைச் செயலாகராக சி.ஜெயசங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்

இச்சங்கத்தில் உறுப்பினராக சேர விரும்புவர்கள் எஸ்.ஜெயசங்கர் செயலாளர், அரசாங்க பொது ஊழியர் சங்கம், கரவெட்டி பிரதேச செயலகம் என்னும் முகவரியுடன் அல்லது 0777110331என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

## ஹெரோயின் வைத்திருந்த அறுவர் கைதாகினர்

வீடொன்றினுள் ஹெரோயின் பொதி செய்து கொண்டிருந்த பெண் உள்ளிட்ட ஐவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பாதுக்க -மீகொட பிரதேசத்தில் இடம்பெற்றது.

மேல் மாகாண புலனாய்வு பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து 727 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் ஹெரோயின் 3 கிராம் 100 மில்லி கிராம் வைத்திருந்த பெண் ஒருவர் வெலிக்கடை-ஒபே சேகரபுர பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-2)

## ரணில்- சந்திரிகா -மங்கள இணைந்து இரகசிய சந்திப்பு?

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர ஆகியோர் வெளிநாட்டவர்களுடன் இணைந்து இரகசியமான முறையில் பேச்சு வார்த்தைகளை நடத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பேச்சுவார்த்தை கடந்த 23 ஆம் திகதி காலியில் அமையப்பெற்ற பிரபல விடுதியொன்றில் இடம்பெற்றுள்ளது.

குறித்த விடுதிக்கு சென்ற இவர்கள் நீண்ட கலந்துரையாடலை நடத்தியுள்ளதுடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் மத்தியில் உரையாற்றியுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன. இந்த பேச்சுவார்த்தையில் 25 வெளிநாட்டவர்கள் கலந்து கொண்டுள்ளனர். இது குறித்து அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி வருவதாக கூறப்படுகிறது. (அ-2)

## மின்சாரக் கட்டண உயர்வு ஏழைகளுக்கு விழுந்த அடி!

### ஐ.தே.கட்சி தெரிவிப்பு

மின்சாரக்கட்டண உயர்வினால் பாரியளவு பாதிப்பு ஏற்படும் என ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

மின்சாரக்கட்டணமாக இதுவரை 100-200 ரூபா வரை செலுத்தி வந்தவர்கள் அடுத்த மாதம் முதல் ஆயிரம் ரூபா முதல் ஆயிரத்து 500 ரூபா வரையில் செலுத்த நேரிடும் என ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டண உயர்வு சாதாரண பொது மக்களைப் போன்றே சிறு தொழிலாளர்களையும் வெகுவாகப் பாதிக்கும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அமைச்சர்களினால் பாரியளவு பிரசாரம் செய்து நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை மற்றும் கெரவலபிட்டிய மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு என்ன வாயிற்று?

எதிர்வரும் மாதம் முதல் மக்கள் மின்சாரக் கட்டண உயர்வினால் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது

(கொழும்பு)

இந்திய எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரா அருகே புலிகாட் ஏரியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை கடலோர பொலிஸ் படையினர் சோதனையிட்டதில் அவர்கள் இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் என்பதும் தாங்கள் வழி தவறி விட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

அம் மீனவர்கள் ஐந்து பேரும் கடலோர பொலிஸ் படையினால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பயன்படுத்திய படகு மற்றும் 300 கிலோ மீன்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (அ-2)

## கலாசார நிகழ்வுகளினூடாக இன உணர்வை வளர்க்க முடியும்

*கலாசார அமைச்சர் ஏக்கநாயக்க*


(கொழும்பு)

கலை, கலாசார மற்றும் பாரம்பரிய நிகழ்வுகளின் ஊடாக இனங்களிடையே உறவையும் ஒற்றுமையும் ஏற்படுத்த முடியும். இது நீண்ட கால இன சௌஷன்யத்துக்கும் வழிவகுக்கும் என கலாசார அமைச்சர் ரீ.பி ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் காரணமாக இனங்களிற்கிடையே காணப்பட்ட கசப்புனணர்வுகளை மறந்து இன்று இந்த இடத்தில் நடைபெறுகின்;ற இந்த திறப்பு விழாவின் ஆரம்ப நிகழ்வில் சகல இனங்களையும் பிரதிபலிக்கும் வகையில் பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ ஆராதனைகளு டன் நடைபெற்றதை நினைக்கின்ற போது மிகவும் சந்தோசமடைகின்றேன்.

எனவே தான் கலை, கலாசார நிகழ்வுகளினுடாக இன உறவையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த முடியும். அதற்கு முன்னுதார ணமே இன்றைய நிகழ்வுகளாகும். நாட்டில் கலை, கலாசார பாரம்பரியங்களையும் இன உறவையும் வளர்க்கும் நோக்குடன் ஜனாதிபதியின் மகிந்த சிந்தனைக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் 160 கலாசார மத்திய நிலையங்களை அமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த கலாசார நிலையம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படுகின்றது என்றார். (அ-2)




மாதகல் பாணாவெட்டை அம்மன் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றபோது....

(படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் பிரச்சினை தீர்வுக்கு பொதுவாக்கெடுப்பு நடத்துங்கள்

## தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்



ஈழத்தமிழர்களுக்கு எந்த வகையிலும் பயன்படாத சூழ்நிலை உருவானதால் மத்திய அமைச்சரவையில் இருந்தும் கூட்டணியில் இருந்தும் தி.மு.க. விலகியது. இதை செயற்குழு முழுமையாக ஏற்கிறது. ஈழத்தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இதற்கான தீர்மானத்தை இந்தியா ஐ.நா.மனித உரிமை ஆணையத்துக்கு எடுத்து சென்று நிறைவேற்ற வேண்டும்.

சென்னையில் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி தலைமையில் நேற்று முன்தினம் அவசர செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

இச்செயற்குழு கூட்டத்தில் இலங்கை விவகாரம் தொடர்பாக 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதில் இலங்கை அரசை கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அத்தீர்மானங்கள் வருமாறு,

ஈழத்தமிழர்களுக்காக தமிழகம் முழுவதும் நடைபெறும் அறப்போராட்டத்தை ஒடுக்க கல்லூரிகளை மூடுவதையும் பொலிஸார் மூலம் போராட்டம் ஒடுக்கப்படுவதையும் செயற்குழு கண்டிக்கிறது.

தமிழக மீனவர்களை பாதுகாக்க வலிமையான நடவடிக்கையை மத்திய அரசு இனியும் காலம் தாழ்த்தாமல் மேற்கொள்ள வேண்டும்.

இனப்படுகொலை நடத்திய இலங்கையில் நவம்பர் மாதம் கொமன்வெல்த் மாநாடு நடக்கவுள்ளது. இதை இந்தியா புறக்கணிக்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இதில் ஈழத்தமிழர்களை அழித்தொழித்து, இனப்படுகொலை செய்த இலங்கையில் கொமன்வெல்த் மாநாடு நடைபெறுவது ஏற்கக்கூடியது இல்லை.எனவே, எக்காரணம் கொண்டும் அம்மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது என்று கொமன்வெல்த் தலைமைச் செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

இதை மீறி மாநாடு இலங்கையில் நடத்தப்பட்டால் உலகத் தமிழர்களின் உணர்வுகளை எதிரொலிக்கும் வகையில் அந்த மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பொதுச்செயலாளர் க. அன்பழகன், பொருளாளர் மு.க.ஸ்டாலின், துணை பொதுச் செயலாளர்கள் துரைமுருகன், சற்குணபாண்டியன், வி.பி.துரைசாமி, முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன், கனிமொழி எம்.பி, குஷ்பு மற்றும் முக்கிய தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், எம்.எல்.ஏக்கள், எம்பிக்கள், செயற்குழு உறுப்பினர்கள் என 150 க்கும் மேற்பட்டவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (அ-2)

# நாட்டுக்கெதிரான அழுத்தங்களை நீடிக்க விடக் கூடாது- கயந்த எம்.பி

அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றத் தவறியமையால் இன்று எமது நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதென பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக் கையில்,

அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற தவறியமையால் இன்று உலகளாவிய ரீதியில் எமது நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்பட்டதற்கு நாட்டில் ஆட்சியில் இருக்கும் அரசாங்கமே முழுக்காரணம். எமது நாட்டிற்கு எதிராக சர்வதேச அழுத்தங்களை நீடிக்க விடாது இராஜதந்திர ரீதியில் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த அரசு நாட்டில் உள்ள மக்களுக்கு ஒன்றை கூறி விட்டு சர்வதேசத்திற்கு வேறொன்றை தெரிவித்து நாடகமாடுகின்றது. இந்நிலையில் எமது நாட்டிற்கு எவ்வித வெளித் தலையீடுகளும் வரக்கூடாது என்பதே எமது நிலைப்பாடென அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# தமிழகத்தின் செயற்பாடுகள் சார்க் வலய நாடுகளை பாதிக்கும்

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழக அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் சார்க் வலய நாடுகளையே பாதிக்கும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கை யாத்திரிகர்கள் மீது தமிழகத்தைச் சேர்ந்த சிலர் திட்டமிட்ட வகையில் தாக்குதல் நடத்துவது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும்.

இலங்கை அரசியல்வாதிகள் அல்லது அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்தினால் அதன் அர்த்தத்தை புரிந்து கொள்ள முடியம். எனினும் அப்பாவி யாத்திரிகர்கள் மீது தாக்குதல் நடத்துவதனை எந்தவகையில் நியாயப்படுத்த முடியும்.

இவ்வாறான தாக்குதல்களை தடுக்க மாநில அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமை அந்த மாநிலத்தின் ஜனநாயக ஆட்சி தொடர்பான கேள்விகளை எழுப்பியுள்ளது.

தமிழக அரசியல்வாதிகள் தங்களது அரசியல் நோக்கங்களுக்காக இவ்வாறு குழப்பங்களை விளைவித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சர்வதேச அழுத்தங்களுக்காக இறைமையை தாரைவார்க்கோம்

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச சமூகம் எவ்வாறான அழுத்தங்களை பிரயோகித்தாலும் நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் தாரைவார்க்க இடமளிக்கப்பட மாட்டாது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு அளித்த நேர்காணலின் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் டொலர்களை விடவும் நாட்டின் சுயாதீனத்தன்மையை மதிக்கின்றது.

வெளிநாட்டு உதவிகள் மற்றும் உடன்படிக்கைகளுக்காக அரசாங்கத்தின் கொள்கைகளை விட்டுக் கொடுக்க முடியாது.

அரசாங்கத்தின் குறைபாடுகள் இருந்தால் அவற்றைத் திருத்திக் கொண்டு வெற்றிகரமாக அபிவிருத்திப் பாதையில் நகரவே விரும்புகின்றோம். மக்கள் கட்சி பேதமின்றி அரசாங்கத்துடன் இணைந்திருக்கின்றமையினால் உள்நாட்டு, வெளிநாட்டு சவால்களை வெற்றிகொள்ள முடிகின்றது.

நாட்டின் அனைத்து இன மக்களையும் கருத்திற் கொண்டே அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கின்றது.

வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகள் நாட்டுக்கு எதிராக சூழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

மக்கள் ஆணைக்குழு முரணான வகையில் அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்காது என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இந்து சமய திணைக்களத்தினால் இந்து சமய நூல்கள் கொள்வனவு

(கொழும்பு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கை தமிழ் எழுத்தாளர்களிடமிருந்து தமிழ் நூல்களில் ஒரு தொகுதியைக் கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளது என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசன் தெரிவித்துள்ளார்.

எழுத்தாளர்கள்படைப்பாற்றலை ஊக்குவிக்கு முகமாகவும் கொள்வனவு செய்யப்படும் நூல்களை நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த நூலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நோக்குடனும் இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

இதன்படி நாவல், சிறுகதை, கவிதை , இலக்கிய விமர்சனம் பல்துறை என பல்வகையான நூல்கள் திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்டபோதும் இந்துசமய நூல்களைப் படைக்கும் எழுத்தாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதில்லை என பலராலும் ஆதங்கம் தெரிவிக்கப்பட்டமைக்கமைய இந்த ஆண்டு முதல் அதிக அளவான இந்து சமய நூல்களைக் கொள்வனவு செய்யத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

அதற்கமைய இந்து சமய தத்துவங்களை வளர்க்கும் வகையான நூல்களை எழுதும் இந்த நூலாசிரியர்களிடமிருந்து ஒரு வருடத்தில் வெளியிடப்படும் மூன்று நூல்களின் பிரதிகளின் ஒரு தொகுதி திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்படும்.

கொள்வனவு செய்யப்படும் நூல்கள் நூலகங்கள், அறநெறிப்பாடசாலைகளின் நூலகங்கள், போட்டிகளில் பங்கேற்கும் அறநெறி மாணவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)



யாழ். அராலி இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்ட போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் பிடிக்குள் இலங்கை இல்லை

ஜெனீவாவில் கடந்தவாரம் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானம், இந்தியாவின் பலவீனத்தை வெகுவாகவே உலக அரங்கில் வெளிப்படுத்தியுள்ளது. உண்மையில் அமெரிக்கா கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தினால் இலங்கையைவிட அதிகம் தலைவலியை எதிர்கொண்டது இந்தியாதான். இது இலங்கைக்கு அல்ல, இந்தியாவுக்கு அமெரிக்கா வைத்த பரீட்சை என்றே விமர்சனங்கள் பலரும் கருதுகின்றனர்.



இலங்கையை சமாளிப்பது ஒன்றும் அமெரிக்காவுக்குப் பெரிய வேலை இல்லை என்றும் இலங்கைப் போரில் இந்தியா வகித்த பங்கை காரணம் காட்டி, இந்தியாவை தன்பக்கம் மேலும் இழுத்துக் கொள்வதற்கு அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சியே என்றும் அவர்கள் கருதுகின்றனர். இந்தக் கருத்து எந்தளவுக்கு சரியானது என்பது ஒருபுறம் இருக்கட்டும். ஆனால், ஜெனீவா தீர்மான விவகாரம், இந்தியாவின் உறுதியற்ற வெளிவிவகாரக் கொள்கை மற்றும் அதன் இராஜதந்திர பலவீனங்களை வெளிச்சம் போட்டுக் காண்பித்துள்ளது என்பதை மட்டும் மறுக்க முடியாது.

புதுடில்லியில் உறுதியான அரசியல் தலைமைத்துவம் ஒன்று இல்லாததன் விளைவே இந்த நிலைக்கு காரணம் என்பது இந்தியாவின் அரசியல் ஆய்வாளர்களின் கணிப்பு.

இந்திராகாந்திக்குப் பின்னர் அத்தகைய உறுதியான அரசியல் தலைமை புதுடில்லியில் அமையவில்லை. ராஜீவ்காந்திக்கு போதிய அரசியல் அனுபவம் இருக்கவில்லை. அதனால் அவரால் தற்துணிவுடன்செயற்பட முடியவில்லை. ஆட்சியியல் தந்திரங்களை கற்றுக்கொள்ளத் தொடங்கிய போது அவர் உயிருடன் இல்லை. அவரையடுத்து ஆட்சியில் அமர்ந்த வி.பி.சிங், சந்திரசேகர், தேவகௌடா போன்றவர்கள் கூட்டணிக் கட்சிகளின் தாளத்துக்கு ஆடும் பொம்மைகளாகவே இருந்தனர். பி.வி. நரசிம்மராவ், ஐ.கே. குஜ்ரால், மன்மோகன்சிங் போன்றவர்கள் நேரு குடும்பத்துக்கும் கொங்கிரஸ் கட்சிக்கும் நோகாமல் ஆட்சி செய்ய வேண்டிய நிலையில் இருந்ததாலும் அவர்களின் கடிவாளம் சோனியாவிடம் இருந்ததாலும் எதையும் செய்ய முடியவில்லை.

இந்திரா காந்திக்குப் பின்னர் வெளிவிவகார மற்றும் பாதுகாப்புக் கொள்கை விடயங்களில் ஓரளவுக்கேனும் சமரசத்துக்கு இடம் கொடுக்காமல் தற்துணிவுடன் நடந்துகொண்டவர் என்றால் அடல் பிகாரி வாஜ்பாய் மட்டும்தான். அணுகுண்டுச்சோதனை விடயத்தில் அமெரிக்காவின் எச்சரிக்கையை கண்டு கொள்ளாமல் போனதிலும் சரி, கார்கில் போரைக் கையாண்ட விதத்திலும் சரி, இலங்கையில் தமிழர்களுக்கு விரோதமான செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கி நின்றதிலும் சரி, வாய்பாயின் அணுகுமுறை பரவலாகவே வரவேற்கப்படுகிறது. வாஜ்பாய், இந்தியாவின் சார்பில் உறுதியான முடிவை எடுக்கக் கூடிய அளவுக்கு பலமான ஒரு தேசியத் தலைவராகவே இருந்தார்.

ஆனால், காங்கிரஸ் கட்சி நியமித்த பிரதமர்கள் எவருமே தற்துணிவுடன் முடிவெடுக்கத்தக்கவர்களாகவோ, தேசியத் தலைவர்களாகவோ இருக்கவில்லை. இதன் காரணமாக, வெளிவிவகாரக் கொள்கை விடயத்தில், சவுத் புளொக்கில் உள்ள கொள்கை வகுப்பாளர்களே, எல்லா முடிவுகளையும் எடுப்பவர்களாக மாறிவிட்டனர். ஒரு அரசாங்கத்தில், வெளிவிவகாரக் கொள்கை வகுப்பாளர்கள் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றனர். அதேவேளை, கொள்கை வகுப்பாளர்களின் முடிவுகளுக்கு அமையவே எல்லா நேரங்களிலும் நாட்டை வழிநடத்த வேண்டிய தேவை அரசியல் தலைமைகளுக்கு இல்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில், முக்கியமான முடிவுகளை தன்னிச்சையாக எடுப்பதற்குரிய அதிகாரம் அரசியல் தலைமைகளுக்கு உள்ளது.

மணிக்கூட்டு முள்போன்று எல்லா நேரங்களிலும் கொள்கை சார்ந்து செயற்படுவதுதான் ஒரு அரசியல் தலைமையின் கடமையல்ல. அவ்வப்போது தேவையின் நிமித்தம், எல்லை மீறுவதற்கு அரசியல் தலைமைகளுக்கு தற்துணிவு இருக்க வேண்டும்.

இந்திராகாந்தி தனது தற்துணிவின் பேரில்தான் கிழக்கு பாகிஸ்தானைப் பிரிக்க போரை நடத்தினார். அதன் பின்னர் பங்களாதேஷ் இந்தியாவின் காலடியில் இருந்தது. அதுபோலவே, அமெரிக்க சார்பு அணியின் கைப்பாவையாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கத்தை வழிக்குக் கொண்டுவரும் உத்தியாகவும் தமிழர் பிரச்சினையை தீர்க்கும் கருவியாகவும், இலங்கையில் தமிழ்ப் போராளிகளின் ஆயுதப் போராட்டத்துக்கு அவர் ஊக்கமளித்திருந்தார். இவை இந்திராகாந்தியின் தனிப்பட்ட தற்துணிவின் பேரில் இடம்பெற்றவை.

இந்தியாவின் பேச்சை இலங்கை செவிமடுக்கும் நிலையில் இருந்திருந்தால், கடந்தவாரம் ஜெனீவாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை அது எதிர்த்திருக்கக்கூடாது. ஏனென்றால், தீர்மானத்தை எதிர்க்க வேண்டாம் என்று இந்தியா திரும்பத் திரும்ப கொழும்புக்கு ஆலோசனை கூறியது. அதனை வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் வெளிப்படையாகவே கூறியிருந்தார். அதுமட்டுமன்றி தீர்மானத்தை பலவீனப்படுத்த அமெரிக்காவுடன் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டை எட்டுமாறும் கூறியது. எனினும் இந்தியாவின் பேச்சை இலங்கை கணக்கில் எடுக்கவில்லை. அமெரிக்காவுடன் இணைந்து தீர்மானத்தை முன்வைக்க இலங்கை தயாராக இருக்கவில்லை. தீர்மானத்தை எதிர்ப்பதிலேயே அது உறுதியாகியிருந்தது. இதனால் இலங்கை விவகாரத்தில் இந்தியா எதையும் செய்யத்தக்க நிலையில் இலங்கையை தனது பிடிக்குள் வைத்திருக்கக்கூடிய நிலையில் இல்லை என்பது வெளிப்படையானது. அதுமட்டுமன்றி தீர்மானத்தை இலங்கை எதிர்க்கப் போகிறது என்று தெரிந்ததும் அதை நீர்த்துப்போக வைத்த இந்தியாவே கடைசியில் வெளிப்படையாக திருத்தங்களை முன்வைத்தது.



இது மிகவும் கேலிக்கூத்தான ஒரு விடயமாகவே பார்க்கப்பட்டது. யாருடைய சொற்படி இந்திய வெளிவிவகாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது என்ற கேள்வியை இது எழுப்பியது.

மேலும் தி.மு.க.வின் அழுத்தங்களை அடுத்து, நாடாளுமன்றத்தில் இலங்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தைக் கொண்டுவர முயன்றபோது கூட, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியது மன்மோகன்சிங் அரசாங்கம்.

ஜெனீவா தீர்மானத்தில் திருத்தம் செய்யப்போவதாக அறிவித்து விட்டு கடைசியில் ஒன்றும் செய்யாமல் தமிழ்நாட்டின் வெறுப்பைத் தலையில் வாங்கிக் கொட்டிக் கொண்டது மத்திய அரசு.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை என்பது நடுநிலையானதாகவோ, நீதியின் பாற்பட்டதாகவோ வகுக்கப்படவில்லை என்பதையும் தனியே சீனா, பாகிஸ்தான் என்ற சக்திகளை மையப்படுத்தியே அது செயற்படுவதையும் இந்த விவகாரம் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

இனப்படுகொலை என்ற பதத்தை தீர்மானத்தில் சேர்த்தால், சீனா, பாகிஸ்தானுடன் இலங்கை நெருக்கமாகிவிடும் என்ற சவுத் புளொக் கொள்கை வகுப்பாளர்களின் ஆலோசனையை மீறி, இந்திய அரசியல் தலைமைகளால் எதையும் செய்ய முடியவில்லை. அதிகாரத்தில் உள்ள யாருமே சுயமாக முடிவெடுக்கத்தக்க நிலையில் இல்லாமல் போனதால் தான், தமிழ்நாட்டில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி தி.மு.க.வின் ஆதரவை இழக்க நேரிட்டது.

உள்நாட்டு மக்களின் விருப்பங்களைப் புறக்கணிக்கும் ஒரு வெளிவிவகாரக் கொள்கையை சவுத் புளொக் வகுத்துக் கொடுத்துள்ளதால் புதுடில்லியின் பலவீனமான தலைமைத்துவமும் நலிந்துபோன இராஜதந்திரமும் சர்வதேச அரங்கில் வெளிச்சமாகியுள்ளது.

ஒரு காலத்தில் இந்தியா என்பது பிராந்தியத்தில் ஒரு வலுவான சக்தியாக கணிக்கப்பட்டது. ஆனால், இன்று புதுடில்லியில் உள்ள பலவீனமான தலைமைத்துவத்தினால் இந்தியா வெறும் படைபலம் கொண்ட நாடாக மட்டும் திகழ்கிறதேயன்றி பிராந்தியத்தில் தனது வல்லாண்மையை- பிடியை காப்பாற்றிக் கொள்ள முடியாத நிலைதான் உள்ளது. இந்தப் பலவீன நிலைக்கு இந்தியா முடிவு கட்டும் வரை இலங்கை விவகாரத்தில் இந்தியாவினால் ஒருபோதும் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவோ அல்லது தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் தலையீடு செய்யவோ முடியாத காரியமாகவே இருக்கும்.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு. வடக்கு கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(வவுனியா)

வவுனியா வடக்கு வலயத்திற்குட்பட்ட வ/ ஓமந்தை மத்திய கல்லூரி தரம் 1 AB பாடசாலையினது அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1,2-I ஐச் சேர்ந்த மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு வவுனியா மாவட்டத்திற்குட்பட்ட வலயங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

அதிபர் சேவையில் தகுதியானவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்திலேயே ஆசிரியர் சேவையினைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை மாகாணக்கல்வித் திணைக்களத்திலும் வவுனியா வடக்கு, தெற்கு வலயங்களிலும் பார்வையிட்டு அதற்கமைய தங்கள் விண்ணப்பத்தினை எதிர்வரும் மார்ச் மாதம் 15 திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி மாகாணக்கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அதிபர் சேவை தரம் 1,2-I ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் வவுனியா வடக்கு வலயத்தினைச் சேர்ந்த அதிபர் சேவை தரம் 2-II ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும். (அ)

# கைவினையாளர்களுக்கு ஏப்ரலில் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய அருங்கலைகள் பேரவையின் மாகாண மற்றும் தேசிய மட்ட கைவினை கண்காட்சியினை முன்னிட்டு நடத்தப்படும் யாழ். மாவட்ட கைவினையாளர்களுக்கான விசேட செயலமர்வு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் பன்ன வேலை, தோற்பொருள் உற்பத்தி, சிலைவடிவமைப்பு, வார்ப்புச் சிற்பங்கள், சிற்பச் செதுக்கல்கள், தையல் வடிவமைப்பு போன்ற துறைகளின் கைவினைஞர்கள் மற்றும் ஏனைய கைவினைஞர்கள் ஆகியோர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட செயலக தேசிய அருங்கலைகள் பேரவையின் அபிவிருத்தி உதவியாளர் க.நவதர்சன் அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும் இச் செயலமர்வின் நிறைவில் கைவினைஞர்களை பதிவு செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)




★1513-நாடுகாண் பயணி ஜுவான் பொன்ஸ் டி லெயோன் வட அமெரிக்காவைக் (புளோரிடா) கண்டுபிடித்தார்.

★1625-முதலாம் சார்ள்ஸ் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் அயர்லாந்து மன்னராக முடிசூடினார். அத்துடன் பிரான்ஸ் மன்னனாகவும் தன்னை அறிவித்தான்.

★1854-கிரிமியாப் போர்: ஐக்கிய இராச்சியம் ரஷ்யா மீது போரை அறிவித்தது.

★1918-மல்தோவா, பெசராபியா ஆகியன ருமோனியாவுடன் இணைந்தன.

★1941- இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியாவில் அச்சு அணி ஆதரவு அரசாங்கம் யூகொஸ்லாவிய வான் படையினரால் கவிழ்க்கப்பட்டது.

★1958-நிக்கிட்டா குருஷேவ் சோவியத் பிரதமர் ஆனார்.

★1968-விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதர் சோவியத் ஒன்றியத்தின் யூரி ககாரின் விமான விபத்தொன்றில் உயிரிழந்தார்.

★1969- நாசாவின் மரைனர் 7 என்ற ஆளில்லா தானியங்கி விண்கலம் செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்டது.

★1970-கொன்கோர்ட் விமானம் தனது முதலாவது சுப்பர்சொனிக் பயணத்தை மேற்கொண்டது.

★1993-ஜியாங் செமின் மக்கள் சீனக் குடியரசின் ஜனாதிபதினார்.

**பிறப்புக்கள்**

★1845-வில்ஹெம் ரொண்ட்ஜென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1923)

★1847-ஒட்டோ வல்லாச், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1931)

★1892- சுவாமி விபுலாநந்தர், யாழ். நூல் எழுதியவர் (இ.1947)

★1901-எய்சாக்கு சாட்டோ, நோபல் பரிசு பெற்ற ஜப்பானியப் பிரதமர் (இ.1975)

★1942-ஜோன் சல்ஸ்டன், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய அறிவியலாளர்

★1886-லுட்விக் மீஸ் வான் டெர்ரோ, ஜேர்மனிய கட்டடக் கலைஞர் (இ.1969)


**இறப்புக்கள்**

★1898-சர் சையது அகமது கான், இந்திய அறிஞர் (பி.1817)

★1967-யாரொஸ்லாவ் ஹெய்ரோவ்ஸ்கி, நோபல் பரிசு பெற்றவர் (பி.1890)

★1968- யூரி ககாரின், விண்வெளி வீரர் (பி.1934)

### சுவாமி விபுலானந்தர்



சுவாமி விபுலானந்தரின் இயற்பெயர் மயில்வாகனன் ஆகும். இவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் ஊரில் 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி சாமித்தம்பி கண்ணம்மா தம்பதியருக்கு மகனாக பிறந்தார்.

1912 ஆம் ஆண்டு முதல் தனது ஆசிரியப் பணியை மேற்கொண்ட இவர் தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வில் தோற்றி பண்டிதர் பட்டத்தையும் பெற்றார். இலங்கையிலிருந்து இப்பட்டத்தை முதன் முதல் பெற்றவர் சுவாமி விபுலானந்தரே.

தொடர்ந்து அவரது ஆசிரியப் பணி, விரிவுரைகள் மாணவர் மத்தியில் சிறந்தவரவேற்லைப் பெற்றது. இவர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் என்ற கழகத்தை அமைத்து தமிழை வளர்க்கும் தொண்டாற்றினார்.

பின்னர் ஆசிரியப் பதவியைத் துறந்து 1922 ஆம் ஆண்டில் இராமகிருஷ்ண மிஷனில் இணைந்து சுவாமி சிவானந்தரினால் பிரபோத சைத்தன்ய பிரிவில் பிரமச்சாரிய தீட்சையும் சந்நியாச தீட்சையும் வழங்கப்பட்டன. 1924 ஆம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தில் சுவாமி சிவானந்தரால் சுவாமி விபுலானந்தர் என்ற துறவறப் பெயர் வழங்கப்பட்டது.

இராம கிருஷ்ண மிஷன் இமயமலைப் பகுதியில் உள்ள அல்மோறா என்ற இடத்தில் மாயாவதி ஆசிரமத்தில் இருந்து வெளியிடும் பிரபுத்த பாரத என்ற சஞ்சிகையின் ஆசிரியராக 1934 ஆம் ஆண்டில் விபுலானந்த அடிகள் நியமிக்கப்பட்டார். அப்போது இசைத் தமிழ் பற்றிய முழுமையான ஆய்வினை மேற்கொண்டு அரிய நூலாகிய யாழ். நூல் உருவாக்கம் பெற்றது.

1943 ஆம் ஆண்டில் இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கிய போது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக தெரிவு செய்யப்பட்டார். தமிழ் ஆய்வுத்துறை எவ்வழியில் செல்ல வேண்டும் என்ற திட்டங்களை சுவாமி விபுலானந்தரே வகுத்தார்.

யாழ். நூல் அரங்கேற்றத்துக்கு பின்னர் உடல் பாதிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பினார். 1947 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி சமாதி நிலை அடைந்தார். அவரது உடல் அவர் உருவாக்கிய மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தின் முன்னாலுள்ள மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.

# ஆங்கில துணை வள நிலையத்தில் முகாமையாளர் பதவி வெற்றிடம்

(மன்னார்)

வட மாகாணத்திற்குட்பட்ட ஆங்கில துணை வள நிலைய (மன்னார்) முகாமையாளர் பதவிக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை அல்லது இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-I அல்லது இலங்கை ஆசிரியர் சேவை தரம்1, 2-I ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரி ஆங்கில மொழியை பாடமாகக் கொண்ட ஒரு பட்டதாரியாக அல்லது ஆசிரிய கலாசாலையில் ஆங்கில பயிற்சி பெற்றவராக அல்லது தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கில பாடடிப்ளோமா பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தகுதியானவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்திலேயே அதிபர் சேவையினைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சுயமாக தயாரிக்கப்பட்ட தங்கள் விண்ணப்பத்தினை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி மாகாணக்கல்வி திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அதிபர் சேவை தரம் 1, 2-I ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் ஆசிரியர் சேவை தரம் 1, 2-I ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும். (அ)

# திரவ சவர்க்கார தயாரிப்பு பயிற்சி

கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் கை கழுவும் திரவ சவர்க்காரத் தயாரிப்பு பயிற்சி நெறி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி நெறிக்கென ஏற்கனவே பதிவு செய்த பயனாளிகளும் பயிற்சி நெறியில் பங்கு பெற ஆர்வமுள்ள பயனாளிகளும் குறித்த தினத்தன்று கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்திற்கு வருகை தந்து இப்பயிற்சி நெறியில் பங்கு பற்றி பயன்பெறுமாறு கரவெட்டி பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (அ)

# இந்திய கடலோரமூடாக ஹெரோயின் கடத்தல்

(கொழும்பு)

இந்திய கடலோரம் ஊடாக ஹெரோயின் கடத்தப்படுவதாக கடற்படை அதிகாரி பி.எஸ்.சி. குணவர்த்தன உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இலங்கை- இந்திய கடலில் ஹெரோயின் கடத்தப்படுவதை தம்மால் கண்டுபிடிக்க முடியாது என்றும் குருநகர் முகாமைச் சேர்ந்த தம்மிடம் கடற்கரை பாதுகாப்பு கடமைக்காக நவம்பர் 28 ஆம் திகதி 2011 இல் படகு தரப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இலங்கையைச் சேர்ந்த மீனவர் போல காணப்பட்ட சிலர் ஒரு சிறு படகில் சென்று கொண்டிருந்த போது இந்திய கரையிலிருந்து வந்த ஒரு ரோலர் இவர்களை அணுகியது எனவும் ரோலரில் வந்தவர்கள் இலங்கையர்களிடம் ஒரு பொதியை கொடுப்பதை தாம் நவீன கருவி மூலம் அவதானிக்க முடிந்தது எனவும் இதைத் தொடர்ந்து இவர்களை கைது செய்ததாகவும் இந்த பொதியில் இருந்தது ஹெரொயின் என பின்னர் அறியப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கைது செய்யப்பட்ட மூன்று இலங்கையர்களும் ஐந்து இந்தியர்களும் காங்கேசன்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டதாக அவர் கூறினார். இந்த வழக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர் தொடர்மாடி குடியிருப்பை புனர்நிர்மாணம் செய்து தாருங்கள்

## விமல் வீரவன்சவுக்கு மக்கள் கடிதம்

(கொழும்பு)

அடிப்படை வசதிகளற்ற யாழ்.குருநகர் தொடர்மாடிக் குடியிருப்பை புனர்நிர்மாணம் செய்து தருமாறு அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு மக்கள் கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

1986 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நாடு முழுவதிலும் தொடர்மாடி வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் குருநகரில் 160 வீடுகள் கொண்ட தொடர்மாடி வீடமைப்புத் திட்டம் நிர்மாணிக்கப்பட்டது.

கடந்த கால யுத்தத்தின் போது இவ் வீடமைப்புத்திட்டம் வெகுவாகப் பாதிக்கப்பட்டு அடிப்படை வசதிகள் அற்று வீடுகளும் அதனை அண்டியுள்ள 8 கட்டடங்களும் முற்றாக சேதமுற்று காணப்படுகின்றன.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத நடுப்பகுதியில் இவ் வீடமைப்புத் திட்டத்தினை யாழ்ப்பாணத்திற்கு வந்துநேரடியாக அமைச்சர் விமல் வீரவன்ச பார்வையிட்டார்.

அச்சமயத்தில் இவ் வீடமைப்புத்திட்டத்தில் வாழும் மக்களும் அமைச்சரைச் சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தனர். அமைச்சர் உடன் செயற்படும் வகையில் அங்கு சமுகமளித்திருந்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மற்றும் அதிகாரிகளுக்கும் இவ் வீடமைப்புத் திட்டத்தினை மீள நிர்மாணக்கும்படியும் 9 மாத காலத்திற்குள் நிர்மாணப் பணிகளை முடிக்கும்படியும் காலக்கேடு விதித்திருந்தமையும் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தின் மீள்நிர்மாணத்திற்காக 85 மில்லியன் ரூபாவுக்கான நிதி தேவைப்படுவதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியல் பிரிவு கணக்கிட்டுள்ளது. 8 கட்டடங்களுக்கும் மீள் நிர்மாணிக்கவென 63.56 மில்லியன் ரூபா, வீதி அபிவிருத்திக்கு 4.18 மில்லியன் ரூபா ஏனைய மழைநீர், கழிவு நீர் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கும் 8 மில்லியன் ரூபாவுக்கான கணக்கீட்டை அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இத்திட்டத்தினை 9 மாத காலத்திற்குள் முடிப்பதற்கும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்திருந்தது.

யாழ்.குருநகர் தொடர்மாடி வீடமைப்பு திட்டத்தின் வாழ் மக்கள் இவ்வீடமைப்புத் திட்டத்தினை நவீனமயப்படுத்தும் திட்டத்தினை துரிதப்படுத்தி வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தும் படியும் இத்திட்டத்தில் வாழும் மக்களும் வீடுகளைப் பகிர்ந்தளிக்குமாறு அமைச்சர் விமல் வீரவன்சவிடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-4)

# 2ஆயிரம் ஏக்கரில் சோயா அவரை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிறுபோகத்தின் போது சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் சோயா அவரை பயிரிட விவசாயத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

தற்போது தரிசாகக் காணப்படுகின்ற வயல் காணிகள் மற்றும் வேறு செய்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள தரிசு நிலங்கள் என்பவற்றை இதற்காகப் பயன் படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்போது செய்கையாளர்களுக்குத் தேவையான விதைகள், உரம் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்கும் அவர்களின் அறுவடைகளை விற்பனை செய்வதற்கும் தேவையான வசதிகளை விவசாய திணைக்களத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக தென் மாகாணத்தில் தரிசாகத் காணப்பட்ட வயல்களில் மருத்துவ குணமுடைய உள்நாட்டு புரதான நெல்வகைகளைப் பயிரிடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ-2)


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## மூங்கில்

**Botanical Name-**
***bambusa arundinaceae***
**Family-bambusaceae**
**Engl-bamboo tree**

பூக்கும் ஒரு வித்திலைத்தாவரமாகும். நெடுங்காலம் வாழக்கூடியது. மூங்கிலும் புல் இனம்தான். புல்லைப் போலவே மூங்கிலுக்கும் கிழங்குண்டு. அரிசியும் உண்டு. மூங்கில்



30 ஆண்டுக்கு ஒரு தடவைதான் பூத்துக் காய்க்கும். வறண்ட பகுதிகளில் கல்மூங்கிலும், ஈரச்செழிப்புள்ள இடங்களில் பொந்து மூங்கிலும் வளருகின்றது. மூங்கிலில் 550 இனங்கள் உண்டு. அதில் 136 இனங்கள் இந்தியாவில் உள்ளது. இலங்கையிலும் பல இன மூங்கில் உண்டு. கல்மூங்கில் 6 முதல் 15 மீற்றர் உயரமும் 2.5 முதல் 7.5 செ.மீ விட்டமும் உடையது. இதன்பட்டை தடிப்பானது.

பொந்துமூங்கில் 24-30 மீற்றர் நீள முடையது. 15 முதல் 17.5 செ.மீ. விட்டமுடையது. இதன் பட்டை சற்றுத் தடிப்புக்குறைவு. பஞ்சகாலங்களில் ஏழைகளுக்கு வயிற்றுக்கு சோறிட்டதும் மூங்கிலரிசிதான். அதனால்தான் இதற்கு பஞ்சந்தாங்கி என்று பெயர்.

தண்டின் கணுவில் தோன்றும் கிளைகள் முட்களுடன் இருக்கும். உட்கூடு உள்ளது. மிக வலிமையானது. 8 அங்குல நீளம் உடையது இலை. ஒரு அங்குல அகலம் இருக்கும். இலைச்செதில்கள் நீண்டு மயிரடர்ந்து பழுப்பு நிறமாக இருக்கும். மங்கிய வெண்ணிற மலர்கள் பல பூந்துணரில் இருக்கும். மெல்லிய, சற்று நீளமான விதை.

மூங்கிலில் சுமார் 550 இனங்கள் உண்டு. இதில் 136 இனங்கள் இந்தியாவில் உள்ளது. இலங்கையிலும் பல இன மூங்கில்கள் உண்டு. மூங்கில் முளை சத்துள்ள உணவு

100 கிராம் முளையிலுள்ள சத்துக்கள்

புரதம்-4கிராம்
கொழுப்பு-0.5கிராம்
காபோவைதரேற்று-7.5கிராம்
பொஸ்பரஸ்-90 மி.கிராம்
கல்சியம்-20 மி.கிராம்
இரும்பு -0.1 மி.கிராம்
நியாசின்-200 மி.கிராம்
ஈரலிப்பு- 87.1 கிராம்

பச்சை மூங்கில் முளைகளில் நஞ்சுத்தன்மையுள்ள சைனோஜெனிட்டில் குளுக்கோசைட்டும் பென்சோயிக் கமிலமும் உள்ளன. வேகவைத்த முளையில் இந்த நஞ்சு இல்லை.

**மூங்கில் உப்பு**

இதன் மூங்கிலுப்பும் மருத்துவ குணம் மிகுந்தது. இதில் 96.9% சிலிக்கன் டைஒக்சைட், நுண்ணிய இரும்பு, கல்சியம், அலுமினியம் போன்ற காரப்பொருட்கள் உள்ளன.

100 கிராம் மூங்கிலரிசியில்
ஈரலிப்பு-7.8 கிராம்
புரதம்-18.10 கிராம்
கொழுப்பு-1.2 கிராம்
நார்ப்பொருள்-0.90 கிராம்
கல்சியம்-37 மி.கிராம்
பொஸ்பரஸ்-16.2 மி.கிராம்
இரும்பு-6.4 மி.கிராம்
தயமின்-0.11 மி.கிராம்
ரிபோபிளேவின்- 0.12 மி.கிராம்

அரிசி, கோதுமையைவிட மூங்கிலரிசி 50% அதிக சத்துள்ளது.

✧ மூங்கிலரிசி நீரிழிவு நோயாளர்களுக்கு சிறந்தது. மூங்கிலரிசியால் பித்த ரோகங்களும் தணியும்.

✧ மூங்கிலுப்பு, கொத்தமல்லி சம எடை எடுத்து பொடித்து அரித்து 1-2 கிராம் அளவு காலை, மாலை எடுக்க தலைவலி, தலைப் பாரம் தணியும்.

✧ சந்தனம்

வெண்தாமரைப்பூ இதழ், ஏலரிசி ஒவ்வொன்றும் 30 கிராம் எடுத்து மூங்கிலுப்பு 20 கிராம் எடுத்து பொடித்து, அரித்து 2 கிராம் காலை, மாலை கொடுக்க இருதயத்தை பலப்படுத்தும்.

✧ மூங்கிலுப்பை கல்வத்திலிட்டு பன்னீர் விட்டு மிளகளவு மாத்திரை பசும்பாலில் கலந்து தர எரிவு, தாகம், சுரம் , காயம், காசம், இருமல், நீர்க்கட்டு தீரும்.

✧ மூங்கிலுப்பு, வெள்ளைக் காய்ச்சிக்கட்டி வகைக்கு 12g எடுத்து வால்மிளகு-24g, சீனிச் சர்க்கரை-36g இவற்றை சூரணம் செய்து பசும்பாலில் தர மேக நோய்கள் தீரும்.

✧ மூங்கிலுப்பு, வல்லாரைத்தூள் சம அளவு கலந்து தேனில் கொடுக்க எலும்புச் சூடு, வெட்டை தீரும்.

✧ மூங்கிலுப்பு- 1g ஐ 100ml பாலிலிட்டு காய்ச்சி தேன் கலந்து தர மூக்கு சம்பந்தமான நோய்கள் தீரும்.

**மூங்கிலரிசி**

மூங்கிலிலிருந்து எடுக்கப்படும் மூங்கிலரிசி மருத்துவ குணங்கள் நிறைந்தது. 100g மூங்கிலரிசியில்

நீர்- 7.8 g
புரதம்- 18.1 g
கொழுப்பு- 1.2 g
நார்ப்பொருள்- 0.9 g

✧ இந்த மூங்கில்அரிசி நீரிழிவு நோயாளிகளுக்கு மிகச் சிறந்த உணவு.

✧ மூங்கில் அரிசியில் குருதி சுழல்நோய், இடைவிடாச்சுரம், கண்ணோய் தீரும். மூங்கில் இலையின் சாறும் மருத்துவ பயன் நிறைந்ததாகும்.



✧ மூங்கில் இலைச்சாறும் காடியும் கூட்டிப் பூச இடுப்பு பிடிப்பு தீரும்.

✧ இலைச்சாறும் தேனும் கலந்து தர இருமல் தீரும்.

✧ இலைச்சாறும் சிருங்கி பற்பமும் சேர்த்து தர நெஞ்சுவலி குணமாகும்.

✧ மூங்கில் குருத்தோடு உப்பு, மிளகு சேர்த்து தர கழிச்சல் குணமாகும்.

✧ இலையால் வாதநோய்களும் மாத விடாய் கோளாறுகளும் குணமாகும்.

✧ மூங்கிலின் வேரிலும் மருத்துவ குணங்கள் காணப்படுகின்றன.

✧ வேரை அரைத்து சொறி சிரங்குகளுக்கு தடவ குணமாகும்.

✧ இதை குடிநீரிட்டுதர சுரவெப்பம்தணியும்.

மூங்கில் இலையின் சாம்பல் புண் ஆற்றும். அதைக் கொண்டு பல் தேய்க்க முத்துப் போல் பிரகாசிக்கும்.

குறிப்பு:-பொதுவாக சித்தவைத்தியர்களால் பயன்படுத்தப்படும் மருந்துகளில் ஒன்றான தாளிசாதி ஆரணம்-சளி, இருமல், கபநோய்களில் பயன்படுத்தப்படுகிறது. இதில் மூங்கிலுப்பு பிரதானமான கூறாக சேர்க்கிறது. இது கப நிலையினை குறைத்து சுபக்குவ நிலையில் இருந்து பக்குவ நிலைக்கு மாற்றி சளியினை வெளியேற்ற உதவும். ஏனெனில் மூங்கிலுப்பில் கார்ப்பு சுவை அதிகமாக காணப்படுகிறது.

எனவே இது கபத்தினை கண்டிப்பதாக அமையும். அத்துடன் தாளிசாதியில் கார்ப்புச்சுவை அதிகமாக காணப்படுவதால் இச்

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

சூரணத்திற்கு சம பங்குக்கு சீனி சேர்ப்பது அவசியமாக அமைகிறது.

இவ்வாறு சீனி சேர்ப்பது பற்றி சித்த வைத்தியர்கள் கவனத்திற்கொண்டு சீனி சேர்த்து இதனை பயன்படுத்த வேண்டும். ஏனெனில் தாளிசாதியில் மூங்கிலுப்பின் காரத்தன்மையை குறைப்பதற்கு காரணமாக அமைகிறது.

✧ மூங்கிலை பயன்படுத்தப்படும் மூங்கிற்பாய்க்கு, நீரெரிச்சல், கிரீச்சரம் சுழல் நோய் ஆகியன பெருகும். ஆனால் வாத நோய்கள் குறையும்.

✧ மூங்கிலின் இளமுளைகளை நசுக்கி பிழிந்து சாறெடுத்து அழுகல் புண்ணுக்கு பூசி, பின்னர் அதை சிதைத்து வைத்து கட்ட அப்புண்களிலுள்ள பூச்சிகள் வெளியேறி விடும். புண்ணும் ஆரும்.

✧ முளைகளை ஊறுகாய் செய்து உண்ண பசியை உண்டு பண்ணி செரியாமையைப் போக்கும்.

✧ எலும்பு முறிவுக்கு சிற மூங்கிலைப் பத்தைகளாக வைத்து கட்டலாம்.

✧ மூங்கிலுப்பு-மூங்கில் கணுக்களில் தங்கி நிற்கும். இதில் 4கிராம் எடைக்கு திப்பிலி- 2g/ ஏலம்- 1 g, இலவங்கம்- 1/2 g, சர்க்கரை 8 கிராம் ஆகப் பொடித்து கலந்து வேளைக்கு 4 g எடைவீதம் ஐயநோய், இருமல், இரைப்பு முதலியவைகளுக்கு கொடுக்கலாம்.

✧ ஆடாதோடை இலை, சீந்தில் கொடி வகைக்கு 60 கிராம் எடுத்து குடிநீர் செய்து அதில் மூங்கிலுப்பு, திப்பிலி, அதிமதுரம் வகைக்கு-10 கிராம் நெய்-100மி.லீ. விட்டு அரைத்து காய்ச்சி வடிகட்டி உச்சிக் கரண்டியளவு நெய்பாலில் கலந்து சாப்பிட சுவையின்மை, மயக்கம், குன்மம், காசம் குணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கிரங்கள் திருட்டு குறித்து முறையிட்டும் பயனேதுமில்லை

## மக்கள் வருத்தம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சில இந்து ஆலயங்களில் பல இலட்சம் ரூபா பெறுமதியான விக்கிரகங்கள் திருடப்பட்டமை குறித்து பொலிஸாரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டார்களா? அல்லது விசாரணைகள் இடம்பெறுகின்றனவா? என்பவை குறித்து தமக்கு எதுவும் தெரியாதுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை, முல்லைத்தீவு, ஒட்டுச்சுட்டான் ஆகிய பிரதேசங்களில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மூன்று வருடங்களுக்குள் அங்குள்ள இந்து ஆலயங்களில் பல இலட்சம் ரூபா பெறுமதியான ஆலய விக்கிரகங்கள் திருடப்பட்டன. இச்சம்பவங்கள் தொடர்பாக அவ்வப்பகுதி பொலிஸ்நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால், இன்று வரை அச்சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்டார்களா? அவை தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றனவா? என மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இவை தொடர்பான பூரண தகவல்கள் தமக்கு வழங்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

# சர்வதேச சக்திகளின் முன் அரசாங்கம் மண்டியிடாது

## பிரதமர் ஜயரட்ன தெரிவிப்பு

மேற்குலக நாடுகள் முன்னிலையில் மண்டியிட்டு அவர்களின் சப்பாத்துக்களை நக்குவது தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் கொள்கையல்ல என பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார். கண்டி போகம்பரை சிறையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டபோதே பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

அனைத்து நாடுகளுடனும் மனிதத் தன்மையுடன் பேசி சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வருவதால் எந்தச் சந்தர்ப்பத்திலும் நாட்டின் கௌரவத்தைக் காட்டிக் கொடுக்க அரசாங்கம் தயாரில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

சில குறுகிய நோக்கம் கொண்ட அரசியல் குழுக்கள் பல்வேறு காலங்களில் மேற்குலக நாடுகளினால் மண்டியிட்டன. இந்தக் குழுக்கள் தற்போது அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்து அடிப்படையற்ற விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன.

பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் வேலைத் திட்டத்தில் பல அழுத்தங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் மேற்குலக நாடுகள் முன்னால் அரசாங்கம் மண்டியிடவில்லை.

இதனால் சர்வதேச சக்திகள் முன்னால் அரசாங்கம் மண்டியிடப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஓய்வூதியங்கள் கொள்ளை!- சரத்

தமது ஓய்வூதியம் கொள்ளையிடப்பட்டதைப்போல் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் ஓய்வூதியமும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். முன்னாள் பிரதமநீதியரசரை இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவிற்கு அழைத்து அவரது கணவர் மீது வழக்குகளை தொடுத்து தற்போதைய அரசாங்கம் இவர்களுக்கு எதிராக வைராக்கியத்துடனும் கோபமாகவும் செயற்பட்டு வருகிறது.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது 100 ஆக இருந்த அமெரிக்கடொலர் தற்போது 130 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 5 வருடங்கள் இந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தால் ஒரு டொலரின் விலை 200 ஆக அதிகரிக்கும் எனவும் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார். (அ-2)

# மூலிகைச் செடிகளை இனங்காண புதிய இணையத்தளம் ஆரம்பம்

மூலிகைச்செடிகளை மிகச் சரியாக இனங்கண்டு கொள்ளக் கூடியவாறு இணையத்தளமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. றுகுணு பல்கலைக்கழகம், பாபேரியன் ஆயுர்வேத உல்லாசப் பயண ஹோட்டல்கள், குழுமம் மற்றும் தேசிய வைத்தியத்துறை அமைச்சு ஆகியன இந்த இணையத்தளத்தை ஆரம்பிப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

றுகுணு பல்கலைக்கழகத்தின் தாவரவியல் விஞ்ஞானக்கல்விப் பிரிவின் பேராசிரியர் எல்.பீ.ஜயதிஸ்ஸவின் தலைமையில் மருத்துவ மூலிகைகள் உள்ளடங்கிய இணையத்தளம் கட்டமைக்கப்பட்டுள்ளதுடன் அதில்பல்வேறு வகையான மருத்துவ மூலிகைகளைப் பற்றிய தகவல்கள் அடங்கியுள்ளதாக தேசிய வைத்தியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அவற்றை இனங்கண்டு கொள்வதற்கு வசதியாக புகைப்படங்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் மருத்துவப் பயன்பாடு, உணவுக்குப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய பகுதிகள், தாவரவியல் பெயர்கள் இந்த இணையத்தளத்தில் உள்ளடங்கியிருப்பதாகவும் தேசிய வைத்தியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)

# தமிழகத்திற்கு பயணிக்காதவாறு ஓராண்டு கால தடை விதியுங்கள்

## ஒமல்பே தேரர் கோரிக்கை

தமிழகத்திற்கு பயணிக்காதவாறு ஓராண்டு கால பயணத்தடை விதிக்கப்பட வேண்டுமென ஒமல்பே சோபித தேரர் கோரிக்கை விடுத்துள்ளார். இந்தியாவில் உள்ள சில அடிப்படை வாதிகள், இலங்கையர்கள் மீது அண்மைக்காலமாக தாக்குதல் நடத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

கிறிஸ்தவ யாத்திரிகர்கள், விளையாட்டு வீரர்கள், இலங்கை உயர்ஸ்தானிகராலயம், பௌத்த பிக்குகள் என பல்வேறு தரப்பினரையும் இந்திய தமிழகத் தலைவர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இலங்கையில் உள்ள இந்திய நிறுவனங்கள் மற்றும் இந்தியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றது.

இலங்கையர்களின் பொறுமை மிகவும் வியக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது. இந்தத் தருணத்தில் இந்தியர்களுக்கு எதிராக போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களையும் தவிர்ப்பது பொருத்தமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மூன்று நாடுகளுக்கு மிருகங்கள் பரிமாற்றம்

## மிருகக்காட்சிச்சாலை திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

மிருகங்களைப் பரிமாற்றும் திட்டத்தின் கீழ் நாடுகள் சிலவற்றின் மிருகக்காட்சிசாலைகளுடன் மிருகங்களை பரிமாற்றிக் கொள்ள தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இந்தியா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளுடன் மிருகங்களைப் பரிமாற்றிக்கொள்ள உள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் அனுர டி சில்வா குறிப்பிட்டார்.

இந்தியாவின் டில்லி மிருகக்காட்சிசாலைக்கு அனகொண்டாக்கள் வழங்கப்படவுள்ளன. அதற்குப் பதிலாக இந்தியாவிலிருந்து மான் இனங்கள் நாட்டிற்குக் கொண்டுவரப்படவுள்ளன.

ஜப்பான் நகோயா மிருகக்காட்சிசாலைக்கு இலங்கையிலிருந்து சிறுத்தை ஜோடியொன்று வழங்கப்படவுள்ளதுடன் ஜப்பானிலிருந்து 5 பென்குயின் ஜோடிகள் நாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளன.

இதுதவிர சீனாவின் மிருகக்காட்சிச்சாலையுடனும் மிருகங்கள் பரிமாறப்படவுள்ளதாக தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)


**University of Jaffna, Sri Lanka**
**Faculty of Graduate Studies**

**Admission for Postgraduate Research Programme**
**Master of Philosophy (M.Phil) & Doctor of Philosophy (Ph.D.) – 2013**

Applications are invited from qualified persons for enrollment to the Master of Philosophy (M.Phil.) and Doctor of Philosophy (Ph.D.) research programmes offered by the Faculty of Graduate Studies, University of Jaffna in the disciplines listed below.

**M.Phil. : -**
Agricultural Engineering, Sanskrit, Fine Arts (Art History & Aesthetic), Music, Management [Human Resource Management, Accounting Management, Financial Management, Marketing Management]

**M.Phil. / Ph.D.:**
Agricultural Biology, Agricultural Chemistry, Agronomy, Animal Science, Agricultural Economics, Geography, Economics, History, Political Science, Tamil, Linguistics, Philosophy, Physiology, Pharmacology, Biochemistry, Botany, Zoology, Fisheries Science, Physics, Chemistry, Computer Science, Mathematics & Statistics

**Medium** Tamil / English

**Duration** Full Time (M.Phil. – 02 years : Ph.D. – 03 years)
Part Time (M.Phil. – 03 years : Ph.D. – 04 years)

**Total Fees**

| For Social Science Field | | For Science Field | |
|---|---|---|---|
| M.Phil. | Ph.D. | M.Phil. | Ph.D. |
| 128,000.00 | 183,000.00 | 188,000.00 | 243,000.00 |

**Closing Date for Application** : 20/05/2013

**Applications**
Relevant information and prescribed application forms could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna (T.P. : 021 222 3608) on production of receipt in support of a payment of **Rs. 1000/-** per application form to the University Account number **162-1-001-6-0000880** at the People's Bank, Jaffna University Branch, Thirunelvely. Those who wish to obtain application form by post are requested to send a money order of **Rs. 1000/-** per application form drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope** 22.5 x 10 c.m. (9" x 4") in size.

Duly completed applications should be sent to the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely by registered post or by hand **on or before the closing date of application**. Indicate "*Application for M.Phil. / Ph.D. – 2013*" on the top left hand corner of the envelop.

For further details, please see the website www.jfn.ac.lk

**Incomplete, Illegible or late applications will not be considered.**


**Note :**
**Applicants will be selected on the basis of**
**(1) availability of supervisor in the particular topic of research.**
**(2) availability of admission in the particular field of research.**

Registrar
25/03/2013


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.ஜி.ஆர். இருந்திருந்தால் தமிழீழம் பிறந்திருக்கும்!

## பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ்



(சென்னை)

**இலங்கைப் பிரச்சினையில் இந்திராகாந்திக்கும் எம்.ஜி. ஆருக்கும் மட்டுமே முழுமையான அக்கறை இருந்தது. தி.மு.க., அ.தி.மு.க. இரு கட்சிகளுமே தொடர்ந்து நாடக மாடி வருகின்றன. உண்மையிலேயே அந்தக் கட்சிகளுக்கு இலங்கை தமிழர்கள் மீது அக்கறை இல்லை என பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

ஊட்டியில் செய்தியாளர்களை சந்தித்து பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களவையில் இலங்கைத் தமிழர் நல்வாழ்வு தொடர்பாகவும் ராஜபக்ஷவை போர்க்குற்றவாளி என்றும் அறிவிப்பதற்கும் மத்திய அரசு தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

இலங்கைப் பிரச்சினையில் இந்திராகாந்திக்கும் எம்.ஜி.ஆருக்கும் மட்டுமே முழுமையான அக்கறை இருந்தது. அவர்கள் இருவரைத் தவிர வேறு யாருக்குமே அக்கறை இல்லை.

அவர்கள் இருவர் மட்டும் இன்னும் சிறிது காலம் இருந்திருந்தால் தமிழீழம் பிறந்திருக்கும். ஆனாலும் பா.ழ.க. மட்டுமே தடம் மாறாமல் தொடர்ந்து போராடி வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மக்களவைத் தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சினையே பிரதான பிரச்சினையாக இருக்கும். இதனால் திராவிட இயக்கங்களோடும் தேசியக் கட்சிகளோடும் பா.ம.க. கூட்டணி அமைக்காது தனித்துப் போட்டியிடவுள்ளது. இம்முறை பா.ம.க. பத்து தொகுதிகளில் போட்டியிடும்.

இலங்கை பிரச்சினை விவகாரத்தில் மாணவர் போராட்டம் சிறப்பாக உள்ளது. இருந்தாலும் தேர்வு நேரத்தை கருத்தில் கொண்டு மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு தேர்வு எழுத கவனம் செலுத்த வேண்டும். தேர்வு முடிந்தவுடன் விடுமுறையில் போராட்டத்தை தொடரலாம் என குறிப்பிட்டார். (அ-5)

# நச்சு வாயு வெளியிடும் ஆலையை மூடக்கோரி தூத்துக்குடியில் போராட்டம்

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூட வலியுறுத்தி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்ட ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ உட்பட 88 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தூத்துக்குடி சிப்காட் பகுதியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலையிலிருந்து சனிக்கிழமை அதிகாலை வெளியான நச்சுவாயு காரணமாக ஏராளமானோர் பாதிக்கப்பட்டனர். இதனால் கண் எரிச்சல், மூக்கரிப்பு, தொண்டை வலி, மூச்சுத் திணறல் உள்ளிட்டவை ஏற்பட்டதால் மக்கள் பீதியடைந்தனர்.

இதையடுத்துஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக பல்வேறு அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் வைகோ தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவதற்காக பேரணியாகச் சென்றுள்ளனர்.

இதன்போது மாவட்ட ஆட்சியாளர் அலுவலக நுழைவு வாயில் அருகே அவர்களைத் தடுத்து நிறுத்திய பொலிஸார் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ உட்பட 88 பேரை கைது செய்தனர். (அ-5)

# உதவி தொகை வழங்குவதை கடுமையாக்கியது பிரிட்டன்

பிரித்தானியாவில் வந்து குடியேறும் வெளி நாட்டினருக்கு கொடுக்கப்படுகின்ற அரச உதவிப் பணம் சம்பந்தமான விதிகளை கடுமையாக்கும் திட்டங்களை பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் அறிவித்துள்ளார்.

குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பிற நாடுகளில் இருந்து பிரிட்டனில் வந்து குடியேறியவர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதற்கு நியாயமான வாய்ப்பு உள்ளது என்று அவர்கள் நிரூபிக்காத பட்சத்தில் வேலை தேடுவோருக்கான வாழ்வாதார உதவித் தொகை ஆறு மாதங்களுடன் நிறுத்தப்படும்.

அத்துடன் அரசுக்கு வரி செலுத்தாமல் வேலை பார்ப்பதற்கு எதிராகவும் விதிகள் கடுமையாக்கப்படுகின்றன.

பிரிட்டனில் இருந்து வெளியேறுபவர்களை விட பிரிட்டனுக்குள் வந்து குடியேறுவோரின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ளது என்று கூறிய பிரதமர், ஆனாலும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும் என்பதற்காக பிரிட்டன் வருபவர்களை அரசாங்கம் வரவேற்கவே செய்கிறது என்று தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அண்மையில் சேர்ந்துள்ள பல்கேரியா, ரொமேனியா போன்ற நாடுகளில் இருந்த மக்கள் பிற ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று குடியேறுவதில் இருந்து வந்த தடை அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் விலகும் என்ற நிலையில் பிரிட்டனுக்குள் நிறைய பேர் புதிதாக வந்து குடியேறலாம் என்ற கவலை எழுந்துள்ளது. (அ-2)

# சிறுபான்மையினருக்கு எதிரான குற்றங்களை கண்காணிக்க வேண்டும்

## அமெ. பாராளுமன்ற குழு கோரிக்கை

அமெரிக்காவின் சிறுபான்மையினருக்கு எதிரான குற்றங்களைக் கண்காணித்து விபரங்களை சேகரிக்க வேண்டுமென புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐயிடம் அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட குழு கோரிக்கை விடுத்துள்ளது.

சிறுபான்மையினருக்கு எதிரான குற்றங்கள் குறித்து விவாதிக்க அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர் குழு விவாதம் நடத்தியது. இவ்விவாதத்தில் 100 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்ட ஜனநாயக கட்சியின் ஜோன் காராமெண்டி தெரிவிக்கையில்,

அமெரிக்காவில் வாழும் இந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லிம்கள் மற்றும் அரேபிய அமெரிக்கர்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடைபெற்று வருவது கவலையளிப்பதாக உள்ளது.

அந்த சிறுபான்மை மக்கள் அச்சத்தில் வாழ்ந்து வருகிறார்கள். ஜனநாயக நாட்டில் அவர்கள் அச்சத்துடன் வாழ்வது அமெரிக்காவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதாக அமைந்துவிடும்.


இந்நிலையை தடுக்க சிறுபான்மையினருக்கு எதிரான குற்றங்களைக் கண்காணிக்கவும் அவற்றை தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கவும் எப்.பி.ஐயிடம் பரிந்துரை செய்துள்ளோம்.

இந்த விவகாரம் குறித்து விரிவான அறிக்கையைத் தயார் செய்யுமாறு கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளோம். இது குறித்து சட்டத்துறை உயர் அதிகாரிகளுக்கும் எப்.பி.ஐ: அதிகாரிகளுக்கும் இரண்டு மாதங்களுக்கு முன்பே கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கடந்த 2001 செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி நடைபெற்ற இரட்டைக் கோபுர தாக்குதலில் 2 ஆயிரத்து 977 பேர் உயிரிழந்ததை அமெரிக்கர்கள் மறக்கவில்லை. அதன்பின்னரே சிறுபான்மையினர் மீதான தாக்குதல் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் சிறுபான்மையினருக்கு எதிரான குற்றப்பிரிவு சட்டங்களை திருத்தத்துடன் கடுமையாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என ஜோன் காராமெண்டி தெரிவித்துள்ளார். (அ-5)

# குரைப்பதில் கின்னஸ் சாதனை படைத்த நாய்




கோல்டன் ரெட்ரீவர் வகை நாய் ஒன்று அதி உச்ச ஒலியுடன் குரைத்து கின்னஸ் உலக சாதனை புரிந்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரைச் சேர்ந்த பெலிண்டா ப்ரீபெரன் என்பவரின் நாயே மேற்படி சாதனையை பதிவு செய்துள்ளது.

6 வயதான குறித்த நாய் ஒரு போட்டியில் 113.1 டெசிபல் அளவு ஒலியுடன் குரைத்து பார்வையாளர்களை அச்சுறுத்தியது.

இவ் ஒலியுடன் குரைத்ததன் மூலம் இந்நாய் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டில் லண்டனை சேர்ந்த ஜேர்மன் ஷெப்பர்ட் நாய் ஒன்று 108 டெசிபல் அளவுக்கு குரைத்ததுவே இதுவரை சாதனையாக இருந்து வந்த நிலையில் இந்த சாதனை தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சார்லி என பெயரிடப்பட்டுள்ள இந்நாய் குரைத்தால் எழும் ஒலி ராக் இசையின் போது எழும் ஒலி இரும்பு ஆலைகளில் வெளிப்படும் ஒலி ஆகியவற்றை விடவும் அதிகமெனவும் சார்லியால் தமக்கு எவ்வித தொல்லையும் இல்லை என்பதோடு அது தாம் கட்டளையிட்டால் மட்டுமே குரைக்கும். மற்ற நேரங்களில் சமத்தாக அமைதியாக இருக்கும் என குறித்த நாயின் உரிமையாளர் கூறியுள்ளார்.

மேலும் சார்லி கின்னஸ் உலக சாதனை புரிந்தது எங்களுக்கெல்லாம் பெருமையாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக மனிதர்கள் பேசும் ஒலி 60 டெசிபல் அளவு இருக்கும். சில விலங்குகள், சுரங்கப் பாதையில் ரயில் செல்லும்போது எழும் (100 டெசிபல்) ஒலியை விட அதிக ஒலியை எழுப்பும் என அறிய முடிகிறது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்னாபிரிக்காவில் நடைபெறுகின்ற பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக 4 நாட்கள் பயணமாக பிரதமர் மன்மோகன் சிங் சென்றுள்ளார். அந்நாட்டு டர்பன் விமான நிலையத்தில் அவருக்கும் அவரது பாரியாரான குர்சரண் கவுருக்கும் வரவேற்பு வழங்கப்பட்டபோது...

# பாக்.கிற்கு இடைக்கால பிரதமர் நியமனம்

பாகிஸ்தானின் இடைக்கால பிரதமராக ஓய்வு பெற்ற நீதிபதி மிர் ஹஸர் கான் கோசோ (வயது 84) திங்கட்கிழமை முதல் பொறுப்பேற்றுள்ளார்.

பாகிஸ்தான் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் தேர்தலை சுதந்திரமாக நடத்துவதற்கு வசதியாகவே அந்நாட்டு சட்டப்படி இடைக்கால பிரதமர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இடைக்காலப் பிரதமரைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே ஒருமித்த கருத்து ஏற்படாததையடுத்து இந்தப் பொறுப்பு தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இதன்படி பல்வேறு பெயர்களைப் பரிசீலித்த தேர்தல் ஆணையம் இடைக்காலப் பிரதமராக ஓய்வு பெற்ற நீதிபதி மிர் ஹசர் கான் கோசோவைத் தேர்வு செய்தது. தற்போது பிரதமராக தேர்வு செய்யப்பட்ட பலுசிஸ்தான் மாகாணம் ஜாஃபராபாதைச் சேர்ந்த கோசோ இதற்கு முன்பு பலுசிஸ்தான் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும் ஷரியா மத்திய நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும் பதவி வகித்துள்ளார். (அ-5)

எடுத்ததற்கெல்லாம் குறை சொல்லிக் கொண்டிருக்க புத்திசாலி தேவையில்லை. வாய்மட்டும் போதும். ~ ராபர்ட் வேஸ்ட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை குறைகூறாதீர்கள்

இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம், தமிழ் மக்கள் பட்ட காயங்களுக்கு ஒத்தணமாகாது என்ற கருத்துக்கள் பரவலாக எழுந்துள்ளன.

இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் உள்ளடக்கப்படாமையினால், அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணை வலுவானதல்ல என்பது தமிழ்த் தரப்பின் கருத்து.

அதேநேரம் ஜெனிவாத் தீர்மானத்திற்கு அதிகளவு ஆதரவு கிடைத்திருந்தாலும் வெற்றி இலங்கை அரசிற்கு என்ற சுப்பிரமணிய சுவாமியின் கருத்தும்,

எங்களை யாரும் எதுவும் செய்துவிட முடியாது என்ற அரச தரப்பின் மார்தட்டலும் தீர்மானம் இலங்கை அரசைக் கடுமைப்படுத்தாது என்பதை அங்கீகரிப்பதாக உள்ளன.

ஆனால், இங்குதான் முக்கியமான இரு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

அதாவது இலங்கை மீது போர்க் குற்ற விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் உட்பட தமிழ் மக்களுக்கு அவசியமான தீர்மானங்களை அமெரிக்கா தனது பிரேரணையில் உள்ளடக்கி இருந்தாலும் அதனை இந்தியா மறைமுகமாகத் தட்டி விட்டது.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் இந்தியாவின் ஆதரவு அவசியம் எனக் கருதும் அமெரிக்கா, இவ்விடத்தில் இந்தியாவின் கோரிக்கைக்கு இசைய வேண்டியதாயிற்று.

ஆக, இலங்கை அரசைக் காப்பாற்றுவதென்ற முடிபில் இந்தியா விடாப்பிடியாக இருந்தமையால் காத்திரமான தீர்மானங்களைக் கைவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை அமெரிக்காவுக்கு ஏற்பட்டது.

இதுதவிர, இலங்கை அரசிற்கு எதிரான தீர்மானம் என்பது அமெரிக்காவின் வெளிநாட்டு ராஜதந்திரிகளின் அறிக்கைகளின் அடிப் படையிலும், மனித உரிமை அமைப்புகள் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் கோரிக்கைகள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகளின் கருத்துக்கள், சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணங்கள் என்பனவற்றின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டதாகும்.

உண்மையில் அமெரிக்காவின் தீர்மானத்திற்கு வலுச்சேர்ப்பதில் ஈழத்தமிழர்களின் அரசியல் தலைமைகள் கணிசமான பங்கைக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு,

நெல்சன் மண்டேலா அல்லது யசீர் அரபாத் போன்ற தலைவர் ஈழத்தமிழர்களுக்கு இருப்பது அவசியம்.

ஆனால் அத்தகையதொரு தலைவர் ஈழத் தமிழர்களுக்கு இல்லாததும், தீர்மானம் காத்திரமற்றுப்போவதற்கு காரணமாகும்.

எனவே தீர்மானம் தொடர்பில் அமெரிக்காவை குறை நினைப்பது தவறு.

# அமெரிக்காவின் தீர்மானம் தற்கொலைக்குச் சமனானது

## குணதாச அமரசேகர ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

ஐ.நா. மனிதவுரிமை பேரவையில் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட அமெரிக்க-இந்திய யோசனைக்கு இணங்குவது தற்கொலை செய்வதற்கு ஈடானது என தேசிய அமைப்புக்க ளின் ஒன்றியத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இந்த யோசனைக்கு விரும்பி இணக்கம் தெரிவித்தால் போர் நடைபெற்ற போது கூட அடிபணியாத இலங்கைக்கு நிபந்தனைகள் இன்றி வெளிநாட்டு விசாரணையாளர்கள் வருவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

இதனால் அமெரிக்காவின் யோசனையை எதிர்ப்பதாகவும் அதற்காக காரணத்தை அச்சமின்றி வெளியிட்டு பின்னர் ஏற்படும் நிலைமைகளை மக்களின் ஒத்துழைப்புடன் எதிர் கொள்ள முடியும் எனவும் அவர் கடிதத்தில் கூறியுள்ளார்.

இந்தியாவில் பிக்குகள் மீது தாக்குதல் நடத்தப்படுவதும் ஜெனீவா சூழ்ச்சியின் ஒரு பகுதியே எனவும் குணதாச அமரசேகர மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# மாணவர்களின் கண்டுபிடிப்புக்கள் இனி சர்வதேச மட்டத்திற்கு

## உயர்கல்வியமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் அவர்களின் திறன்களை கண்டறிந்து அவற்றை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்களிலும் உள்ள மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் தமது யோசனைகளை அமைச்சில் சமர்ப்பிக்க முடியுமென்று உயர்கல்வியமைச்சின் செயலர் ஜயந்த நவரட்ன குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சுக்குக் கிடைக்கப்பெறும் யோசனைகளில் சிறந்த கண்டுபிடிப்பு மற்றும் அவர்களின் திறன்களைக் கண்டறிந்து அவற்றைச் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப் படும் என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு புதிய கண்டுபிடிப்புக்கள், யோசனைகள் மற்றும் அனுபவங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதனாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# இலங்கை மாணவர்களுக்கு தமிழகத்தில் பாதிப்பு

(சென்னை)

தமிழகத்தில் இடம்பெறுகின்ற ஆர்ப்பாட்டங்கள் காரணமாக, அங்குள்ள இலங்கை மாணவர்கள் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகதெரிவிக்கப்படுகிறது.

கல்லூரிகளின் விடுதிகள் மூடப்பட்டுள்ள நிலையில், தனியார் வீடுகளில் தங்க வேண்டிய நிலைமை இலங்கை மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

எனினும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதால் வீட்டு உரிமையாளர்கள் அவர்களை தங்க வைக்க மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் தமிழ் மாணவர்களும் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை இவ்வாறான நிலைமையில் பாதிக்கப்பட்டிருந்த 40 பிக்குகள், அரசாங்கத் தரப்பினரால் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# தேசிய அ.அட்டையில் தமிழ் மற்றும் சிங்கள மொழி அச்சிடப்பட வேண்டும்

## மகரகம வாசியால் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை தமிழ் மற்றும் சிங்களத்தில் அச்சிடப்பட வேண்டுமென்றுகோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பான மேலதிக விசா ரணைகள் எதிர்வரும் இரண்டாம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளது. மகரகம பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந் தது.

தேசிய அடையாள அட்டை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் மக்களுக்கு விநியோகிக்கப் படவேண்டிய ஒரு ஆவணம் என அவர் அந்த மனுவில் குறிப்பிட்டுள் ளார்.

தமக்குச் சிங்கள மொழியில் விநியோகிக்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையை எடுத்துக்கொண்டு சிங்கள மொழி தெரியாத வடக்கு, கிழக்கு மாகாண மக்களிடம் சென்றபோது பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுத்ததாக அவர் தனது மனுவில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுதவிர தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் அரசு மற்றும் நிர்வாக மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் பிறந்த நாட்டிலேயே இவ்வாறான சிக்கல்களுக்கு முகம் கொடுப்பது கவலைக்குரிய விடயம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ரயர் கடையில் தீ விபத்து

(மன்னார்)

வாகன ரயர் விற்பனை நிலையமொன்றில் திடீரென ஏற்பட்ட தீ விபத்து காரணமாக பல இலட்சம் ரூபாய் பெறுமதியான ரயர்களும் ஏனைய பொருட்களும் எரிந்து நாசமாகியுள்ளன.

மன்னார் செபஸ்தியார் பேராலய பிரதான வீதியிலமைந்துள்ள வாகன ரயர்க் கடையில் ஞாயிற்றுக் கிழமை இரவு 10.30 மணியளவில் திடீரென்று தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த பொதுமக்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மின்னொழுக்கு காரணமாகவே குறித்த தீ விபத்து நேர்ந்துள்ளதாக மன்னார் பொலிஸாரினால் ஆரம்பிக்கப்பட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. (அ-2)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## தேடுவது உனக்கு கிடைக்கும்



✦ வெண்ணெய் எடுக்க சூரிய உதயத்திற்கு முன்பாக கடையவேண்டும். பகலில் கடைந்தால் நன்றாகச் சேராது. அதுபோல் சிறுவயதிலேயே ஆன்மீக நெறியில் நின்று மனதைக் கடவுளிடம் செலுத்தினால்தான் இறைக்காட்சி கிடைக்கும்.

✦ மனிதனின் மனம் கடுகுப்பொட்டலம் போன்றது. அது கிழிந்து நாலாபுறங்களிலும் ஓடிவிட்டால் அதை ஒன்று சேர்ப்பது சிரமம். அதுபோல் மனம் பல வழிகளில் சென்று உலக விடயங்களோடு ஈடுபட்டிருக்கும் போது அதைக்குவித்து ஒருமுகப்படுத்துவதும் சுலபமல்ல.

✦ கடவுளைத் தேடுபவன் அவரை அடைகிறான். செல்வத்தைத் தேடுபவன் அவற்றை அடைகிறான். நீ எதைத் தேடுகிறாயோ அதையே அடைவாய்.


✦ நான் என்னும் அகங்காரம் அழியும்போது கடவுள் தோன்றுகிறார். ஒருவனது அகங்காரம் அவனது உடல் இருக்கும் வரை அவனைவிட்டு முற்றிலும் நீங்குவதில்லை.

✦ ஒளியை உணர்பவன் இருளையும் உணர்கிறான். பாவம் தெரிந்தவனுக்கு புண்ணியமும் தெரியும். குணத்தை அறிந்தவன் குற்றத்தைப் பற்றியும் அறிந்திருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்வரிசை வீரர்களின் தீவிர போராட்டத்தால் மயிரிழையில் தப்பியது இங்கிலாந்து

# தொடர் சமநிலை!



நியூசிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண டுள்ள இங்கிலாந்து அணிக்கும், நியூசிலாந்து அணிக்கு மிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 3ஆவது போட்டியில் இங்கிலாந்து பின்வரிசை துடுப்பாட்ட வீரர்களின் தீவிர போராட்டத்தினால் போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் நியூசிலாந்தை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 443 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக பீற்றர் ஃபுல்ற்றன் 136 ஓட்டங்களையும், கேன் வில்லியம்ஸன் 91 ஓட்டங்களையும், டிம் சௌதி 44 ஓட்டங்களையும் பெற்ற னர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்டீவன் ஃபின் 6 விக்கெட்டுக்களையும், ஜேம்ஸ் அன்டர்சன் 2 விக் கெட்டுக்களையும், மொன்டி பனசர், ஜொனதன் ட்ரொட் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்சை ஆடிய இங்கி லாந்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக மற் பிரயர் 73 ஓட்டங்களையும், ஜோ றூட் இறுதி விக்கெட்டாக ஆட்ட மிழந்து 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக ட்ரென்ட் போல்ட்ற் 6 விக்கெட்டுக்களையும், டிம் சௌதி 3 விக்கெட்டுக களையும், நீல் வக்னர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பொலோ ஒன் முறையில் இங்கிலாந்து அணியை மீண்டும் துடுப்பெடுத்தாட வைக்கும் வாய்ப்புக் காணப்பட்ட போதிலும், மீண்டும் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த நியூசி லாந்து அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 241 ஓட்டங் களைப் பெற்று தனது இனிங்ஸை இடைநிறுத்தியது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக பீற்றர் ஃபுல்ற்றன் 110 ஓட்டங்களையும், நியூசிலாந்தின் தலைவர் பிரென்டன் மக்கலம் 53 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 67 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக மொன்டி பனசர், ஸ்ருவேர்ட் ப்ரோட் இருவரும் தலா 2 விக்கெட்டுக் களையும், ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்டீவன் ஃபின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

481 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 5 ஆம் நாள் ஆட்டநேரம் முடியும்வரை 9 விக்கெட்டுக்களை இழந்து 315 ஓட்டங் களை மாத்திரம் பெற்றதால் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.


துடுப்பாட்டத்தில் அலஸ்ரெயர் குக் 43 ஓட்டங்களை யும், ஜொனதன் ட்ரொட் 37 ஓட்டங்களையும் லான் பெல் 75 ஓட்டங்களையும் பிறியர் 110 ஓட்டங்களையும் பெற்ற னர்.

பந்துவீச்சில் வில்லியம்சன் 4 விக்கெட்டுக்களையும் நீல் வக்னர். சௌதி தலா இரண்டு விக்கெட்டுக்களையும் புளொட் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

3 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் எந்தப் போட்டி யிலும் இரு அணிகளும் வெற்றிபெறாத நிலையில் தொடர் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

## இந்தியா உருவாக்கிய துடுப்பாட்ட வீரர்களில் தலைசிறந்தவர் சச்சின்

**- இந்திய கிரிக்கெட் சபை தலைவர்**



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் போட்டி தொடரில் சென்னையில் நடந்த முதல் டெஸ்டில் மட்டும் ஒரு இன்னிங்சில் 81 ஓட்டங்களை எடுத்தார். மற்றைய எந்த டெஸ்டிலும் அவர் குறிப்பிடத்தக்க வகையில் ஓட்டங்களைப் பெறவில்லை.

இதனால் டெஸ்ட் போட்டியில் இருந்து டெண்டுல்கர் விடை பெற இது சரியான தருணம் என்ற விவாதம் எழுந்து இருக் கிறது. இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் சபை தலைவர் என்.சீனிவாசன் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

இந்தியா உருவாக்கிய துடுப்பாட்ட வீரர்களில் தலைசிறந் தவர் சச்சின் டெண்டுல்கர். ஒவ்வொரு போட்டி தொடரையும் வைத்து அவருடைய செயற்பாடுகள் பற்றி ஆராய்வதும், விவா திபபதும் புத்திசாலித்தனமானது என்று நான் எண்ணவில்லை. மற்றவர்களிடம் இருந்து டெண்டுல்கர் வேறுபட்டவர்.

இது என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும். தனிப்பட்ட கருத்தும், தேர்வு விஷயமும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில் லாததாகும். டெண்டுல்கர் ஓய்வு குறித்து நான் கருத்து சொல் வது நியாயமாகாது. ஏனெனில் நான் தேர்வாளர் கிடையாது. டெண்டுல்கர் குறித்து மற்றவர்களும் விவாதிப்பது சரியாகாது என்று நான் நினைக்கிறேன்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந் திய அணி சாதனை வெற்றியை பெற்றிருப்பது பாராட்டுக்குரி யது. இந்திய அணியின் வெற்றியை பார்க்க மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. எப்பொழுதும் இந்திய அணியின் மீது எங்க ளுக்கு நம்பிக்கை உண்டு. இந்திய அணியில் இடம் பிடித்து இருந்த முன்னணி வீரர்கள் சிலர் ஓய்வுபெற்றதால், இளம் வீரர்களுடன் அணி வலுப்பெற்று வரும் காலம் இது என் பதை நாங்கள் புரிந்து வைத்திருக்கிறோம்.

இருப்பினும் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறும் தென்னாபிரிக்க பயணம் மற்றும் அதைத்தொடர்ந்து நடக்கும் நியூசிலாந்து தொடர் ஆகியவற்றில் நமக்கு சோதனை காத் திருக்கிறது. இவ்வாறு என்.சீனிவாசன் கூறினார்.

## தொடர்ந்தும் மிஸ்பா தலைமையில் பாக்.அணி...?



பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக்கின் தலைமைப் பதவிக்கு ஆபத் தில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற் கான உறுதிமொழி பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷாகா அஷ்ரப் இனால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

38 வயதான மிஸ்பா உல் ஹக் பாகிஸ் தான் அணியின் டெஸ்ட், ஒருநாள் சர்வ தேசப் போட்டி அணிகளின் தலைவராகச் செயற பட்டு வருகிறார். அவரது வயது காரணமாக அவரது அணித்தலைமை தொடர்பாகக் கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன.

இந்நிலையில் தென்னாபிரிக்க அணிக் கெதிரான 5ஆவது போட்டிக்கு முன்னதாக வீரர்களை சந்தித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷாகா அஷ்ரப் இந்த உறுதி மொழியை மிஸ்பா உல் ஹக் இற்கு வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பி யன்ஸ் கிண்ணப் போட்டிகளில் பாகிஸ்தான் அணியின் தலைவராக மிஸ்பா உல் ஹக்கே தெரிவுசெய்யப்படுவார் எனவும், எனவே அணித்தலைமை குறித்தும், அணியில் அவரது இடம் குறித்தும் மிஸ்பா உல் ஹக் கவலையடையாது அணியின் திறமை வெளிப்பாடுகள் குறித்தும் கவனஞ் செலுத்து மாறு ஷாகா அஷ்ரப் தெரிவித்ததாகத் தெரி விக்கப்படுகிறது.

எனினும் அணியிலுள்ள எந்தவொரு வீரரும், அவர் சிரேஷ்ட வீரராகவோ அல்லது கனிஷ்ட வீரராகவோ இருந்தாலும், அணி யில் அவர்களது இடத்தை நிரந்தரமாகக் கருதக்கூடாது என அவர் எச்சரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர் போராட்டத்தின் எதிரொலி;

## இரண்டு இலங்கை வீரர்கள் அவுட்?

மாணவர்களின் தொடர் போராட்டங்களினால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் இருந்து இரண்டு இலங்கை வீரர்கள் நீக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சென்னையில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்களை விளையாட அனுமதிக்கமாட்டோம் என்று மாணவர்கள் கூட்டமைப்பு ஏற்கனவே எச்சரித்திருந்தது. இதனால் சென்னையில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டிகளை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று ஐ.பி.எல். அமைப்பை மற்ற அணிகளின் உரிமையாளர்கள் வற்புறுத் தினார்கள். ஆனால் போட்டிகளை சென்னையில் இருந்து வேறு இடத்துக்கு மாற்ற இயலாது என்று ஐ.பி.எல். அமைப்பை சேர்ந்த நிர்வாகியும், இந்திய கிரிக்கெட் சபை நிர்வாக செயலா ளரும் திட்டவட்டமாக அறிவித்துவிட்டனர்.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் என்.சீனிவாசன் மற்றும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் சென்னை பொலிஸ் அத்தியட்சகரைச் சந்தித்தனர். இந்த சந்திப்பின்போது சென்னையில் ஐ.பி.எல். போட்டிகளை நடத்துவது குறித்தும், அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மாணவர்கள் போராட்டம் வலுவடைந்துவரும் நிலையில் சென்னையில் இலங்கை வீரர்களை கொண்டு போட்டி நடத்துவது குறித்து பொலிசாருடன் என்.சீனிவாசன் ஆலோ சித்தார்.

சட்டம்-ஒழுங்கு சீர்குலையாமல் போட்டிகளை நடத்த பொலிசார் சில ஆலோசனைகளை வழங்கியதாகவும், அவற்றை ஐ.பி.எல். ஆட்சி மன்ற குழுவில் கலந்து ஆலோசித்து முடிவு செய்வதாக அவர் கூறியதாகவும் பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலையில் இந்த பிரச்சினையில் தீர்வு ஏற்படும் வகையில் தங்கள் அணியில் உள்ள 2 இலங்கை வீரர்களை நீக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முடிவு செய்துள்ளது. ஐ.பி.எல். தொடர் முழுவதும் விளையாடாமல் இருக்கும் வகையில் இந்த 2 பேரையும் அணியில் இருந்து இந்த சீசனுக்கு நீக்குவது என்று முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலை அணிகளிற்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் 17 வயதுப் பிரிவினரிற்கான இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயமும் மோதின. இப்போட்டியில் 24-15 என்னும் புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றதன் மூலம் 17 வயதுப்பிரிவு வலைப் பந்தாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி இவ்வாண்டுக்கான சம்பியனாக தெரிவாகியது. (22)

# புத்தக வெளியீட்டில் ரகளை மண்டபம் மீது தாக்குதல்

(கரவெட்டி)

ஆவரங்காலில் உள்ள திருமண மண்டபம் மீது நேற்று இரவு 8.00 மணியளவில் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் குறித்த மண்டபத்தில் புத்தக வெளியீடு ஒன்று இடம்பெற்றது.

அக்குறித்த புத்தகத்தில் வெளியான விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நூற்றுக்கு மேற்பட்டோர் நேற்று இரவு 8 மணிய ளவில் அணிதிரண்டு ஆர்ப்பாட்டம் செய்ததோடு அம் மண்டபத்தில் பல இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள், இரு மோட்டார் சைக்கிள், கதிரைகள் வர்ண விளக்குகள் என்பவற்றை உடைத்து நொருக்கியுள்ளனர். அதே வேளை இன்றைய தினம் அங்கு நடைபெற இருந்த திருமண நிகழ்விற்கு சமையல் செய்ய வந்தவர்கள் மீதும் அக்குழுவினர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இச் சம்பவத்தையடுத்து அங்கு வந்த அச்சுவேலி பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரரை கலைந்து செல்லுமாறு பணித்ததுடன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அப்புத்தகத்தில் எந்தெந்த தொழில்களை யார் மேற்கொள்ள வேண்டும் என்ற விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் இதனாலேயே இத்தாக்குதல் சம்பவம் மேற் கொள்ளப்பட்டதாகவும் கூறப்பட்டது. (எ-11,24)

## ராவணா சக்தி...

செயலாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அபிவிருத்தியடைந்து வருவது குறித்து பொறுத்துக் கொள்ள முடியாத இந்தியா, பல்வேறு தந்திரங்களை பயன்படுத்தி, இலங்கையை சீர்குலைக்க எடுக்கும் நடவடிக்கையை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் கூறியுள்ளனர். இலங்கையின் விளையாட்டு வீரர்கள் பணத்திற்கு அடிபணிந்து, செயற்படாது நாட்டின் நலன் கருதி செயற்பட வேண்டும். அரச சார்பற்ற அமைப்புக்கள் நாட்டை அழிவு பாதைக்கு இட்டுச் செல்லும் விதத்தை நாட்டுக்கு மக்களுக்கு விளக்குவதற்காக நாடு முழுவதும் ராவண சேனா அமைப்பை விரிவுபடுத்த உள்ளதாகவும் தேரர் கூறியுள்ளார். (எ-11)

## பி.பி.சி சேவை...

வருந்துகிறோம், ஆனால் எங்களது நிகழ்ச்சிகளை குறிவைத்து இது போன்ற இடைஞ்சல்கள் நடப்பது. அந்த நேயர்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை பாரிய அளவில் மீறுவதான ஒரு செயல். இதை பிபிசி அனுமதிக்க முடியாது என பீட்டர் ஹோர க்ஸ் தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

பீட்டர் ஹோரக்ஸ் மேலும் கூறுகையில், இது போன்ற நிகழ்ச்சித் தடங்கல்கள் கடந்த வாரம் மார்ச் 16, 17 மற்றும் 18ம் திகதிகளில் நடந்தபோது இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்துடன் பேசினோம். அவர்கள் எங்களுடன் கொண்டிருக்கும் ஒலிபரப்பு ஒப்பந்தத்தை மீறும் ஒரு செயல் இது என்றும் அவர்களுக்கு எச்சரித்தோம்.

ஆனால் மார்ச் மாதம் 25-ம் தேதி திங்கட்கிழமை மற்றுமொரு தடங்கல் சம்பவம் நடந்ததால், இந்தச் சேவையை உடனடியாக இடைநிறுத்துவதைத் தவிர பிபிசிக்கு வேறு வழிகள் இல்லாமல் செய்து விட்டது என்றார்.

பிபிசியின் நிகழ்ச்சிகள் எவை பற்றியும் இலங்கை ஒலிபரப்புக் கூட் டுத்தாபனத்துக்கு குறிப்பான புகார்கள் இருந்தால், பிரச்சினைகளை எங்களிடம் நேரடியாகக் கொண்டு வர வேண்டும் என்று நாங்கள் கோரியிருந் தோம்.

எங்களால் ஏற்க முடியாதபடிக்கு ஒலிபரப்பில் நேரடியாக இடைஞ்சல்கள் செய்வது மற்றும் நேயர்களை ஏமாற்றுவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டிருந்தோம் என பீட்டர் ஹோரக்ஸ் தெரிவித்துள்ளார்.

இது போன்ற நடவடிக்கை ஒன்றை பிபிசி 2009 ஆண்டில், அதன் சேவைகள் இடைஞ்சலுக்கு உள்ளான போதும் எடுத்திருந்தது. (எ-11)

## ஜோர்தான் கப்...

வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் வன்னியில் நடைபெற்ற யுத்தத்தினால் முற்றுமுழுதாக சேதமடைந்த இக்கப்பல், சுற்றுலா பொருளாக மாறியிருக்கின்றது.

தற்போது இந்தக் கப்பலை முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து அகற்றுவதற்கு படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதற்கான இராணுவத்தின் விசேட பொறியியல் பிரிவு வரவழைக்கப்பட்டு இதனை எவ்வாறு அகற்றுவதென ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேபோன்று இயந்திரக்கோளாறு காரணமாக பழுதடைந்து விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்ட அரிஸ்மோனா கப்பலும் முல்லைத்தீவு வட்டுவாகல் கடல் பகுதியில் இருந்தது.

யுத்தத்திற்கு பின்னர் அரிஸ்மோனாவும் அங்கிருந்து படையினரால் அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஐ.பி.எல் சென்னை போட்டிகளில்...

செய்திக் குறிப்பு கூறுகிறது.

முன்னதாக, இந்தியன் பிறிமியர் லீக் (ஐ.பி.எல்) கிரிக்கெட் போட்டிகளில் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எவரும் கலந்து கொண்டால் அப்போட்டிகள் சென்னையில் நடைபெறுவதற்கு அனுமதியளிக்கப்படாது என தமிழக முதல்வர் ஜெயலலிதா திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

ஐ.பி.எல் போட்டிகளில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள், நடுவர்கள், அதிகாரிகள் என இலங்கையைச் சேர்ந்தவர்கள் யாரும் கலந்து கொண்டால், தமிழகத்தில் அப்போட்டிகள் நடைபெறுவதற்கு அனுமதியளிக்க முடியாது எனத் தமிழக முதல்வர், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெறும் ஐ.பி.எல் போட்டிகளில் இலங்கை வீரர்கள் எவரும் கலந்து கொள்ளக்கூடாது என வலியுறுத்தி சில மாணவர் குழுக்கள் கையெழுத்தியக்கம் தொடங்கியிருக்கும் நிலையிலேயே அவர் இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அவரது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக நான் மீண்டும் இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன். ஐ.நா.மனித உரிமை கவுன்சிலில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பாக தமிழக மக்களின் ஒட்டுமொத்த எண்ணங்களை வெளிப்படுத்தி மிகவும் உணர்ச்சிகரமான பிரச்சினையாக இது மாறியுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில், வரும் ஏப்ரல் மாதம் ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகள் 2013 ஏப்ரல் 3-ம் திகதி முதல் தொடங்கி மே 26 வரை நடக்கின்றன.

இந்தப் போட்டிகளில் இலங்கைக் கிரிக்கெட் வீரர்களும் இடம் பெற்றுள்ளனர் என்பதை நான் அறிந்து கொண்டுள்ளேன்.

தமிழர்களுக்கு எதிராக இலங்கை இராணுவத்தினர் நடத்திவரும் இன அழிப்பு அக்கிரமங்கள் குறித்து நீங்கள் அறிவீர்கள். ஆயிரக்கணக்கான அப்பாவிப் பெண்களும், குழந்தைகளும், மக்களும் கொல்லப்படுவது குறித்து தங்களுக்குத் தெரிந்திருக்கும். இது போன்ற மனித உரிமை மீறல் விவகாரங்களால் இலங்கை பல உலக நாடுகள் மற்றும் ஊடகங்கள் மத்தியில் கண்டனத்துக்கு உள்ளானது.

இலங்கையரசின் இத்தகைய தமிழின அழிப்புச் செயல்கள், தமிழகத்தில் உள்ள தமிழர்களின் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை இராணுவத்தின் இன அழிப்பு விவகாரங்கள் குறித்த புகைப்படங்கள், வீடியோ ஆதாரங்கள் மேலும் மேலும் வெளிவர, வெளிவர தமிழகத்தில் உண்ணாவிரதப் போராட்டங்களும், தீக்குளிப்புக்களும், பெரியளவிலான போராட்டங்களும் அதிகரித்துக் கொண்டுள்ளன.

தமிழக அப்பாவி மீனவர்கள், இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது குறித்து, அடிக்கடி தங்களுக்கு கடிதம் எழுதி வருகின்றேன். தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதும், பொருள் இழப்பும், உயிர் அச்சுறுத்தலும் சர்வ சாதாரண விடயமாகிவிட்டது.

இத்தகைய நடவடிக்கைகளால், இலங்கைப் படைகளுக்கு எதிரான உணர்வுபூர்வமான எதிர்ப்பு மக்களிடம் பரவியுள்ளது.

தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளும் இத்தகைய விவகாரங்களில் தங்கள் குரலை உயர்த்தி வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் இலங்கை அரசுக்கு எதிரான மக்களின் மனோநிலையை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

எனவே, ஐ.பி.எல் போட்டிகளில் இலங்கை வீரர்கள் விளையாடுவது தவிர்க்கப்பட வேண்டும். அதிகளவிலான போட்டிகள் சென்னையில் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகள் குறித்து ஏற்கெனவே தமிழகத்தில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

எனவே, இத்தகைய பின்னணியில், இலங்கை அரசுக்கு எதிரான தமிழக மக்களின் எதிர்ப்புணர்வை அனுசரித்து, மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து, தமிழக அரசு மத்திய அரசிடம் கேட்டுக் கொள்வது... தமிழகத்தில் நடைபெறும் ஐ.பி.எல் போட்டிகளில் இலங்கை கிரிக்கெட் வீரர்களோ, அதிகாரிகளோ, நடுவர்களோ பங்குபெறக் கூடாது என்பதுதான்.

இதனை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு மத்திய அரசு அறிவுறுத்த வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதையடுத்து தற்போது சென்னையில் நடைபெறும் ஐபிஎல் போட்டிகளில் இலங்கை வீரர்கள் 13 பேர் விளையாட இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வட்டு தெற்கு மக்களாகிய எமக்கு மின் இணைப்பு, நந்நீர் விநியோகம், வடிகால் அமைப்பு என்பவற்றை நிவர்த்தி செய்து தரும்படி தெரியப்படுத்திய போது எதுவித தாமதமின்றி அவற்றைத் பெற்றுத் தந்தமைக்கு

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ **டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும்,

பாராளுமன்ற உறுப்பினர் **முருகேசு சந்திரகுமார்** அவர்களுக்கும்,

வலி.மேற்கு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி,

பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவருமாகிய

**சிவகுரு பாலகிருஸ்ணனுக்கும் (ஜீவன்),**

வட்டுக்கோட்டை சமூக சேவையாளரும்,

வட்டுக்கோட்டை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளருமான

**க.சி.தவராஜா** ஆகியோருக்கு

கொட்டிசுட்டி மக்களாகிய நாம் எமது கோடான கோடி நன்றிகளைத் தெரிவிப்பதுடன், மேலும் எமது கிராம மக்களின் பிரச்சினைகள் நிவர்த்தி செய்துதரப்படும் எனும் அதீத நம்பிக்கையுடன் மீண்டும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கொட்டிசுட்டி,**
**வட்டு.தெற்கு மக்கள்.**

(2256)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவும் சீனாவும் ஆதரவு...

நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெளிநாட்டு அரசாங்கங்கள் பலவற்றில் புலம்பெயர்ந்த தமிழர்கள் மூலம் செல்வாக்குச் செலுத்திக் கொண்டு விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் அரசாங்கத்துக்கு நெருக்கடிகளை கொடுத்து வருகின்றனர்.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சர்வதேச ஊடகங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் தொடர்ந்து பரப்புரைகளை மேற்கொள்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்களின் நன்கொடைகளை சர்வதேச நிறுவணங்கள் சில வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் பரப்புரைகளால் நிறுவனங்கள் சில தவறாக வழிநடத்தப்படுகின்றன. ஐக்கிய நாடுகள், சபை மனித உரிமைகள் ஆணைக் குழு போன்ற சர்வதேச அமைப்புக்கள் கூட, சக்திவாய்ந்த நாடுகளின் செல்வாக்குக்கு உட்பட்டுள்ளன.

கனடா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளில் புலம்பெயர் தமிழர்கள் அந்நாட்டு அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்றனர். 300 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பிரித்தானியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்டின் தொகுதியில் 3 ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் உள்ளனர்.

இந்தியாவின் பிரதமர் ஒருவரையும், ஆயிரம் இந்திய அமைதிகாக்கும் படையினரையும் விடுதலைப் புலிகள் கொலை செய்த போதிலும், தமிழகத்தின் அழுத்தங்கள் காரணமாக அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் இழைத்த கொடுமைகளை அமெரிக்கா, கனடா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகள் நன்கு அறிந்து வைத்துள்ள போதிலும், அவை தொடர்பில் மௌனமாக இருக் கின்றன. விடுதலைப் புலிகளை தோற்கடித்ததை அமெரிக்காவும், ஏனைய நாடுகளும் வரவேற்க வேண்டும். ஒரு நாடு வேறு வேறு நாடுகளை வேறு வேறு விதமாக அணுக முடியாது.

ஜெனிவாத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளாதுபோனால், இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என மக்கள் பேசிக் கொள்வதாக சில செய்தி களை படித்தேன். ஆனால் அவர்கள் தனிப்பட்ட நாடுகளை இலக்கு வைத்து செயற்பட முடியாது. இலங்கைக்கு ஆதரவான நாடுகளும் உள்ளன.

ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் எமக்கு ஆதரவாக உள்ள நிலையில், அமெரிக்காவால் எம் மீது பொருளாதாரத் தடை விதிப்பது சாத்திய மில்லை என கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)


## மணல் மண் வேண்டுமா?

- கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
- இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
- உங்கள் இடத்திற்கே கொண்டு வருகிறோம்.

**4 1/2 டிராக்டர் 20,500/=**

தொடர்பு: ராம்

**072 63 78 546**

(C-2809)





## திருமண வாழ்த்து

27.03.2013 புதன்கிழமை அன்று
**அளவெட்டி தவளக்கிரி
முத்துமாரி அம்மன் ஆலயத்தில்**
இல்லற வாழ்வில் இணையும்
தம்பதிகள்

**செ.சாரங்கன் உ.ரஜனா**
(கிராம அலுவலர்)

என்றும்
நல்லதொரு மணவாளனாய்
நாட்டிற்கு நற்சேவகனாய் எல்லோரும்
ஏந்திப் பாடும் காவலனாய் காண
நீ வாழவும் பதியவளைக் கணமேனும்
பிரியாத துணையவனாய்
பலபேறும் பெற்று பாங்குடனே
வாழ வாழ்த்துகின்றோம்.

திரு.க.கணேசதாஸ் (கிராம அலுவலர்)
திருமதி.க.சர்வேஸ்வரி (விவாகப் பதிவாளர்)
குடும்பத்தினர்

(சி-2807)





# திறப்பு விழா அழைப்பு
# கோபுரம் சில்க்ஸ்

நிகழும் மங்களகரமான நந்தன வருடம் பங்குனி மாதம் 14ஆம் நாள்
(27.03.2013) புதன்கிழமை பகல் 9.10 முதல் 10.13 மணிவரையுள்ள
சுபமுகூர்த்த வேளையில் எம்மால் ஸ்தாபிக்கப்பட்ட
**கோபுரம் சில்க்ஸ்** எனும் ஸ்தாபனம்

**உயர்திரு பூ.சசிதரன் தம்பதியரால்**
(உரிமையாளர், ராசி கலக்ஷன், நல்லி சில்க்ஸ்)
ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

திருமண வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடவைகள், வேஷ்டிகள், சால்வைகள், சேட் வகைகள் இன்றைய நவநாகரிகத்திற்கு ஏற்ற வகையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஸ்கேட் & பிளவுஸ், சூட்டிங்,சல்வார் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகளின் மகத்தான தெரிவு! மலிவு விலையில்!!

வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
நலன்விரும்பிகள் அனைவரையும் இந்நிகழ்வில்
கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.






70, நவீன சந்தை
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

ந.உதயன்
(உரிமையாளர்)


## பொதுநலவாய...

விட்டதாக, லண்டனில் உள்ள பொதுநலவாய செயலகத்தின் பெயர் குறிப்பிட விரும்பாத உயரதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி குறிப்பிட்ட இந்திய ஊடகமான சண்டே கார்டியன் செய்தி வெளியிட்டுள்ளது.

இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் மனிதவுரிமை நிலைமைகள் மோசமடைந்துள்ளமைக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில், இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதை பல நாடுகளின் அரசியல் தலைவர்களும் தவிர்த்துக் கொள்ள வாய்ப்புள்ளது.

இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என கனடாவின் ஸ்டீபன் ஹார்பர் அரசாங்கம் உறுதியாக முடிபு எடுத்து விட்ட நிலையில், இம் மாநாட்டைப் புறக்கணிக்குமாறு அதிகளவு நிதியுதவிகளை வழங்கி வரும் கரீபியன் நாடுகளுக்கும் கனடா அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது.

அதேபோன்று பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளான பிரித்தானியா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் அரசியல் தலைவர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதைத் தவிர்த்து, அதற்கு பதிலாக, பிரதித் தலைவர்கள் அல்லது வெளி விவகார அமைச்சர்களை அனுப்பி வைக்கலாம்.

இவ்வாறு இடம்பெற்றால் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் குறைந்து போய்விடும்.

இந்த நிலையில், பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பிரித்தானிய மகாராணி கலந்து கொள்ளா விட்டால் அது இலங்கை ஜனாதிபதிக்கு பெரும் பின்னடைவாக இருக்கும்.

ஏனெனில் உலகெங்கும் இடம்பெற்ற பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாடுகளில் பிரித்தானிய மகாராணி கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார் என இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகள் நல்லாட்சி, மனிதவுரிமைகளுக்கு மதிப்பளித்தல், கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் மற்றும் சட்டத் தின் ஆட்சி போன்றவற்றை நடைமுறைப் படுத்த வேண்டும் என பிரித்தானிய மகாராணி இரண்டாவது எலிசபெத் அண்மையில் வலி யுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை; அடுத்த மாதம் நடைபெறும் பொதுநலவாய அமைச்சர்கள் மட்ட செயற்பாட்டுக்குழு கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரம் இடம்பெறவில்லை என பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா அண்மையில் தெரிவித்திருந்தமை தெரிந்ததே. (எ-11)

## குழந்தைகள்...

இவ்வாறான அறிகுறிகள் தென்படும் போது உடனடியாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற வேண்டும் எனவும் இல்லையேல் இந் நோய்த் தொற்று பிள்ளைகளின் இதயத்தை பாதிக்கும் எனவும் வைத்திய நிபுணர் க.அருள்மொழி மேலும் தெரிவித்துள்ளார்.(ந)

## கச்சதீவை...

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதற்கும் துன்புறுத்தப்படுவதற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவரை, அதிகாரியை நேரில் வரவழைத்து, இந்தியாவின் வலுவான எதிர்ப்பை தெரிவிக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பிரச்சினை குறித்து இந்தியா வலுவான நடவடிக்கைகளை ராஜதந்திர முறையில் இனிமேலாவது மேற்கொள்ள வேண்டும் என மத்திய அரசை அவர் கேட்டுக் கொண்டார்.

கச்சதீவு இலங்கை வசம் ஒப்படைக்கப்பட்டதன் காரணமாகத்தான் தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல் இன்றளவும் தொடர்கிறது எனவும் கூறியுள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.